Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

வாரவெளியீடு

THINAKKATHIR WEEKLY දිනක්කදිර්

மட்டு நகரில்
ஒப்செட் அச்சுமுறையை முதன்முதலில்
அறிமுகப்படுத்தியவர்கள்
ஈஸ்டன்கிராபிக்ஸ்
தற்போது 'தினக்கதிர்' அலுவலகத்தில்
இயங்குகிறது.
சகல விதமான அச்சு வேலைகளுக்கும்
உடன் நாடுங்கள்
இல.155,திருமலை வீதி,
மட்டக்களப்பு. T.P.065 22554

ஒளி - 02 - கதிர் - 288 03-02-2002 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள் - 16 விலை - ரூபா 10/=

# யாழ்ப்பாணம் கச்சேரியில் இம்முறை சுதந்திரதின கொண்டாட்டம் இல்லை!

(சிறப்பு நிருபர்)

யாழ்ப்பாணம் கச்சேரியில் இம்முறை சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் எதுவும் நடைபெறாது என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மீனவர்கள் சுதந்திரதினக் கொண்டாட்டம் நடைபெற அனுமதியோம் எனக் கூறியுள்ளதாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்றுடன் நான்காவது நாளாக மீன்பிடித் தடைகளை நீக்குமாறு கோரி மீனவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் நான்கு நாட்களாக யாழ். கச்சேரி இயங்க முடியாத நிலையில் பூட்டப்பட்டுக் கிடக்கிறது.

இரு தினங்களுக்கு முன்னர் மீனவர்கள் தமது போராட்டத்தை யாழ். பிரதேச செயலக வாசலுக்கும் விரிவுப்படுத்தியதையடுத்து, நேற்றுடன் இரண்டாவது நாளாகப் பிரதேச செயலகமும் இயங்க முடியாமல் பூட்டப்பட்டுள்ளது.

இவற்றின் காரணமாக யாழ்ப்பாணத்தின் சிவில் நிர்வாகச் செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபடும் மீனவர்கள் நாளையும் தமது போராட்டம் தொடரும் எனவும் யாழ். கச்சேரியில் சுதந்திரதினக் கொண்டாட்டம் எதுவும் இடம்பெறத் தாம் அனுமதிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

யாழ். கச்சேரியில் ஸ்ரீ லங்கா தேசியக் கொடியை ஏற்றவும் தாம் அனுமதிக்கப்போவதில்லை என அவர்கள் சூளுரைத்துள்ளனர்.

நேற்று நான்காவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களை கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா,சிவாஜிலிங்கம் ஆகியோரைச் சந்தித்து உரையாடினர். மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக இவர்கள் நேற்றுப் பிரதமருடன் தொலைபேசியில் உரையாடியதாகவும் தெரியவருகிறது.

நாளை சுதந்திரதினக் கொண்டாட்டத்தை நடாத்தவிடாமல் மீனவர்கள் நடத்தவுள்ள போராட்டத்துக்குத் தாம் பூரண ஆதரவு வழங்குவதாக பா.உ. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

## தடையை நீக்கு! கைதிகளை விடுவி!! மட்டு-அம்பாறையில், இன்று பேரணி

(நமது நிருபர்)

அரசே சமாதானப் பேச்சு வார்த்தைக்குத் தடையாகவுள்ள விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கு, சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலைசெய், இந்திய அரசே எமது பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கு போன்ற கோரிக்கைகளை முன்வைக்கும் சமாதானப் பேரணி இன்று காலை மட்டக்களப்பு, அம்பாறையில் நடைபெறுகிறது.

இப்பேரணி இரண்டு பிரிவுகளாக மட்டு. காந்தி சதுக்கம் வரை வந்தடையவுள்ளது.

களுவாஞ்சிகுடி பட்டிருப்பு மற்றும் படையினர் கட்டுப்பாடற்ற பகுதிகளிலுள்ள மக்களுடனான பேரணியாக தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் வெள்ளிமலை தலைமையில் களுவாஞ்சிக்குடியிலிருந்து மட்டு. காந்தி சதுக்கம் வரை ஒரு பிரிவும்,

மற்றைய பிரிவு, பா.உ. தங்கவடிவேல் தலைமையில் வந்தாறுமூலை,கிரான்,செங்கலடி, சித்தான்டி போன்ற பகுதி மக்களை உள்ளடக்கியதாக வந்தாறுமூலை

(16ம் பக்கம் பார்க்க)

## ஆட்டம் காண்கிறது கல்லடிப் பாலம்

## திறக்கப்படுமா சிறைக்கதவுகள்...?




PUBLIC LIBRARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தினக்கதிர்**

த.பெ. இல: 06
155, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 22554
E-mail :- tkathir@sltnet.lk

## தொடர்ச்சியாகப் போராட வேண்டும்!

காரணமேதுமின்றிக் கைது செய்யப்பட்டு, வகைதொகையின்றி சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள எமது உறவுகள் மீண்டும் ஒருமுறை தமது விடுதலைக்காய் குரலெழுப்பி ஓய்ந்து போயுள்ளன.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்கின்ற மோசமான வதைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, மட்டக்களப்பு, அநுராதபுரம், களுத்துறை, பூசா, பதுளை, போகம்பர ஆகிய சிறைச்சாலைகளில் அடைத்துவைக்கப்பட்டுள்ள சுமார் ஐநூறு பேர், கூட்டாக அடையாள உண்ணாவிரதம் இருந்து தமது விடுதலைக்கான குரலை எழுப்பியுள்ளனர்.

இவர்களுள் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் மட்டும், ஒரு பட்டதாரி மாணவன் மற்றும் நான்கு மாணவர்கள் ஒரு பெண் உட்பட நாற்பத்திமூன்றுபேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவருமே, நீண்டகாலமாக, விசாரணைகள் ஏதும் நடத்தப்படாமல், வழக்குகள் தள்ளிப் போடப்பட்டு வேண்டுமென்றே சிறையிலடைத்து வைக்கப்பட்டுள்ளவர்கள்.

சரியான குற்றச்சாட்டுக்கள் ஏதுமின்றி, வெறும் சந்தேகம் என்ற காரணத்துக்காக மட்டும் கைது செய்யப்பட்டு, சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, சிங்களத்தில் தயாரிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் வாங்கி, இவர்கள் சிறையிலடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அரசின் இந்தப் பயங்கரவாதச் செயலைக் கண்டுகொள்ளாத சர்வதேச சமூகம், இத்தகைய கொடுமைகளுக்கு எதிராகப் போராடிவரும், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பு என்று கூறிவருகிறது.

இந்த உள்நாட்டு, சர்வதேச அநீதிகளை வெல்ல வேண்டுமாயின், தமிழ்ச் சமூகம் கூட்டாக அணிதிரண்டு வீதிகளில் இறங்கி தமது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க வேண்டும்.

இத்தகைய ஒரு போராட்டம் தன்னிச்சையாக எழுந்துவிடாது. கடந்த தேர்தலில், தமிழ் மக்களிடையே மேற்கிளம்பிய தேசிய எழுச்சியைப் பயன்படுத்தி பாராளுமன்றம் சென்ற எம் தமிழ் அரசியல் தலைமைகளே, இத்தகைய ஓர் மக்கள் எழுச்சியை காலத்தின் தேவையுணர்ந்து முன்நின்று நடாத்த வேண்டும்.

இன்று மட்டு-அம்பாறை மாவட்டத்தில் வெகுஜன ஒன்றியத்தின் ஏற்பாட்டில், ஒரு பாதயாத்திரை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இது ஒரு நல்ல ஆரம்பமாகக் கொள்ளப்பட்டு, தமிழ் மக்களுடைய ஆணையைப்பெற்ற தமிழ் அரசியல் தலைமைகளால் தொடர்ச்சியான மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்.

தமிழ் மக்களின் மீது அநீதியைத் திணிக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு, தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுவிக்கப்பட்டு, சமாதானத்துக்குப் பிரதான தடையாக இருக்கும் புலித்தடை நீக்கப்படும்வரை, தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்.

## இன்றைய சிந்தனை!

### வருமுன்னர் காக்கவும்

'வருமுன்னர் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்' என்பது குறள்.

தன்பால் குற்றம் வருவதற்கு முன்பே தன்னைக் காத்துக் கொள்ளாதவன் வாழ்க்கை, தீயில் அகப்பட்ட வைக்கோல் குவியலைப் போன்று அழிந்துவிடும் என்பது இதன் கருத்து.

அத்துடன் ஒவ்வொருவரும் தமது வாழ்வில் எதிர்ப்புகளையும், கஷ்டங்களையும் முறியடித்து, வெற்றிபெற முன்னெச்சரிக்கையுடனும், முன் ஆயத்தத்துடனும் செயற்பட முயல வேண்டும் என்பதையும் இக்கூற்று சிந்தை கொள்ளச் செய்கிறது.



கல்லடிப் பாலத்தின் முழுமையானத் தோற்றம்.

# ஆட்டம் காண்கிறது கல்லடிப் பாலம்

கிழக்கின் ஒரு முக்கிய தொடர்பு மையமாக விளங்குவது 1924ம் ஆண்டில் பிரித்தானிய மகாராணி விக்ரோறியாவின் ஆட்சிக்காலத்தில் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட மட்டக்களப்பு கல்லடிப் பாலமாகும்.

இப் பாலமே மட்டக்களப்பு வாவியினைக் கடந்து மட்டக்களப்பு நகரிலிருந்து அப்பால் கல்லடி முதல் களுவாஞ்சிகுடி, கல்முனை போன்ற இடங்களுக்குச் செல்ல இருக்கும் ஒரே வழி. சுமார் 80 வருட வரலாற்றைக் கொண்ட இப்பாலம் இன்னும் எவ்வளவு காலம் ஆட்டம் காணாதிருக்கும் என்ற சந்தேகத்துடனேயே உள்ளது.

**தீரன்**

இதற்கு ஒப்பான மன்னம் பிட்டிப் பாலம் சற்றுத் தளர்வுக்குட்பட்டுவிட்டது. இப் பாலம் கூட, பல வருடங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தின் வடக்கையும், தெற்கையும் இணைப்பதில் முன்முர முயற்சி எடுக் கப்பட்டு புகையிரதப் போக்குவரத்து நடாத்தப் பட்டிருக்குமானால் அந்நிலையை விரையில் எய்தியிருக்கும்.


மட்டக்களப்பின் அதியுன்னதமான பொக்கிசங்களாகப் பேணப்பட வேண்டிய இப் பாலம் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக எந்த விதப்பராமரிப்புமின்றி படையினரின் வெறும் போக்கான பாதுகாப்புடனேயே இருந்து வருகிறது.

இவ் ஆற்றைச் சுற்றியுள்ள பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் மீன்பிடியில் ஈடுபடுவதன் மூலமே வாழ்க்கை நடாத்தி வருகின்றன. இவர்களது பார்வையே மற்றுமொரு பராமரிப்பாகும்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பராமரிக்கப்பட வேண்டிய இப்பாலம் ஏன் கவனத்தில் எடுக்கப்படாதிருந்தது என்றால் நாட்டின் போர்ச் சூழல்தான் காரணம்.

கடந்த பல வருடங்களாகப் பராமரிப்பின்றி இருந்த இப் பாலத்தின் கொட்டுகள் என்றழைக்கப்படும் 14 தூண்களில் அதிகமானவை வெடிப்புக்களுக்குள்ளாகி வரு கின்றன, இவற்றில் ஒன்றின், ஒருபகுதி உடை ந்து விழுந்து விட்டது. காலப்போக்கில் இக் கொட்டுகள் யாவும் உடைந்து ஒரு சில வருடங்களில் கல்லடிப் பாலமும் ஆட்டத்திற்குள்ளாகக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

பல நூற்றுமற்றா நீளமான இப் பாலம் வருடாவருடம் [illegible]டும் இப்பாலத்தின் சிறிது தூரத்தில் நிரந்தரமாக இருந்த ஒரு குழுவினரால் தார் பூசப்பட்டு, உயர்த்திகள் மூலம் உயர்த்தல்களுக்குள்ளாக்கப்பட்டு கிறீஸ் மற்றும் ஒயில் போன்றவற்றின் மூலம் மீள் திருத்தம் மேற்கொள்ளப்படுவது வழக்கம். ஆனால் 15 வருடகாலமாக இந்த நடைமுறை நிறுத்தப்பட்டுவிட்டது. இதுவே பாலத்தின் இந் நிலைமைக்குக் காரணம் என இவ்வாற்றில் மீன்பிடியிலீடுபடும் யோசப் என்பவர் தெரிவித்தார்.



வெடிப்புக்குள்ளான பகுதியை படத்தில் காணலாம்.

இந்தப் பாலத்தின் ஊடான போக்குவரத்துக்கள் கட்டுப்பாடற்ற விதத்தில் மேற்கொள்ளப்படுகிறது. இப்பொழுதெல்லாம் சிறிய தான ஆட்டம் ஏற்படுவதாக உணரமுடிகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.


வருடா வருடம் மேற்கொள்ளப்பட்டு வந்த அந்த தொழில் நுட்ப நடவடிக்கைகளை மேலும் மீண்டும் ஆரம்பிப்பதானது மட்டக்களப்பின் முக்கிய ஒரு பயணப்பாதைக்கு பாதிப்பு உருவாகாமல் தடுக்கப்படும்.

மட்டுநகரினை அண்டிய பகுதிகளுக்கான நீர் விநியோகம் மின்சார விநியோகம் போன்றன மேற்கொள்ளப்படும் இப்பாலம் போக்குவரத்துக்கு மட்டும்தான் பயன்படுகிறது என்ற கட்டுபபாட்டுக்குட்பட்டதல்ல, இந் நீர் விநியோகக் குழாய்கள் கூட சிறியதான உடைவுகளுடன் உள்ளமையைக் காணமுடிகிறது.

1953ம் ஆண்டில் இதனது முழு அளவு மட்டமும் வெள்ளப் பெருக்கு நிரம்பியதாகக் கூறப்படும் [illegible] பாலம் இனியொரு தடவை எப்படி அந்தளவான வெள்ளப் பெருக்கைத் தாக்குப் பிடிக்கும் என கருத்து தெரிவித்தார்.

இரு மருங்கிலும் படையினரின் [illegible]பு அரண்களைக் கொண்டமைந்த [illegible]பாது மக்களின் பார்வைக்கு விட்டு [illegible]ப்படுவது என்பது குறைவே, மீனவர் [illegible]ட முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்து வருகிறது.

**கடந்த பல வருடங்களாகப் பராமரிப்பின்றி இருந்த இப் பாலத்தின் கொட் டுகள் என்றழைக்கப்படும் 14 தூண்களில் அதிகமானவை வெடிப்புக்களுக்குள்ளாகி வருகின்றன, இவற்றில் ஒன்றில், ஒருபகுதி உடை ந்து விழுந்து விட்டது. காலப்போக்கில் இக் கொட்டுகள் யாவும் உடைந்து ஒரு சில வரு டங்களில் கல்லடிப் பாலமும் ஆட்டத்திற் குள் ளாகக் கூடிய நிலை உருவாகியுள்ளது.**



பாலத்தின் உடைவுக்குள்ளாகியிருக்கும் பகுதி

சரியானதொரு கண்காணிப்புடன் பராமரிப்பு மேற் கொள்ளப்படுவதானது எந்தவொரு இயந்திரமோ, சாதனமோ தரமானதாக தனது முழுப் பயனையும் தராதது முக்கியமான விடயமாகும்.

உப்பு நீர் கலந்ததான இவ் வாவி நீரால் தினமும் கழுவப்படும் இப் பாலத்தின் பட்டங்கள் கூட அரிக்கப்பட்டு கரள்படிந்து உடைந்து விழக்கூடிய நிலை தோன்றியுள்ளது.

இந்தப் பாலம் கட்டப்படுவதற்கு முன்னர், மட்டக்களப்பின் நகர மையப் பகுதியான புளியந்தீவுக்கும், கல்லடி மற்றும் அதற்கப்பாலுள்ள பிரதேசங்களுக்கும் இடையிலான போக்குவரத்து வாவியூடாக, படகுகளிலேயே மேற்கொள்ளப்பட்டது.

இப்படியே இந்தப் பாலம் கவனியாமல் விடப்படுமானால், வெகு விரைவில், இந்த நிலைமை மீண்டும் மட்டக்களப்பில் தோன்றும் அபாயம் உள்ளது. இது, ஏற்கனவே அபிவிருத்தியில் பல தசாப்தங்கள் பின்தங்கிய நிலையிலுள்ள மட்டக்களப்பை, இன்னும் பல தசாப்தங்களுக்கு பின் தள்ளி விடும்.

இதனையுணர்ந்து உரியவர்கள் விரைவில் இந்தப் பாலத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக் கூடுகளுக்குள் இருண்டுபோயுள்ள எம்தமிழ் உறவுகளுக்கு விடிவு கிட்டுமா?

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக இயல்பு நிலையை ஏற்படுத்துவது தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழீழ விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்தை



கடைப்பிடித்து வருவதுடன் நல்லெண்ண நடவடிக்கையாக போர்க்கைதிகள் சிலரையும் விடுவித்துள்ளார்கள்.

இதற்கு பதில் நல்லெண்ண சமிகஞையாக இலங்கை அரசாங்கம் தமிழ் அரசியல் கைதிகளில் ஒரு சாராரையாவது விடுதலை செய்யுமென எதிர்பார்த்தும் பலன் கிட்டாத நிலையில் அரசியற் கைதிகள் சாத்வீக போராட்டத்தில் குதித்துள்ளனர். கடந்த வெள்ளியன்று நாடெங்குமுள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் ஏக காலத்தில் ஒருநாள்

**ஜி.நடேசன்**

அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்கள்.

இலங்கைத்தமிழர்கள் முன்னர் அரசியல் உரிமைகளை கோரியே உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் போன்ற சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபட்டார்கள். இப்போது ஆயுதவழிப் போராட்டத்துடன் அன்றாட தொழிலை மேற்கொள்வது முதல் விடுதலை வரையான விடயங்களுக்கும் போராட வேண்டியுள்ளது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை பயங்கரவாத தடைச்சட்டம் பல்வேறு நெருக்கடிகளை பலவழிகளிலும் ஏற்படுத்தி வருகிறது. மூன்று வருட காலத்திற்கு தற்காலிக ஏற்பாடாக அமுல்படுத்தப்பட்ட இச்சட்டம் கடந்த 22 வருடங்களாக ஏற்படுத்தி வரும் அவலங்களிலுருந்து பல தமிழ் இளைஞர்கள் மீள முடியாதவர்களாகவே உள்ளனர். விடுதலை செய்வதில் இச்சட்டம் கொண்டுள்ள கடுமையான விதிகளைத்தாண்டி விடுதலையான பல இளைஞர்கள் இளமைக்காலத்தைத் தொலைத்ததன் விளைவுகளிலிருந்து மீள முடியாத நடைப்பிணங்களாகவே வாழ்ந்து வருகிறார்கள்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான புறநிலை சூழல்களை ஏற்படுத்துவதற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் குறிப்பிட்ட விடயங்களில் பயங்கரவாத தடைச்சட்ட நீக்கமும், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையும் பற்றி குறிப்பிடாதது பற்றி ஆழ்ந்த விசனம் பலதரப்பட்டவர்கள் மத்தியில் உள்ளது.

இன்று இந்த பயங்கரவாதச் சட்டம் அவசர காலச்சட்டத்திற்கு பிரதியீடான ஏற்பாடுகள் பலவற்றை கொண்டிருப்பதுடன் சர்ச்சைக்குரிய புலிகள் தடைச்சட்டத்தை தக்கவைக்கவும் தோள்கொடுத்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் கடந்த கால் நூற்றாண்டு காலமாக தொடர்ந்து வரும் போரின் விளைவுகளில் பயங்கரவாதத் தடைச்சட்டமும் தமிழ் அரசியற் கைதிகளின் விவகாரமும் குறிப்பிடத்தக்கது. 1979ம் ஆண்டு யூலை மாதம் தற்காலிக ஏற்பாடுகளாக மூன்று வருட ஆயுளை குறிப்பிட்டு அமுல்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்று வரை தொடர்ந்து வருகிறது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் பாதுகாப்புக் கூட உறுதிப்படுத்தப்படாத நிலையில் வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை முதல் களுத்துறை

> **தற்போது சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டுவரும் நிலையில் சிறைச்சாலைகளுக்குள் எழுந்துள்ள உணர்வுகளுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.**

சிறைச்சாலை படுகொலை வரை அனுபவித்த அவலங்கள் காரணமாக அரசியல் கைதிகள் அச்சத்துடனேயே நாட்களை வருடங்களாக கடத்தி வருகிறார்கள்.

பிடியாணை இன்றி கைது செய்தல், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் முக்கிய சான்றுப் பொருளாக சமர்ப்பிக்கலாம், விசாரணை முடியும் வரை தடுத்து வைக்கவும், நீதித் துறையினரிடம் சாதாரண சட்டத்தில் உள்ள பிணை அதிகாரம் நிர்வாகத்துறையினரிடம் ஒப்படைத்துள்ளமை போன்ற விடயங்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் எந்த வித திருத்தமுமின்றி அமுல்படுத்தப்பட்டு வருகின்ற காரணத்தினால் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தை தொடர்ந்தும் சிக்கலாக்கி வருகிறது.

அத்தோடு திகதி குறிப்பிடாது தடுத்து வைக்கும் கட்டளை விடுதலையை கூட பல வழிகளிலும் சிக்கலாக்கி வருகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளை பொறுத்தவரை இந்த பயங்கரவாத தடைச்சட்டம் நேரடியாக பெரிதும் பாதிப்பதாக இல்லை. உறுப்பினரொருவர் படையினரிடம் கைதாவது குதிரைக் கொம்பாகவே உள்ளது. உறுப்பினரைக் கண்டால் படைத்தரப்பினர் துப்பாக்கி பிரயோகம் செய்வார்கள். உயிரோடு பிடிக்க முற்பட்டால் சயனைட் அருந்தி மரணித்து விடும் சம்பவமே நிகழ்கின்றன.

> **இலங்கைத்தமிழர்கள் முன்னர் அரசியல் உரிமைகளை கோரியே உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் போன்ற சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபட்டார்கள். இப்போது ஆயுதவழிப் போராட்டத்துடன், அன்றாட தொழிலை மேற்கொள்வது முதல் விடுதலை வரையான விடயங்களுக்கும் போராட வேண்டியுள்ளது.**

இதனால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாவோரில் அதிகமானோர் சாதாரண குடிமக்களாகவே உள்ளனர். இனரீதியான பழிவாங்கும் நடவடிக்கையாக பிடிபட்டவர்களை நீதிமன்றின் முன் நிறுத்துவதற்காக சித்திரவதை மூலம் குற்றஒப்புதல் வாக்குமூலம் பெறப்படுவதாகவும், வழக்கு சோடிப்பதற்காக சான்று பொருட்களையும் சமர்ப்பிப்பதாகவும் அரசியல் கைதிகள் தெரிவிக்கிறார்கள்.

படிக்கும் வயதில் பிடிபடும் இளைஞர்களும், குடும்ப வாழ்க்கைக்கு மூலாதாரமான உழைப்பாளிகளும் கைது செய்யப்பட்டு நீண்டகாலம் தடுத்து வைக்கப்படுவதால் ஒவ்வொரு குடும்பமும் அன்றாட வாழ்க்கையை நகர்த்த அனுபவிக்கும் அவலங்களை உரியவர்கள் கருத்தில் கொள்வதில்லை.

மேலும் கைது செய்யப்படுபவர்களில் அநேகர் தமிழ் தீவிர வேறு மொழிகள் தெரியாதவர்கள். ஆனால் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் தாய்மொழியில் பதிவு செய்யப்படாததால் எழுதித் தருவதை வாசிக்காது கையொப்பமிட்டு குற்றவாளிகளாகும் நிலையும் உள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வகைதொகையின்றி கைது செய்யப்படுகிறார்கள் அதனால் நீதி மன்றங்கள் வழமையான கடமை களுக்கு அப்பால் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படு பவர்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்க வேண்டியுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குகளைத் தாக்கல் செய்வதிலும் வேலைப்பளு உள்ளது. இந்த நிலையில் தனியான பிரிவு ஏற்படுத்தப்படாத வரை தாமதமும் அதிக காலம் தடுத்து வைக்கப்படும் நிலையும் தொடரும். அதே போல பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டவரை வைத்திய பரிசோதனை செய் வதைக் கூட வழமையான வேலை ப் பளுக்களுக்கு மத்தியிலேயே சட்ட வைத்திய அதிகாரிகள் செய்ய வேண்டியுள்ளது.



மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தொடரப்படும் வழக்குகளுக்கான சாட்சிகள் நிதிமன்றிற்கு பல தடவைகள் வராத நிலையிலும் வழக்குத் தவணைகள் இழுபடுகின்றன.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் ஏற்பாடுகளால் மட்டுமல்ல நடை முறைப்படுத்தல்களின் காரணமாகவும் தமிழ் அரசியற் கைதிகள் நீண்டகாலம் சிறைச்சாலைகளுக்குள் முடங்கி கிடக்க வேண்டியுள்ளது.

தற்போது சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில் சிறைச்சாலைகளுக்குள் எழுந்துள்ள உணர்வுகளுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும் உரிய நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு அவர்களை விடுதலை செய்வதுடன் விடுதலையானவர்களுக்கு

> **தமிழீழ விடுதலைப்புலிகளை பொறுத்தவரை இந்த பயங்கரவாத தடைச்சட்டம் நேரடியாக பெரிதும் பாதிப்பதாக இல்லை.**

நிவாரணமளிக்கும் திட்டங்களும் செய்றபடுத்தப்பட வேண்டும்.

சித்திரவதை மூலம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டமை வைத்திய பரிசோதனை அறிக்கை மூலம் நிரூபிக்கப்பட்டவர்கள். சாட்சிகள் நீண்ட காலம் வராததால் இழுபடும் வழக்கு களை தள்ளுபடி செய்து சம்மந்தப் பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டும். மேல்நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்படுபவர்கள் நீதிவான் நிதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட திகதி குறிப்பிடாது தடுத்து வைக்கும் ஆணையை விலக்கும் வரை தொடர்ந்து தடுத்து வைப்பதற்கு பரிகாரம் காணப்பட வேண்டும். சில மாவட்டங்களில் மேல் நிதிமன்றங்கள் அதிக வேலைப்பளு உள்ளதால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரிக்க மேலதிக மேல் நிதிமன்ற நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டும்.

சட்டமா அதிபர் திணைக்களம் வழக்கு தாக்கல் செய்யப்படுவதை துரிதப்படுத்த வேண்டும்.

அதேவேளை தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிபேதமின்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க அல்லது கடுமையான விதிகளை திருத்த அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைக்கான முன்தேவைகளில் தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தை உள்ளடக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் அரசியல் கைதிகள் விடயத்திலும் பம்மாத்து அறிக்கைப் போராட்டத்தை நடத்தாது, செயல்பாட்டு போராட்டத்தை நடத்தவேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரத்தை அனைவரும் கரிசனையுடன் அணுகவேண்டிய தருணம் இது. எந்தவித குற்றமும் செய்யாது தமிழன் என்ற ஒரே காரணத்திற்காக கைது செய்யப் பட்டவர்களும் கணிசமாக உள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைவருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் ஒரு சவாலாக உள்ளது.

பொதுமன்னிப்பின் கீழன்றி, குற்றமற்றவர்கள் என்பது நிரூபிக்கப்பட்ட நிலையில் அவர்களின் விடுதலை அமைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தை மைய சமாதானமும் சமாதானத்திற்கான சமாதானமும்

**'1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 04 ஆம் திகதி இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது. ஆங்கிலேயரின் ஆட்சி அகன்றது. ஆனால் நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரம் நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்கவில்லை. அதற்குப் பதிலாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் அதைத் தம்வசமாக அபகரித்துக் கொண்டார்கள். இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்தவர் அடிமைகள் ஆக்கப் பட்டனா'.**

நாளை சிறிலங்கா தனது சுதந்திரதினத்தைக் கொண்டாடும் வேளையில் 04.02.1959 ல் 'வீரகேசரி' சுதந்திரதின மலருக்கு தந்தை செல்வா எழுதிய கட்டுரையின் மேற்போந்த ஒரு பகுதியை நினைவுபடுத்துவது பொருத்தமாகிறது.

ஈழப்போர்-i,ii,iii என படைத்துறை ஆய்வாளர்கள் வகைப்படுத்திய காலகட்டங்களிலே, சிறிலங்காவின் சுதந்திரதினம் தமிழர் மரபு வழித் தாயகப் பகுதியில் களியாட்டங்களேதுமற்ற துக்க நாளாகவே அனுட்டிக்கப்பட, சிறிலங்கா படைத்துறையினரால் 24 மணிநேர விழிப்புநிலை பேணப்பட்டு பாதுகாப்புக் கெடுபிடிகள் அப்பாவிப் பொதுமக்கள் மீது அதிகமாக்கப்பட்ட நிலையே நிலவி வந்தது. நாளைய தினமோ 'சற்று' மாறுதலானதாகவே அமைவது நீண்ட இடைவெளிக்குப் பின்பான அனுபவமாகவே அமைகிறது.

தற்போதைய சூழல் போரினால் நலிவுற்ற மக்களுக்கு அவர்களை ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது. இந்நிலையில் முன்பொரு தடவை 'தினக்கதிர்' வாரமலரில் வெளியான க.வே.பாலகுமாரன் அவர்களின் கட்டுரையின் தலைப்பே நினைவிற்கு வருகிறது. '**பேச்சுவார்த்தை பற்றிய பேச்சுக்களால் காலம் கழியும் காலம்**' என்பதே அத்தலையங்கமாக அமைந்தது.

அக்கட்டுரையிலே க.வே.பாலகுமாரன் அவர்கள் வியட்நாம் விடுதலைப் போராட்டத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை? சமாதான முன்னெடுப்புக்கள் பற்றிக் குறிப்பிடுவது கூர்ந்து கவனிக்கத்தக்கது.

"**இது பேச்சுவார்த்தைக்காலம். பேச்சுவார்த்தைகள் பற்றிய பேச்சுக்களால் காலம் கழியும் காலம். பேச்சுவார்த்தைக் காலமாக இக்காலம் மாறியமைக்கான அகக்காரணி ஒன்றுண்டு. சகல விடுதலைப் போராட்ட வடிவங்களிலும் அதற்கெதிரான அமைவுகளிலும் பொதிந்துள்ள பொதுப் பண்பிது. இருவேறு முரண்பட்ட இலக்குகளைக் கொண்ட இரு தரப்புமே தமது இலக்கினை அல்லது இலக்கு நோக்கிய பயணத்தில் முன்னேற்றத்தினை இராசதந்திரம், அரசியல் பேச்சுக்கள் என்பவை மூலம் அடைய முடியுமா என முயன்று பார்க்கின்றமை இப்பண்பு**" என்று 'எரிமலை' (பெப்ரவரி 2001) இல் க.வே. பாலகுமாரன் எழுதியது ஓராண்டு கடந்தும் சமகாலப் பொருத்தம் கொள்கிறது. '**போரிடுங்கள் பேசுங்கள் பேசுங்கள் போரிடுங்கள**' என்ற சொற்றொடரே 'வியட்கொங்' விடுதலைப் போராளிகளிடமும் வியட்நாமிய மக்களிடமும் வேரூன்றியிருந்தது என்று மேற்படிக் கட்டுரையாளர் குறிப்பிடுவதும் மனங்கொள்ளப்பட வேண் டியதே.

இப்போது பலவிடங்களிலும் அடிபடும் செய்தி பெப்ரவரி 24க்கு முன்பாக நோர்வே அனுசரணையூடாக சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே 'புரிந்துணர்வு உடன்படிக்கை' கைச்சாத்திடப்படலாம் என்பதே. நீதியான நிறைவான சமாதானத்திற்கான இத்தகைய முயற்சிகள் யாவராலும் வரவேற்கப்பட வேண்டியனவாகும்.

எனினும், ரணில் விக்கிரமசிங்ஙவின் புதிய அரசாங்கத்தின் சமாதான முயற் சிகள் தொடர்பாக சற்று நின்று நிதானித்து. நோக்கினால், திறந்த பொருளாதாரக் கொள்கையின் முன்னோடிகளான இவர்களினது அமைதிக்கான அடையாளச் செயற்பாடுகள் பலவும் சந்தையை மையப் படுத்தியனவாக அமைவதைப் புரிந்து கொள்ளலாம்.

இன்றைய சிறிலங்கா சார்பான சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பலரும் பெரும் வர்த்தகப் புள்ளிகளாக அமைவதை அவதானிக்கலாம். உளநாட்டுச் சந்தையில் வெளிநாட்டு வர்த்தகப் பங்காளிகளின் இணைவுடன் கணிசமான விழுக்காட்டைக் கொண்டுள்ள இத்தகையவர்களுக்கு எப்படிப்பட்டாயினும் இலங்கைத் தீவின் பொருண்மிய வலுவை -குறிப்பாக அதலபாதாளத்தில் நின்ற/நிற்கும் ஸ்ரீலங்காவின் பொருண்மிய வலுவை- மீட்பது மிகத் தேவையாகிறது.

மிக ஆழமான வர்த்தக நலனை (சந்தையை உறுதிப்படுத்தல், சந்தையை விரிவாக்கல், சந்தையைக் கைப்பற்றல்..) கேந்திர நோக்காகக் கொண்டுள்ள பௌத்தசிங்கள மேலாதிக்கக் கனவான்கள் இலங்

## து. உமாபதி

கைத் தீவின் அமைதிக்குப் பாடுபடுவதாக சமூக நலனை(?) வெளிக்காட்டி வருவது '**சந்தை மைய சமாதானம**' என்ற பதத்தை தெளிவாக்கிறது.

(இத்தகைய கருத்துக்கள் அண்மையில் கிழக்குப் பல்கலைக்கழ மாணவர்களாலும் Young Asia television 'விழிப்பு' விவரண நிகழ்ச்சிக்கான கருத்துக் களாக வெளிப்படுத்தப்பட்டதாகவும் அறிய முடிந்தது.)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இத்தகைய சந்தை மைய சமாதானத் தந்திரோபாயத்தை விடுத்து கடந்த பொதுத் தேர்தலில் மிகக் கூடிய விழுக்காட்டினர் வழங்கிய ஆணையான 'சமாதானத்திற்கான சமாதானத்தை' வழங்க சகல வழிகளினூடும் முயற்சிக்க வேண்டும். சிறிலங்காப் பிரதமரே அண்மையில் ஒத்துக் கொண்டதற்கேற்ப '**இச் சந்தர்ப்பம் சமதானத்திற்கான இறுதிச் சந்தர்ப்பம**' என்பதை ஒட்டுமொத்த சிறிலங்காவும் புரிந்து கொள்வதுடன் சமாதானத்திற்கெதிரான இனவா



திகளை முறியடிக்கவும் முனைய வேண்டும்.

ஈழத்தமிழர்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளின் மகத்தான அளவிடற்கரிய போரியல்/அரசியல் சாதனைகளாலேயே சிறிலங்காவின் புதிய அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியதாயிற்று என்பது பலரதும் பொது அபிப்பிராயம். தற்போதைய சமாதானக் கதையாடல்களின் மத்தியில்,



19.07.1959ல் தமிழரசுக் கட்சியின் மட்டக் களப்புக்கிளைப் பணியகத் திறப்பு விழாவில் தமிழரசுத்தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் தீர்க்கதரிசனத்துடன் ஆற்றிய உரையில் '**இலங்கையில் நிறுவப்படும் எந்தச் சிங்கள ஆட்சியும், தமிழ் பேசும் மக்களுக்கு சுயாட்சி கொடுக்க வேண்டிய காலம் ஒன்று இன்று உடனடியாக இல்லா விட்டாலும் கூடிய விரையில் வந்தே தீருமென்பது மறுக்க முடியாத உண்மை யாகும். தமிழினத்துக்கு சுய ஆட்சி வழங் காமல் இலங்கை ஆட்சிபீடத்தில் அமரும் எந்த ஆட்சியாளரும் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் இயங்க முடியாது. அவர்கள் பெற்ற சுதந்திரத்தை அவர்களே அனுபவிக்க முடியாமல் போய்விடும்... சுதந்திரம் பெறும் வரை நாம் எமது எதிர்ப்பைத் தளர்த்தக் கூடாது. அற்ப அனுகூலம் கிடைக்கும் போது அதையே பூரண வெற்றி என்ற தப்பு அர்தம் செய்து கொண்டு ஆர்ப்பரிப்பது அறிவீனம். சோர்வு மனப்பான்மைக்கு இடங் கொடுக்காது பொறுமையுடன் விடாப்பிடி யாக உழைக்க வேண்டும**்" என்று குறிப் பிட்டதை சிறிலங்காவும் ஈழத்தமிழர்களும் சரிவர உள்வாங்கிப் பணியாற்றுவது நல்லது நடக்க ஏதுவாகலாம்.

சமாதான முயற்சிகளுக்காக நல்லெண்ண சூழல் சிறிலங்கா அரசாங்கத்தால் முற்றாக தமிழர் தாயகத்தில் இன்னமும் தோற்றுவிக்கப்படவில்லை. பொருளாதாரத்தடையில் தளர்வு ஏற்படுத்தப் பட்டுள்ளதே ஒழிய முழுமையாக பொருண்மியத் தடை அகற்றப்படவில்லை. சோதனைக் கெடுபிடிகள் முற்றாக நீங்கியபாடில்லை; ஆங்காங்கு தலைகாட்டவே செய்கின்றன.

"**சிங்கள அரசு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண இது வரலாற்று வாய்ப்பு. சமாதானப் பேச்சை ஆரம்பிக்க நிரந்தரப் போர் நிறுத்தம், இராணுவ நெருக்குவாரங்கள் அகற்றப் படல், புலிகள் மீதான் தடை நீக்கம் ஆகியன பேச்சு மேசைக்கு செல்ல முன்னர் செய்யப்பட வேண்டிய பணிகள் ஆகும**" என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தி யோகபூர்வ ஏளடான 'விடுதலைப்புலிகள்' கருத்து வெளியிட்டுள்ளமை தேவைப்பாட்டை திறம்பட சுட்டிக காட்டி நிற்பதைக் காணலாம்.

> *சமாதான முயற்சிகள் மெய்யானதாக் ஈழத்தமிழர்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என ஈழத்தமிழர்கள் ஒன்று திரண்டு மீள வலியுறுத்த வேண்டும்! அவசரமானதும் அவசியமானதுமான தேவையாகவே இது அமைகிறது. இன்று மட்டு- அம்பாறை வெகுஜன ஒன்றியம் நான்கு கோரிக்கைகளை முன் வைத்து நடத்தும் ச்மாதானப் பேரணி வரவேற்கத்தக்கது. இத் தகைய தேசம் தழுவிய மக்கள் எழுச்சி தொடர்ந்து முன்னெடுக்கப்படுவது சிறப்பளிக்கும்.*

அவதானமாக சமாதான நட வடிக்கைகளை முன்னெடுப்பதாகக் கூறித் தன்னை நியாயப்படுத்த முனையும் ரணில் அரசாங்கம் ஈழத்தமிழர்களின் தாயக விடுதலை ஓர்மத்தைக் குன்றச் செய்து போராட்ட உளப்பாங்கை அகற்றிவிட 'சத்தமின்றி' செயற்படுவதையும் தெளிவாகக் கண்டுணர வேண்டும். எடுத்துக்காட்டாக, அண்மையில் ' மட்டக்களப்பு மாவட்ட படைத்துறை உயரதிகாரி கூட திரைப்பட மாளிகைகளில் இரவு நேரக்காட்சி நடத்தப்பட வேண்டும் என ஆலோசனை நல்கியதை ஊடகங்கள் அறிவித்திருந்தன. ஏலவே தமிழ்ப்பண்பாட்டு விழுமியங்கள் மாவட்டத்தின் படைத்துறைக்கட்டுப் பாட்டுப் பகுதிகளில் சிதைக்கப்பட்டு வரும் நிலையில் இத்தகைய 'தூர நோக்கு'(?) சிந்தனைகள் குறித்து அவதானத்துடன் இருக்க சமூக முன்னோடிகள் கருத்திலெடுக்க வேண்டும்.

தமிழர் தேசத்தின் மீது மிக நுட்டபத்துடன் 'மறைகரம்' ஆக ஏவப் பட்டுள்ள தமிழ்த் தேசிய எழுச்சியில் தேக்க நிலையான ஒருவித மாயையை மீறி யாழ்.குடா நாட்டு மீனவர்கள் நடத்தும் அமைதிப் போராட்டமும், மட்டக்களப்பு சிறைச்சாலைக் கைதிகளின் அடையாள உண்ணா விரதமும் '**என்றும் விழிப்புணர்ச்சியோடு இருப்பது தான் விடுதலைக்கக் கொடுக்கும் விலை**' என்பதை வெளிப்படுத்தியுள்ளமை நல்லடையாளமாகும்.

சமாதான முயற்சிகள் மெய்யானதாக ஈழத்தமிழர்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என ஈழத்தமிழர்கள் ஒன்று திரண்டு மீள வலியுறுத்த வேண்டும்! அவசரமானது அவசியமானதுமான தேவையாகவே இது அமைகிறது. இன்று மட்டு-அம்பாறை வெகுஜன ஒன்றியம் நான்கு கோரிக்கைகளை முன் வைத்து நடத்தும் சமாதானப் பேரணி வரவேற் கத்தக்கது. இத் தகைய தேசம் தழுவிய மக்கள் எழுச்சி தொடர்ந்து முன்னெடுக் கப்படுவது சிறப்பளிக்கும். புலிகள் மீதான தடை நீக்கக் கோரியும், சிறிலங்காவின் சிறைகளில் சிதைவுறும் தமிழ்க் கைதிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்றும் சிறிலங்காவில் சாதாரண சிங்கள மக்களும் ஒன்று திரண்டு குரல் கொடுப்பது எம் மண்ணில் அவர் கள்பட்ட கடன் தீர்க்கும்.

சந்தை மைய சமாதானம் விடுத்து நீடித்து நிலைத்து நிற்கும் கௌரவமான சமாதானத்திற்கு தமிழ்த்தேசிய எழுச்சி முனைப்புப் பெற வேண்டும். '**செல்வத்திற்கெல்லாம் தலையான செல்வம் என்ன என்று உள்ளுக அது மாந்தரின் உள்ள எழுச்சியன்றோ சக்திகளுக்கெல்லாம் பெரும்சக்தி சிகரமாகும். பூமியிலும், விண்ணிலும், பூமியினடியிலும் அணுசக்தி போனறது மாந்தரின் உள்ள எழுச்சி**' என்று புகழ்பூத்த இந்திய அறிவி யலாளர் அப்துல்கலாம் கூறுவது இன் றைய சூழலில் ஈழத்தமிழர்களுக்குக் கன கச்சிதமாகவே பொருந்தி விடுகிறது! □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் பௌத்த பிக்குகள்

மீனா

பல்லினங்கள் வாழும் சமுதாயத்தைக் கொண்ட ஜனநாயக நாட்டில் நிரந்தரமாக ஆட்சியில் இருக்கும் ஓர் பெரும்பான்மை இனம் தன்னுடைய மொழியையும், மதத்தையும், காலாசாரத்தையும். மொழியாலும், மதத்தாலும், கலாசாரத்தாலும் வேறுபட்டிருக்கும் சிறுபான்மை இனங்களின் மேல் திணிக்கக் கூடாது. அவ்வாறு



திணிக்க முற்பட்டால் அச் சிறுபான்மை இனங்களின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படுவதோடு இனங்களுக்கிடையே முறுகல் நிலைகளுமே ஏற்படும். இவ் எதேச்சதிகாரப் போக்கிற்கு ஆசீர்வாதம் அளித்து வழி நடாத்திச் செல்ல மதத் தலைவர்கள் முயலும் போது சமூகத்தில் உள்ள பரஸ்பர ஒற்றுமையும், நம்பிக்கையும் இழக்கப்படுகின்றது. இதற்கு அரசும் உறுதுணையாக இருக்கும் போது வரலாற்று ரீதியான முரண்பாடுகளும் மேலெழும்புகின்றன.

இலங்கையில் சுதந்திரத்திற்கு முன்பிருந்தே இந் நிலைகள் வளர்ந்து வந்தன. வேற்று நாட்டவரின் ஆட்சியின்போதே சிறுபான்மை மதப்பிரிவினரிடம் தம் ஆதிக்கத்தினைச் செலுத்தத் தொடங்கிய பெரும்பான்மையினர் தம் கைக்கு ஆட்சி வந்ததும் அதனைப் பலப்படுத்த முனைந்தனர். இதில் சுதந்திர இலங்கையில் கொடி தழுவிய விடயம் சிங்கள பௌத்தத்தின் ஆரம்பமாகக் காணப்பட்டது. முக்கியமாக மொழி, மத, ரீதியாக வேறுபாடுடைய ஒரு நாட்டில் எல்லா மக்களின் விசுவாசத்தையும் தூண்டக் கூடிய வகையில் தேசியக் கொடி அமைந்திருக்க வேண்டும். ஆனால் சிங்கத்தையும் அரசமர இலைகளையும் அடிப்படையாகக் கொண்டே தேசியக் கொடி அமைக்கப்பட்டது. அதிலிருக்கும் இரு சிறிய கோடுகளே தமிழர்களையும், முஸ்லிம்களையும் குறிக்கின்றது. இதன் படி இலங்கையின் தேசியக் கொடி முழுக்க முழுக்க பௌத்தத்தினை முதன்மைப்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளது.

இதற்கு பிக்குகளின் அழுத்தம் மிக முக்கிய காரணமாகும். மிக முக்கியமான வரலாற்றுத் தொடர்பு மதத்தலைவர் களின் அழுத்தத்துடனேயே ஆரம்பித்தது. அத்தகைய நிகழ்வு தற்போதைய அரசியலிலும் புரையோடிப் போயிருப்பது தவிர்க்க முடியாதுள்ளது.

சுதந்திரம் கிடைத்தவுடனேயே பெரும்பான்மை அரசு தன்னுடைய பௌத்த ஆதிக்கத்தைக் காட்டத்தொடங்கியது. பிக்குகளின் உதவியுடன் அரசு சிங்கள மக்களின் சிங்கள பௌத்த தேசியத்தை உருவாக்கியது. இது பெரும்பான்மை மக்களின் உணர்வுகளைத் தூண்டியதோடு ஏனைய இன மக்களை இத்தேசிய அமைப்பிற்கு வெளியே வைத்தது. முக்கியமாக அகிம்சா தர்மத்தைப் போதிக்கும் பௌத்த மத அடிப்படையிலேயே சகல கருத்துக்களும் தோற்றம் பெற்றன. பௌத்த நியமங்களைக் கடைப்பிடித்து இதனைப் போதிக்கும் பௌத்த பிக்குகளே சிறுபான்மைச் சமூகங்களுக்கெதிரான வன்செயல்களைத் தூண்டிவிட்டு பௌத்த உருவாக்கத்திற்கு உரமூட்டினார்கள்.

பௌத்த பிக்குகள் தம்மை அரசியலில் ஈடுபடுத்துவதற்கு பல சங்கங்களையும் அமைத்துக் கொண்டனர். 1956ம் ஆண்டு ஸ்ரீலங்கா மஹாசங்க சபாவினாலும் "சமஸ்தலங்கா பிக்கு சம்மேளனங்களினாலும்", "பிக்குகளின் ஐக்கிய முன்னணி" எனும் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இதைவிட "அமரபுர ராமான்ய நிக்காய" போன்ற பௌத்த சங்கங்களும் உருவாக்கப்பட்டன. இச் சங்கங்களினைச் சேர்ந்தவர்களே கூடுதலாக அரசியலில் ஈடுபட்டனர். 1946-1948 வரை பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடவோ செல்வாக்குச் செலுத்தவோ கூடாது என்ற நிலைப்பாடு இருந்தது. ஆனால் 1947ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன் வித்தியாலங்கார பிரிவெனாவைச் சேர்ந்த சில பௌத்த பிக்குகள் "வித்தியாலங்காரக்குழு" என்ற பெயரில் அரசியலில் பிரவேசித்தனர். இவர்கள் லங்கா சமசமாஜக் கட்சிக்கான பிரசாரத்தில் ஈடுபட்டனர். ஆனால் பிக்கு சங்கத்தில் இருந்த பழமைவாதப் பிக்குகளினால் இவ் அரசியல் ஈடுபாடு எதிர்க்கப்பட்டது. இருந்தபோதும் இளைய பரம்பரையைச் சேர்ந்த "வல்பொல ராகுலு பிக்குவினால்" இக் கருத்தை ஏற்க முடியவில்லை. கட்டாயம் பிக்குகள் அரசியலில் ஈடுபடல் வேண்டும் என்பதற்காக "இலங்கை பிக்குகளின் ஒன்றியம்" (லங்கா எக்சத் பிக்கு பல மண்டலய) எனும் சங்கத்தினையும் உருவாக்கினார் இச் சங்கத்தினைச் சேர்ந்தவர்களாலேயே 1956ம் ஆண்டு சிங்கள பௌத்த தேசியம் எனும் கோஷம் பரப்பப்பட்டது. அவர்களினால் கடைப்பிடிக்கப்பட்ட இடதுசாரிக் கொள்கை புறந்தள்ளப்பட்டு சிறுபான்மையினரை ஒதுக்கித் தள்ளும் பேரினவாதக் கொள்கை கைக்கொள்ளப்பட்டது. இப் பௌத்த பேரினவாதக் கொள்கை ஒவ்வொரு அரசியல் நிகழ்வுகளுக்கும் தனது அழுத்தத்தை ஆழமாக்கிக் கொண்டே வந்தது.

ஒவ்வொரு தேர்தலிலும் உருவாக்கப்படும் புதிய அரசாங்களின் பலம், பலவீனம், பௌத்த பிக்குகளினால் உன்னிப்பாகக் கவனிக்கப்படுகின்றன. பலவீனமான ஆட்சியின் போது தமது மதத்தின் பலத்தை திணிப்பது வரலாற்று ரீதியாக மெய்ப்பிக்கப்பட்டு வந்துள்ளது. ஜோன் கொத்தலாவலயின் ஆட்சிக் காலத்தில் பொருளாதார நிலமை மோசமடைந்திருந்தது. இதனால் மக்களிடையே திருப்தியின்மையும் அரசியல் ரீதியான முரண்பாடுகளும் தோன்றின. தருணம் பார்த்திருந்த மதத்தீவிரவாதிகள் இந் நிலமையினைத் தமக்குச் சாதகமாகத் திசை திருப்பினர். மத ரீதியிலமைந்த தலைமைத்துவத்தை உருவாக்கி அதன் மூலம் அரசியல் ரீதியான சலுகைகளைப் பெறலாம் என எதிர்பார்த்தனர். இதன்படியே பண்டாரநாயக்காவின் "சிங்களம் மட்டும்" சட்டத்திற்கு ஆதரவு அளித்தனர்.

அக்காலகட்டத்தில் சட்ட அந்தஸ்து இரு மொழிகளுக்கும் வழங்கப்பட அதனை எதிர்த்தன. இறுதியில் "சிங்களம் மட்டும்" சட்டம் பௌத்த அழுத்தத்தினால் முதன்மைப் படுத்தப்பட்டது. ஓர் சமூகத்தின் மொழி வளர்ச்சியைத் தடுப்பதும், அம் மொழிக்கு தகுந்த இடம் கொடுக்கப்படாமையும் அச் சமூகத்தை அடியோடு நிர்மூலமாக்குவதற்கு ஒப்பாகும் எனும் கருத்து இங்கு மெய்ப்பிக்கப்பட்டது.

தமிழ் மக்களுக்கு கொடுக்கப்படும் நீதியான சிறு சலுகைகள் கூட பௌத்த ஆதிக்கத்தினால் அமிழ்த்தப்பட்டன. இதற்கு சிறந்த உதாரணமாக "பண்டா செல்வா ஒப்பந்தம்", "டட்லி செல்வா ஒப்பந்தம்" என்பவற்றைக் கூறலாம். பண்டா செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானபோது "எக்சத் பிக்கு பெரமுன" அமைப்பு இவ் உடன்படிக்கை உடனடியாக ரத்துச் செய்யப்படாவிட்டால் தாம் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக அறிவித்திருந்தது. இதேவேளை விமலா விஜேவர்த்தனவின் தலைமையில் சில பிக்குக்குழுக்கள் ஆர்ப்பாட்டத்திலும் இறங்கின. இதே போலவே டட்லி செல்வா ஒப்பந்தம் கைச்சத்தான போதும் பிக்குகளினால் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடாத்தப்பட்டன. இவ் எதிர்ப்பு ஊர்வலத்தில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது ஓர் பிக்கு கொல்லப்பட்டதும் முக்கிய விடயம்.

பல வரலாற்றுப் பிணக்குகள். கறை படிந்த சம்பவங்களுக்கு எல்லாம் பெரிதும் காரணமாக இருந்தவர்கள் இப் பௌத்த பிக்குகளே. மத போதனையுடன் அரசியலையும் சேர்த்துக் கொண்டு சென்றமையே இதற்கான பாரிய காரணமாகும். அரசியல் ரீதியான முட்டுக்கட்டைகள் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட வண்ணமே உள்ளன. சமாதானத்திற்கான சிறு செயல்பாடு கூட இவர்களின் தூண்டுதலினாலும், அழுத்தத்தினாலும் மழுங்கடிக்கப்படுகின்றன.

தற்போது இலங்கையின் அரசியல் பல்வேறு மத அமைப்புகளினாலேயே கொண்டு செல்லப்படுகின்றது. மல்வத்த பீடாதிபதி ரம்புக்வெல்ல ஸ்ரீவிடசி மஹாநாயக்க தேரர் அமரபுர சங்க சபாவைச் சேர்ந்த மடிவெற பஞ்ஞ சிஹ உத்தரித்தர மஹாநாயக்க தேரர் அஸ்கிரிய பீடத்தைச் சேர்ந்த உடுகம ஸ்ரீ தம்மதஸ் சிரட்ணபால புத்தரஹித்த மஹாநாயக்க தேரர் மரன்ன நிக்காயவைச் சேர்ந்த வேவல் தெனிய மெடலங்கார மஹாநாயக்க தேரர் போன்ற சங்கங்களின் பீடாதிபதிகள் அரசியல் ரீதியான முட்டுக்கட்டைகளை ஏற்படுத்துகின்றனர். அரசியல் ரீதியான சமாதான நிலமைகளுக்கு எப்போதும் கட்டுப்பாடுகளை விதித்தே வந்துள்ளனர். நோர்வே பிரதிநிதிகள் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முனைந்தபோதும் இவ்வாறான எதிர்ப்பினை வெளிக்காட்டியே வந் துள்ளனர். பயங்கரவாதத்தினைப் பூண்டோடு அழிக்க வேண்டும். புலிகளுக்கு உதவி ஒத்தாசை வழங்கும் ஒரு நாட்டுடன் மத்தியஸ்த நிலமையை ஏற்படுத்துவது சரியானதல்ல. அமைதிப் பேச்சு வார்த்தைகள் எப்போதும் நன்மையை ஏற்படுத்தப் போவதில்லை என கோஷம் எழுப்பியிருந்தனர். இவ்வாறான சமாதான முயற்சிகள் இவர்களின் கோஷத்தினாலும், எதிர்ப்பினாலும் கைவிடப்பட்டது.

இவ்வாறான வரலாற்றுச் சம்பவங்களில் இவர்களின் அழுத்தத்தைவிட தற்போதைய சமாதான சமிக்ஞைக்கு இவர்களின் தூண்டுதல் எவ்வாறு இருக்கின்றது என்பதும் இங்கு முக்கியம். புதிய ரணிலின் அரசாங்கம் சமாதானத்திற்கான முதல் அடியினை எடுத்து வைத்துள்ளது. இது இலங்கையில் உள்ள அனைத்து இன மக்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயம். இதேவேளை சமாதானத்திற்கான விட்டுக்கொடுப்புக்களையும் ரணிலும் புலிகளும் பரஸ்பரம் பரிமாறிக்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பிக்குகளின் அமைப்பான அஸ்கிரிய பீடம் சமாதானத்திற்காக புலிகள் மீதான விட்டுக்கொடுக்கும் அரசியலை ஆரம்

(15ம் பக்கம் பார்க்க...)

# இழப்புக்களுக்கு அஞ்சினால் யுத்தம் நடத்த முடியாது

(சென்றவாரத் தொடர்ச்சி...)

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் உடனடியாகவே இவ்யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் சிறீலங்காவின் சிங்கள இனவாத அரசும் அதன் படைகளும் தமிழின அழிப்பும் தமிழ் மண் பறிப்புமே தமது இறுதி முடிவு என்ற ரீதியில் செயற்பட்ட போது தமிழீழ மக்களையும் தமிழீழ மண்ணையும் பாதுகாப்பதற்குச் சிறீலங்கா அரசு ஏவிவிட்ட யுத்தத்தை எதிர்கொள்வதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை.



1991 புரட்டாதி 1ம் நாள் தமிழீழப் பத்திரிகையாளர்களைச் சந்தித்து அப்போதைய அரசியல், இராணுவ நிலைமைகள் பற்றி விளக்கும்போது 'தமிழீழப் போர் 2' தொடங்கும் போது இருந்த பல சிங்கள இராணுவ முகாம்கள் தற்போது இல்லை. கொக்காவில், மாங்குளம் போன்ற இடங்களில் இருந்த இராணுவ முகாம்கள் அழிக்கப்பட்டதால் வன்னிப் பிரதேசத்தின் பெரும்பகுதி எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. யாழ் கோட்டை முகாம் அழிக்கப்பட்டதால் யாழ்ப்பாணத்தின் நகரப்பகுதியும் விடுவிக்கப்பட்டது. ஆனையிறவுப் போரில் மரபு ரீதியான இராணுவ அணியாக எதிரிகளுடன் நேரடியாக மோதி அழிக்கும் நிலையின் முதற்படியை எடுத்து வைத்தோம். பெரிய எண்ணிக்கையிலான இராணுவத்தை நீண்ட நாட்களாக தடுத்து வைத்துப் போரிட்டோம். ஆனையிறவுப் போரில் ஏற்பட்ட இழப்புக்களுக்கு அஞ்சினால் யுத்தம் நடத்த முடியாது. இழப்புக்களை வளர்ச்சியின் ஊன்றுகோலாகக் கருதவேண்டும். 10-07-91 இல் ஆனையிறவுப் போர் ஆரம்பித்து 23-08-91 வரையிலான 43 நாள் போரில் 564 போராளிகளை இழந்திருக்கிறோம். எதிர்பார்த்ததைவிட பெரியளவில் படையினர் இறக்கப்பட்டு நீண்ட நாட்கள் இடம்பெற்ற யுத்தத்தைப் பார்த்தால் எமது தரப்பிலான இழப்பு பெரிதெனச் சொல்ல முடியாது. துன்பங்களை அனுபவிக்கும் மக்களிடம் அடுத்து என்ன என்ற ஏக்கம் இருக்கத்தான் செய்யும். எனினும் பெரிய அளவில் அவர்கள் அணிதிரள வேண்டும். போராட்டத்தில் ஏற்படும் இழப்புக்களை உடனுக்குடன் ஈடுசெய்ய வேண்டும். மக்கள் முழுமையாக எம்மோடிணைந்து எமது கஷ்ட துன்பங்களையும் புரிந்து கொள்ள வேண்டும். நாம் நிபந்தனையற்ற வகையில சிறீலங்கா அரசுடன் பேசுவதற்கு எப்போதும் தயாரக இருக்கிறோம். ஆனால் பேச்சு வார்த்தைக்குரிய சூழ்நிலையை சிறிலங்கா அரசுதான் உருவாக்க வேண்டும். விடுதலைப் புலிகள் இலங்கைத் தீவில் சிறீலங்கா அரசுக்கு எதிராகத்தான் போராடுகிறார்கள். இந்திய அரசு விடுத லைப் புலிகளைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்றே கருதுகின்றேன்.

மலையகத் தமிழ் மக்களின் தொடரும் துன்பங்களுக்கு மலையகத் தலைமைகளின் தொ டரும் துரோகமே காரணம் என்பதை மலையகத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். எந்த ஆயுதத்தா லும் எத்தகைய குண்டு வீச்சாலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழித்துவிட முடியாது என்றார்.

(இன்னும் வரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலப் பெருநதியில் கரைந்தவை

**கோ. குமார குமாரன்**

மக்கள் எழுச்சி, விடுதலைப் போராட்டங்களின் இலக்கை மிக அண்மையாக்கியுள்ளமை, வரலாற்றில் நடந்தவையாகும். இத்தகைய தேசிய எழுச்சி தாயகத்தில் தம் வாழ்வையும், உயிர்களையும் விலையாகக் கொடுக்கும் மக்களிடம் மட்டும் இருந்தால் போதாது. உலகெங்கும் சிதறி வாழும் தமிழர்கள் தம் ஒட்டுமொத்த எழுச்சியையும் கருத்தொற்றுமையையும் காட்ட வேண்டும்.

இலத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த நிக்கரகுவா விடுதலைப் போராட்டம், மக்கள் எழுச்சிக்கு சிறந்த உதாரணம். 'சன்டினிஸ்டா' போராளிகளின் விடுதலைப் போரை உச்சநிலைக்குக் கொண்டுவந்த போது, இருந்த மக்கள் படையே வெற்றி இலக்கை விரைந்து எட்ட உதவியது.

சீனா, வியட்நாம், வடகொரியா, கியூபா, தென்னாபிரிக்கா உட்பட விடுதலைப் போர்களை வென்ற உலக நாடுகள் மக்கள் படையின் பங்களிப்புடனேயே வெற்றிபெற்றன.

மக்கள் எழுச்சி இந்தத் தேசங்களில் உயர்நிலைக்கு வந்தமைக்கு அந்த மக்களிடையே ஒட்டுமொத்தமாக ஏற்பட்ட தேசிய உணர்வே காரணமாகும். சீனாவில் மாவோ, கம்யூனிசப் புரட்சியை முன்னெடுத்தபோது, அங்கு பெரும்பான்மையாக இருந்த மக்களிடம் ''நீ ஒரு சீனன்'' என்ற தேசியக் கருத்துருவை வளர்த்ததன் மூலமே மக்கள் எழுச்சியை ஏற்படுத்தினார்.

இரண்டாம் உலகப் போர் வரை உலகெங்கும் சிதறி வாழ்ந்த யூத இனம் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் உயர்ந்து நின்றபோதும், தமக்கு என்று ஒரு தாயகம் இல்லாது ஏனைய நாடுகளில் அடிமையாக வாழ்வது அவர்களைப் பாதித்தது, தமக்கென ஒரு நாடு வேண்டும் என்பதை அவர்கள் பெருமைக்குரிய விடயமாகக் கருதினர். அதற்காக உழைத்தனர்.

வியட்நாமியர்களைப் போல, யூதர்களைப் போல, குர்தீஸ்களைப் போல ஒவ்வொரு ஈழத் தமிழரும் தன் தாயக உருவாக்கத்திற்கு எந்த வகையிலாவது உழைக்க வேண்டிய தருணம் இது.

## எழுச்சிக்குரல்

மேற்படி கருத்துக்கள் யாவும் ''தாய்மண் வெளியீடு'' ஆக பிரான்ஸிலிருந்து வெளியாகும் ''எரிமலை'' சஞ்சிகையின் ஓகஸ்ட் – 2001 இதழில் ''தாயகம்; எழுச்சியும் மீட்பும்'' என்ற தலைப்பில் தி.தவபாலன் எழுதிய கட்டுரையில் இடம் பெற்றன. எப்பொழுதும் எம் சிந்தையில் இருக்கவேண்டிய கருத்துக்கள் என்பதால் நன்றியுடன் மீள இங்கு தரப்பட்டுள்ளன.

1995 இன் ஆரம்பத்தில் யாழ்.இந்துக் கல்லூரியில் க.பொ.த (உ/த) கற்கத் தொடங்கிய வேளையில், சனிக்கிழமைகளில் இரவு 8.02க்கு வானொலியில் ஒலிபரப்பான ''புரட்சிக்குரல்'' நிகழ்ச்சிக்கு சில பிரதியாக்கங்கள் செய்வதற்கு என்னை ஊக்கப்படுத்தியவர் தி.தவபாலன், என்பதை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

நீதியான நிறைவான அமைதியையே மாபெரும் தியாகங்களினூடு வேண்டி நிற்கும் ஈழத் தமிழினம் சிறிலங்கா அரசாங்கத்தினது தற்போதைய மென்மைப் போக்கையிட்டு அவதானமாக இருப்பது உசிதமானது. இப்பின்னணியிலே ஜூன் 2001 ''எரிமலை'' சஞ்சிகையில் த.இளந்தளிர் எழுதிய ''பொய் முகங்கள்'' என்ற கவிதை இவ்வாற ''எழுச்சிக்குரல்'' ஆக எழுகின்றது.

**''பூபாளம் இசைக்கின்ற புலர் காலைப்**
**பொழுதோடு எங்கள் வாசலெங்கும்**
**ஏராளம் புது முகங்கள்..... யாரங்கே!**
**எம் வீதியெங்கணும் விழாக்கோலம்**
**பூணட்டும் மஞ்சள் தெளித்து...**
**மாவிலை தூக்கி... தென்னங்**
**குருத்தெடுத்து(த்) 'தோரணம்'**
**பின்னுக! ஒவ்வோர் வீட்டினுள்ளும்**
**ஊதுபத்தி மணக்கட்டும் பன்னீர்**
**தெளித்து(ப்) பரவசப்படுத்துக!**
**உரத்துப் பறை முழங்கும் ஒப்பாரி**
**நிறுத்தி(ப்) போன ஆண்டின்**
**புலம்பல்கள் நீக்குக! இந்தப்**
**புத்தாண்டின் இடர் களைந்தெடுக்க**
**எங்கள் வாசலெங்கும் ஏராளம் புது**
**முகங்கள்... என்னென்ன தேவை?**
**ஏதேது தேவையில்லை?**
**விண்ணப்பங்கள் இனி**
**வெளியிடப்படலாம் பீடிகை**
**வேண்டாம். பிணக்குகள் வேண்டாம்.**
**'பிரித்தோதும்' புத்திஜீவிகள் - இனி**
**பிரித்து.... ஓத மாட்டார்கள் 'மகஜர்'**
**கலாசாரம் மாற்றப்படும்**
**மனுத்தாக்கல் செய்யின்**
**ஏற்கப்படும். என்னென்ன தேவை?**
**ஏதேது தேவையில்லை? சென்ற**
**நூற்றாண்டின் செம்மணிகள் மறக்க...**
**வண்ணக் கனவுகள்**
**வாடகைக்கு விடப்படும்.**
**பின்னர்... வசதிகள் வரும்...**
**வாகனம் வரும்... மின்சாரம்...**
**மினுக்குப் பெட்டி... ரெயில்....**
**ரெலிபோன்... ஏ.சி... என்ன**
**வா..ழ்..க்..கை**
**வரலாம்... வருமெண்டு மட்டும்**
**வாக்குறுதி தர இயலாது(து)**
**முன்னுக்குப்... பின் முரணாய்...**
**முழங்கித் தள்ளும் அரசியலுக்கு...**
**அழகில்லைப் பாருங்கோ'**
**'மானம் துறந்தேற்றி டிரயை செய்**
**அரசி(ல்)**
**மகிழ்வாங்கு மக்கள் வாழல்**
**மகாயீனம்'**
**தங்க முலாம் பூசி(த்)**
**தரமென்ற 'பொய் முகங்கள்...**
**காலப் பெரு நதியில்**
**கரைந்தே உள!''**

# அடாவடித்தனம் புரிவோரைத் தண்டிப்பதற்கு - மூவின ஒற்றுமைக் குழு -

## அரசியலில் ஓர் எழுத்தாளரின் அனுபவம்

**அருண்**

(சென்றவாரத் தொடர்ச்சி....)

வந்தவர்கள் முகாம் பற்றிய தகவல்களையெல்லாம் கேட்டனர். அவனும் பொறுமையாகக் கூறினான். ''குழந்தைகள் எத்தனை பேர்? ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனை பேர்?'' என்றெல்லாம் கேட்டுப் பதிலைப் பெற்றுக் கொண்டார். ''திடீரென யாருக்காவது சுகவீனம் ஏற்பட்டால் மருத்துவமனைகளில் கொண்டுசெல்ல வாகன வசதி இருக்கிறதா?'' என்று கேட்டனர். ''முகாமில் ஒரு பழைய வாகனம் நிறுத்தப்பட்டிருந்ததால் அதில் கொண்டு போகலாம்'' என்று அவன் பதிலளித்தான்.

எவ்வளவோ திருப்தியான பதில்களைப் பெற்றுக்கொண்ட போதிலும் அந்த அதிகாரிகள் குழுவின் தலைவர் மன நிறைவு எய்தியவராகத் தெரியவில்லை. கிராம உத்தியோகத்தர் ரஸிக்கீனிடம் குற்றம் சுமத்தும் வண்ணம் கேள்வி கேட்கத் தொடங்கினார். ஒரு கட்டத்தில் ''நான் யாழ்ப்பாணத்தில் பதினைந்து வருடங்களாக எவ்.எல்.ஏ.எஸ் அதிகாரியாக இருந்தவன். எனக்குப் படிப்பிக்கிறாயா?'' என்று திமிர்த்தனமாகக் கேட்டார். மக்கள் முன்னிலையில் கிராம உத்தியோகத்தர் அவமானப்பட்டதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வெறுமனே தரவுகளை மட்டும் பெற்றுச்செல்ல வந்தவர்கள் செயல்படும் அதிகாரியொருவரை கேவலப்படுத்துவதை அவனால் சகிக்க முடியவில்லை. அந்த அதிகாரியை பண்பான வார்த்தைகளால் காரசாரமாகக் கேட்டு'' வைத்தான். வாயடைத்துப் போன அந்த அதிகாரி உடனடியாகக் கிளம்பினார். அந்தக் கோஷ்டியில் வந்திருந்த அலுவலர் ஒருவர் அவனிடம் நெருங்கி ரகசியமாகக் கைகொடுத்து விட்டு ''உருப்படியான காரியம் செய்ய முடியாத இவர்களுக்கு சரியான சூடு கொடுத்திருக்கிறீர்கள். என்று கூறியபடியே வாகனத்தில் ஏறிக் கொண்டார்.

இதற்குள்ளாக, சோனகவாடிப் பக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர், தமது குடியிருப்புக்கு அருகிலுள்ள தமிழ் வீடுகளுக்கு ஒருநாள் வந்து பயமுறுத்திச் சென்றிருக்கிறார்கள். இது திட்டமிட்ட செயலா? எதேச்சையான காரியமா? என்று விளங்கவில்லை. வந்தவர்கள் தமிழர்களைத் தரக்குறைவாகப் பேசியதோடு, விடுதலைப் புலிகளுக்கும் சவால் விட்டார்கள். இது அவர்களது இராஜ விசுவாச முயற்சியாக இருக்கலாம். பல வீடுகளில் வளர்க்கப்பட்ட வாழைகள், பூஞ்செடிகள் என்பவற்றை வெட்டிச் சாய்த்து விட்டார்கள். முத்துக்குமாரசாமி கோவிலடி சாரதா வீதி, கீரைத் தோட்டம் என்றழைக் கப்படும் மின்சார நிலைய வீதியின் ஒரு பகுதி என்பவை இவர்களின் அடாவடித்தனங்களுக்கு இலக்காயின. இவர்களின் அடாவடித்தனங்களால் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக கீரைத் தோட்டத்தில் வயோதிபர் ஒருவர் உடனடியாக உயிரிழந்தார்.

சோனக வாடியிலிருந்து இவ்வாறான ஒரு கோஷ்டி புறப்பட்டமை முழுத் தமிழர்களையுமே ஆச்சரியத்திலாழ்த்தியது. சோனகவாடி முஸ்லிம்கள் தமிழர்களோடு இரண்டறக் கலந்தவர்கள். சமயத்தைத் தவிர வேறெதுவும் அவர்களைத் தமிழர்களிடமிருந்து பிரிக்கவில்லை. காலங்காலமாக ஒரு வயிற்றுப் பிள்ளைகளாக ஒருவர் இன்பதுன்பங்களில் மற்றவர் பங்குகொண்டு இரு சாராரும் வாழ்ந்து வருகிறார்கள். இன்னும் கூட வாழ்ந்து வருகிறார்கள். இதனால் தான் தமிழர்கள் பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில் இந்தப் பகுதி இளைஞர்கள் இப்படி நடந்து கொண்டது அதிருப்தியைத் தோற்றுவித்தது.

உடனடியாகப் பாதுகாப்பு தரப்பினர் நடவடிக்கையில் இறங்கினார்கள். அப்போது நிக்கவரெட்டியப் பகுதி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகப் பணியாற்றிக் கொண்டிருந்த விஜயசேகர திருகோணமலைக்கு, விசேட கண்காணிப்புக்கென வரவழைக்கப்பட்டிருந்தார். இவர் மூதூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி, பின்னர் பதவி உயர்வு பெற்று திருகோணமலை பொறுப்பதிகாரியாகவும் நீண்டகாலம் பதவி வகித்தவர். இவரை ஒரு கடுமையானவர் என்று [illegible] பேச அவன் கேட்டிருக்கிறான். ஆனால் மூதூரில் கடமையாற்றிய காலத்தில் உத்தியோக ரீதியில் அவனோடு நெருங்கிப் பழகியதாலோ என்னவோ அவனைப் பொறுத்தமட்டில் விஜயசேகர குழந்தை மனம் படைத்தவராகவே நடந்து கொண்டார்.

விஜயசேகர அவர்களால் ஒரு சமாதானக் கூட்டம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு பகுதியையும் சேர்ந்த ஊர் முக்கியஸ்தர்கள் வரவழைக்கப் பட்டிருந்தார்கள். அப்போதைய பிரிகேடியர் லக்கி விஜயவர்த்தனாவும், மேடையில் சமூகமளித்திருந்தார். பின்னாளில் இதேலக்கி விஜயவர்த்தனாவும், எஸ்.எஸ்.பி.விஜயசேகராவும் பன்குளம் சென்று திரும்பிக் கொண்டிருந்தபோது கண்ணிவெடியில் ஒன்றாகவே பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

விஜயசேகரதான் பேசினார் சோனகவாடிச் சம்பவத்தைக் குறிப்பிட்டு, ''எங்கள் நிர்வாகத்தில் எவரும் எவர் மேல் ஆதிக்கம் செலுத்த அனுமதிக்க மாட்டோம்'' என்ற சாரம்பட உரையாற்றி, தொடர்ந்து குரோதங்கள் ஏற்படாதிருக்க ஒற்றுமைக்குழு அமைக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இந்தக் குழுவிலே தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் அடங்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

குழு அமைப்பது சம்பந்தமாகப் பொது மக்களின் கருத்துக்களும் கோரப்பட்டன. தமிழர் விடுதலைக் கூட்டணி மாவட்டக் கிளையில் முக்கியஸ்தர்களில் ஒருவரான சிறீஸ்கந்தராசா எழுந்தார். ''இந்த ஒற்றுமைக் [illegible] அமைக்க வேண்டிய [illegible]நவை சோனகவாடி இளைஞர்களின் அடாவடித்தனம் காரணமாகவே உருவானது. இங்கே சகல பகுதிகளையும் சேர்ந்த தமிழ், சிங்கள முஸ்லிம் முக்கியஸ்தர்கள் குழுமியிருக்கின்ற போதிலும், சோனகவாடியைச் சேர்ந்த ஒருவரைக் கூடக் காணவில்லை. இந்த நிலையில் ஒற்றுமைக்குழு அமைப்பதில் என்ன லாபம்''? என்று கேட்டு விட்டார்.



விஜய சேகராவின் குழந்தைத்தனமான முகம் ''குப்'' என்று சிவந்தது. பார்வையாளர் மத்தியிலிருந்து சோனகவாடி கிராம உத்தியோகத்தரை மேடைக்கு அருகில் அழைத்து காரமாக விசாரித்தார். தான் எல்லோருக்கும் கூட்டம் பற்றித் தெரியப்படுத்தியதாகவும் அவர்கள் வராமல் விட்டுவிட்டனர் என்றும் கிராம உத்தியோகத்தர் தயக்கத்துடன் தெரிவித்தார். உடனடியாக கிராம உத்தியோகத்தருடன் பொலிஸ் வாகனம் சோனகவாடிப் பக்கம் பறந்து பத்து நிமிடங்கள் கூட ஆகவில்லை. பல பிரமுகர்கள் இழுத்து வரப்பட்டு இறக்கப்பட்டார்கள். குழுவொன்று அமைக்கப்பட்டது. தமிழர்கள் சார்பில் சமாதான நீதிவானும், கோணேஸ்வரன் ஆலயப் பரிபாலனசபைத் தலைவருமான சட்டத்தரணி மு.கோ.செல்வராசா நியமிக்கப்பட்டார். ஏனையவர்கள் பற்றி அவனுக்கு நினைவில்லை.

குழு உடனடியாக பொலிஸ் வாகனத்தில் சகல இடங்களுக்கும் விஜயம் செய்தது. ஏதாவது ஒரு பகுதியைச் சேர்ந்த எவராவது அடாவடித்தனத்தில் ஈடுபட்டால் அந்தந்தப் பகுதி முக்கியஸ்தர்களே பொறுப்பு எனவும், அவர்களே முதலில் கைது செய்யப்பட்டு அதன் பின்னரே சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் காரசாரமான எச்சரிக்கை ஒவ்வொரு பகுதி முக்கியஸ்தர்களுக்கும் தனித்தனியாக விடுக்கப்பட்டது. இந்தப் புதுவகை உத்தி எதிர்பார்த்ததைவிடக் கூடிய பலனைத் தந்தது. சோனகவாடியிருந்து வந்த இளைஞர்களின் செயற்பாட்டினால் இந்தப் பகுதி நிரந்தரக் குடியிருப்பாளர்கள் தங்களுக்குள்ளேயே வெட்கமும் வேதனையும் அடைந்திருந்தனர் என்பதை இவன் பின்னர் அறிந்து கொண்டான். இந்தக் குற்றவுணர்வு காரணமாகவே சமாதானக் கூட்டத்துக்கு கூட வருகை தரப் பிமுகர்கள் தயங்கியதாகவும் அவன் அறிந்தான். வர்த்தகதத்துக்காகப் பிற ஊர்களிலிருந்து வந்து தங்கள் பகுதியில் தங்கியிருந்த இளைஞர்களின் கேவலமான நடத்தையால் தாங்கள் தலைகுனிந்து கொண்டதாகப் பல முஸ்லிம் நண்பர்கள் அவனிடம் கூறி தங்கள் வருத்தத்தை வெளிப்படுத்திக் கொண்டார்கள்.

(அடுத்தவாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிமலராஜன் கொலை விவகாரம் அம்பலத்துக்கு வராத சங்கதிகள்

மாமனிதர் குமார் பொன்னம்பலம், ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் போன்றவர்களின் படுகொலை தொடர்பாக மீள் விசாரணைகளை ஆரம்பிக்கும்படி இரகசியப் பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

2000ம் ஆண்டில் இடம் பெற்ற இந்த இரண்டு படுகொலைகள் தொடர்பாகவும் இதுவரையில் முன்னேற்றகரமான விசாரணைகள் நடத்தப்படவில்லை என்பதுடன் எந்த சந்தேக நபரையாவது பொலிசார் கைது செய்யவும் இல்லை.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் பல்வேறு தரப்புக்களில் இருந்து மேற்படி படுகொலைகள் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அடுத்தே மீள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த மீள் விசாரணை யாவது குற்றவாளிகளைக் கூண்டில் ஏற்றும் வகையில் நடத்தப்படுமா என்பது குறித்து இப்போதே சந்தேகங்கள் தோன்றியிருக்கின்றன. காரணம் என்னவெனில் நிமலராஜன் கொலை வழக்கில் சந்தேக நபர்களாக உள்ளவர்களுக்குப் படையினர், பொலிஸார் மத்தியில் உள்ள செல்வாக்குகளேயாகும்.

ஊடகவியலாளர் நிமலராஜன் கொலை வழக்கு நாடாளுமன்றத் தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்னரே உயிர் பெறத் தொடங்கியிருந்தது. சந்தேக நபர்களான நெப்போலியன் மற்றும் முரளி என்பவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தும்படி நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த இரண்டு சந்தேக நபர்களும் ஈ.பி.டி.பி யின் முக்கியஸ்தர்களாகும். நிமலராஜன் கொலைக்கு ஈ.பி.டி.பி அமைப்பே காரணம் என அன்று முதல் மக்களும், அரசியல் கட்சிகளும் மட்டுமன்றி உத்தியோக பூர்வமற்ற வகையில் கருத்துத் தெரிவித்த போலிஸ் அதிகாரிகளும் நம்புகின்றனர்.



இந்த நிலையில் தீவகத்தில் கூட்டமைப்பினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் நெப்போலியனின் பெயர் அடிபட விவகாரம் சிக்கலானதாக மாறியது. ஆனால் பொலிசார் இந்தச் சந்தேக நபர்கள் விடயத்தில் மிகுந்த தயவை கடைப்பிடித்து வருகின்றனர்.

தீவகப் பகுதியில் மிகச் சுதந்திரமாக நடமாடித் திரியும் சந்தேக நபர்களைக் கைது செய்யாமல் வேடிக்கை பார்த்திருக்கும் பொலிசார் நீதிமன்றத்தில் வந்து சந்தேக நபர்கள் தமது ஆதிக்கப் பிரதேசத்தில் இல்லை எனச் சொல்லி நீதவானையே ஏமாற்றும் கைங்கரியத்தில்தான் ஈடுபட்டு வந்துள்ளனர்.

கூட்டமைப்பினர் மீதான தாக்குதலின் சந்தேக நபரான மதனராசா நீதிமன்றில் சரணடைந்த பின்னர் கூட நெப்போலியன் என்ற பிரதான சந்தேகநபரும் முரளி என்ற சந்தேகநபரும் பொலிஸாரிடம் பிடி கொடுக்காமல் (?) பகிரங்கமாக நடமாடிவருதாகத் தகவல்கள் தெரியவந்துள்ளன.

**யாழிலிருந்து கண்ணன்**

மூன்று வாரங்களுக்கு முன்னர் ஊர்காவற்றுறைப் பகுதியில் நெப்போலியன் ஒரு பிரிவுபசார விருந்து வைத்தாகவும், அதில் பொலிஸ் அதிகாரி ஒருவரும் ஆறு பொலிசாரும் கலந்து கொண்டதாகவும் நள்ளிரவுவரை இந்த விருந்து நீடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் இவர் நெடுந்தீவுக்குச் சென்று தன்னிடமுள்ள பெறுமதியான பொருட்களை 'மாதா' என்ற படகில் ஏற்றி இந்தியாவுக்குச் செல்ல முனைந்ததாகவும், ஆனால் அவருடன் கூட வருவதற்கு படகோட்டிகள் மறுத்ததால் பயணம் தடைப்பட்டதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இது போன்றே முரளி கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் கிறாம்பியடியில் உள்ள தனது வீட்டுப் பகுதியில் அடிக்கடி நடமாடித் திரிந்ததாகவும், பின்னர் இராணுவத்தினரால் இவர் வாகனம் ஒன்றில் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் பத்திரிகைச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இவர் இராணுவத்தினரால் பாதுகாப்பாகக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என ஊர்ஜிதமற்ற தகவல்கள் கிடைத்துள்ளன.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது நிமலராஜன் கொலை சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களைச் சட்டத்தின் பிடியில் இருந்து பாதுகாக்க படைத்தரப்பும், பொலிசாரும் மிகுந்த அக்கறை காட்டுவதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

நிமலராஜன் கொலை தொடர்பாக தமிழ் கட்சித் தலைவர் ஒருவர் பொலிசாரால் விசாரிக்கப்பட்டதாக வெளிவந்த தகவல்களுடன், ஈ.பி.டி.பி செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவை பத்திரிகை ஒன்று தொடர்புபடுத்தி செய்தி வெளியிட்டதற்கு அக்கட்சி மறுப்புத் தெரிவித்துள்ளது.

அத்துடன் தம்மை வீணாக இதில் மாட்டச் சில சக்திகள் முனைவதாகவும் ஈ.பி.டி.பி கூறியுள்ளதுடன், வேறொரு அறிக்கையில் நிமலராஜன் கொலை தொடர்பான மீள் விசாரனை ஆரம்பிக்கப்படுவதை வரவேற்பதாகவும் கூறியுள்ளது.

மீள் விசாரணை என்பது தற்போதைய நிலவரங்களை வைத்துப் பார்க்கும் போது வெறும் புஸ்வாணமாகவே போய் விட வாய்ப்புகள் உள்ளன. ஏனெனில் சந்தேக நபர்களைப் படையினரும் பொலிசாரும் பாதுகாக்க முனைவதில் இருந்து இந்தக் கொலை தனியே ஏற்கனவே சந்தேகிக்கப்படும் சக்திகளால் மட்டுமன்றி அதிகார மட்டத்தினாலும் திட்டமிடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

இராணுவத் தோல்விகளை சிங்கள மொழியில் குடா நாட்டில் இருந்து வெளிப்படுத்தி வந்த ஒரே ஊடகவியளாளரை கொல்லப் பாதுகாப்பு தரப்பிலும் ஒத்துழைப்பு கிடைத்திருக்கலாம். இப்போது சந்தேகநபர்களுக்கு கிடைக்கும் பாதுகாப்பு இதை உறுதி செய்கிறது.

இவ்வாறான நிலை இருக்குமேயானால் நிமலராஜன் கொலை வழக்கின் குற்றவாளி கள் எப்போதுமே கூண்டில் ஏறுவது சாத்தியமில்லை. இராஜ மரியாதையுடன் அவர்கள் இருக்கவே வாய்ப்புகள் உள்ளன. □

# அடிப்படை வசதி இன்றி அல்லலுறும் நாசிவன் தீவு மக்கள்

வாழைச்சேனைக்கு வடக்கே உள்ள வாவிக்கு அப்பாலுள்ள கிராமமே நாசிவன் தீவு கிராமம். 1957 ஆம் ஆண்டு கோறளைப்பற்று பிரதேச செயலக நிர்வாகத்திற்குள் உட்படாத பழைமை வாய்ந்த கிராமம். மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் இந்தக் கிராமம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கூட தெரியாமல் இருக்கலாம். ஏனெனில், இது வரையில் எந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் நாசிவன்தீவு கிராமத்திற்கு வந்து கிராம மக்களின் குறைகளை கேட்டறிந்து தீர்த்து வைக்கவில்லை.

அத்தியாவசிய அடிப்படை வசதிகளின்றி அல்லல்படும் நாசிவன் தீவு கிராம மக்கள் குறைகளை தீர்த்து வைக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வருவார்களா?

இக் கிராமத்தில் சுமார் 300 க்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. இதில் 575 க்கு மேலுள்ளவர்கள் வாக்களிக்கும் தகுதி உடையவர்களாவர். இருந்த போதிலும் அக்கிராம மக்களின் அடிப்படை வசதிகள் கூட இதுவரையில் ஓரளவேனும் நிறைவேற்றப்படாத நிலையிலேயே உள்ளது.

**போக்குவரத்து:-** இக் கிராமத்திற்கான போக்குவரத்தில் மக்கள் பெரும் கஷ்டங்களையே அனுபவிக்கின்றனர். தினமும் காலை பாடசாலை மாணவர்களுக்கான பஸ் சேவை மாத்திரமே நடைபெறுகின்றது. நாசிவன் தீவு வாழைச்சேனைக் கிடையிலான சேவை நடைபெறுகின்ற போதிலும் கூடுதலான மக்கள் வாழைச்சேனை நாசிவன்தீவு ஆற்றைக் கடந்து தோணிகள் மூலமே துறையை கடந்து தான் அன்றாட கடமைகளை நிறைவேற்றுகின்றனர். இருந்த போதிலும் இத்துறையினூடாக பிரயாணத்தினை மேற்கொள்ளும் போது விபத்துக்களுக்குள்ளாகி உயிரிழந்தவர்களும் அதிகமே. குறிப்பிட்ட ஆற்றைக் கடக்க ஒருவருக்கு 10ரூபா அறவிடப்படுவதும் குறிப்பிடத்தக்கது.



**கல்வி:-** மேற்படி கிராமத்தில் 1957ம் ஆண்டு அமைக்கப்பட்ட பாடசாலையில் 8ம் ஆண்டு வரையான வகுப்புக்கள் இடம் பெறுகின்ற போதிலும் போதிய ஆசிரியர்கள் இல்லாமையினால் கல்வித் திட்டத்திற்கமைய கல்வியினை போதிப்பதிலும் பாடசாலை நிர்வாகம் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி உள்ளது. 14 ஆசிரியர் தேவையாக உள்ள பாடசாலை அதிபர் உட்பட 6 ஆசிரியர்களே உள்ளனர். இப் பாடசாலையில் தண்ணீர் வசதி, மலசல கூட வசதி கூட இல்லாமல் மாணவர்கள் கஷ்டத்தினை எதிர்நோக்குகின்றனர்.

**தொழில்:-** இக் கிராமத்தின் மக்களின் சீவனோபாய தொழிலாக வழங்குவது மீன் பிடியே. இக் கிராமமக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதினால் கூடுதலானோர் ஆற்றிலேயே மீன் பிடித் தொழிலை நாடிய போதிலும், கடலில் மீன் பிடிக்கும் அளவுக்கு பாரிய இயந்திரப் படகுகளோ பெரிய அளவிலான மரத்தோணிகளையோ பயன்படுத்த பொருளாதார வசதி இன்றி பெரும் பின்னடைவை சந்தித்துள்ளனர். சுய தொழில் கடன் திட்டத்தின் அடிப்படையில் எகட, தடாகம், என்பன மட்டுமே சிறிய அளவில் கடன்களை வழங்க உதவி வருகின்றன.

**வீடமைப்பு:-** வீடமைப்பைப் பொறுத்தவரையில் 1989ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த பிரேமதாசாவின் காலப்பகுதியில் கிராமிய வீட்டுத் திட்டத்தின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட (I.V.S) வீட்டுத் திட்டத்தின் மூலமே கட்டிக் கொடுக்கப்பட்ட போதிலும் சில வீடுகள் பூரணமாக நிறைவேறாத நிலை யில் இடைநிறுத்தப்பட்டன.

இது வரையில் மீனவர் கிராமிய வீடமைப்பு திட்டத்தின் மூலம் எந்தவித உதவியுமே கிடைக்கவில்லை என்ற போதிலும் எவருமே இக்குறைபாடுகளை கண்டும் அறிந்தும் கண்ணையும் காதையும் மூடிக்கொண்டு இருப்பது புதுமையே

**ஆலயங்கள்:-** இக் கிராமத்தில் பத்திரகாளி அம்மன் ஆலயம் பிள்ளையார் ஆலயம் ஆகிய இரு ஆலயங்கள் இருக்கின்றன. ஆனால் கடந்த 1990ம் ஆண்டு வன்செயலின் போது சேதமாக்கப்பட்டும் பல முறை புனர்வாழ்வு கொடுப்பனவு பெறுவதற்கு விண்ணப்பித்தும் இது வரை எந்தவித பலனும் கிடைக்க வில்லை.

**மின்சாரம்:-** மேற்படி நாசிவன் தீவு கிராமத்திற்கு தியாவட்டவான் மூலமாக 1990ம் ஆண்டுக்கு முன்னர் நாசிவன்தீவு கிராமத்தின் முன் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்ட போதிலும் தற்பொழுது மின்கம்பிகள் எதுவும் இல்லாத நிலையில் சுமார் 10 வருட காலமாக மின்சாரத்தை பெறமுடியாமல் தவிக்கும் நிலையே இக் கிராமத்துக்கு நிகழ்ந்துள்ளது.

**வைத்திய வசதி:-** இக் கிராமத்தைப் பொறுத்த வரையிலே இங்கு தாய்மாரும் குழந்தைகளும் போசாக்குகுறவைாகவே காணப்படுகின்றனர். வாழைச்சேனை சுகாதார திணைக்களத்தினால் மாதத்தில் கடைசிப் புதன்கிழமை மாத்திரமே நடமாடும் சிகிச்சை அழிக்கப்படுகின்றது.

எது எவ்வாறு இருபபினும் தற்செயலாக இரவு வேளைகளில் நோய்வாய்ப்பட்டு வைத்திய சாலைக்கு அனுமதிக்கப்பட வேண்டி இருப்பின் பொது

**த.நிமலன்**
**கறுவாக்கேணி**

மக்கள் அன்றாடம் மிகக் கஷ்டப்பட்டே வைத்தியசாலைக்கு வர வேண்டி உள்ளது. குறிப்பாக பிரசவ வலியினால் துடிக்கும் ஓர் பெண்ணை வாழைச்சேனை வைத்தியசாலைக்கு கொண்டு வர வேண்டுமாயின் வேதனையுடன் ஆற்றைக் கடக்க வேண்டும் அல்லது தியாவட்டவான் ஓட்டமாவடி பாலம் ஊடாக வாழைச்சேனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

எனவே இவ்வாறான அடிப்படை வசதிகளை பெற முடியாத அன்றாடம் கஷ்டப்படும் மக்களின் குறைகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்த்து வைக்க வேண்டும். அத்துடன் எமது மட்டக்களப்பு மாவட்டத்தில் செயலபடும் தொண்டர் நிறுவனங்கள் தங்கள் செயல் திட்டங்களை இவ்வாறான பிரதேசங்களிலும் செயல்படுத்த முன் வரவேண்டும். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியப் பெருவிழா - 2001 ஆளுநர் விருது பெற்ற கலைஞர்கள்

## திரு.இரா.நாகலிங்கம்
**-அன்புமணி-**
**(மட்டக்களப்பு)**

**1935** ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6ம் திகதி மட்டக்களப்பு ஆரையம்பதியில் பிறந்த இரா.நாகலிங்கம் அவர்கள் ~~வடக்கு கிழக்கு மாகாண~~ காணி, விவ சாய கூட்டுறவு அமைச்சின் சிரேஷ்ட உத விச் செயலாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.



இலங்கை நிர்வாக சேவையின் உயர் அதிகாரியாகப் பல பிரதேசங்களில் கடமையாற்றி சிறந்த ஒரு நிர்வாகியாக விளங்கிய இரா.நாகலிங்கம் அவர்கள் ''அன்புமணி" என்ற புனைப் பெயரில் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், சமய, கல்வி, கலை, இலக்கியக் கட்டுரைகளையும், வானொலி, மேடை நாடகங்களையும் படைத்துள்ளார்.

1992 ஆம் ஆண்டு இந்து சமய, பண்பாட்டுத் திணைக்களத்தினால் ''தமிழ் மணி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இரா.நாகலிங்கம் அவர்கள் கிழக்கிலங்கையின் சாதனைகளையும், பெருமைகளையும் ஆவணங்களாக்கி தேசிய இலக்கிய நீரோட்டத்தில் கலக்க வைக்க வேண்டும் என்ற இலக்கில் கிழக்கிலங்கை வரலாறு தொடர்பான தகவல்களைச் சேகரித்து ஆவணப் படுத்தி வருகின்றார்.


சுதந்திரன், வீரகேசரி, தினகரன், ஈழநாடு போன்ற பத்திரிகைகளிலும், கல்கி கங்கை, தேனருவி போன்ற சஞ்சிகைகளிலும் இவரது சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் வெளி வந்துள்ளன.

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக நூல் வெளியீட்டு துறையிலும் திறமையுள்ள கலைஞர்களைக் கௌரவித் தும், ஊக்குவித்தும் மட்டக்களப்பின் அரிய நூல்களை மறுபிரசுரம் செய்தும் இலக்கியப் பணியை ஆற்றி வருகின்றார்.

அன்புமணி அவர்களின் 40 வருட கலை, இலக்கியப் பணிகளைக் கௌரவிக்கும் முகமாக 2001 ஆம் ஆண்டிற்கான கௌரவ ஆளுநர் விருது வழங்கப்படுகின்றது

## கவிஞர் எம்.எம்.அகமது லெப்பை
**-சாந்தி முகைதீன்-**
**(மட்டக்களப்பு)**

**1942** ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காத்தான்குடியில் பிறந்த எம்.எம். அகமது லெப்பை அவர்கள் 1965 ஆம் ஆண்டிலிருந்தே கலை, இலக்கியப் பணியை ஆற்றி வருகின்றார். ''சாந்திமுகைதீன்" என்ற புனைப்



பெயரில் பல நூற்றுக்கணக்கான கவிதைகளையும், வில்லுப் பாட்டுக்களையும், நாடகங்களையும் ஆக்கியுள்ள இவர் வீரகேசரி, அவதானி, பாவலன், காத்தான் குடிக்கவிராயர் ஆகிய புனைபெயர்களில் தனது இலக்கியப் பணிகளை ஆற்றி வருகிறார். காத்தான்குடி நவ இலக்கிய மன்றம் சிறப்பாக இயங்கி வருவதில் கவிஞர் சாந்தி முகைதீன் ஆற்றி வரும் பணி அளப்பரியது.

பல்வேறு அரங்குகளில் இவர் ஆற்றிவரும் விமர்சன உரைகள் கவிதைவடிவில் அமைந்திருப்பதால் பலரதும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. மட்டக்களப்பு அரச அதிபரின் தலைமையின் கீழ் செயற்படும் மட்டக்களப்பு கலாசாரப் பேரவையின் உறுப்பினராகக் கடமையாற்றி வருகின்றார்.

கவிஞர் சாந்திமுகைதீன் தனது ஆக்க இலக்கியப் பணிகளுடன் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் மக்களின் பாரம்பரியக் கலைகளான கழிகம்பு, நாட்டுக் கூத்து, வாவாப்பாட்டு, போன்ற கலைகளையும் பயிற்று வித்தும் அரங்கேற்றியும் வந்துள்ளார்.

**இலக்கிய மைதானம்**

கடந்த 36 வருடங்களாக கவிஞர் எம்.எம். அகமது லெப்பை அவர்கள் கலை, இலக்கியப் பணிக்கும் பிரதேச கிராமியக் கலை வளர்ச்சிக்கும் ஆற்றிவரும் பணியைக் கௌரவிக்கும் முகமாக 2001 ஆம் ஆண்டிற்கான கௌரவ ஆளுநர் விருது வழங்கப்படுகின்றது.

## திரு.கணபதி மானாகன்
**(மட்டக்களப்பு)**

**1936** ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டம் கன்னங்குடாவில் பிறந்த திரு.கணபதி மானாகன் கடந்த 45 வருடங்களுக்கு மேலாக நாட்டுக் கூத்து, கரக ஆட்டம் ஆகிய நாட்டார் கலைகளை வளர்த்து வருகின்றார். சிறுவயது தொடக்கம் கூத்துத் துறையில் ஈடுபட்டுவரும் திரு.கணபதி மானாகன் 215 இற்கும் மேற்பட்ட வடமோடி, தென்மோடி, நாட்டுக்கூத்துக்களைத் தயாரித்து மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பல்வேறு பிரதேசங்களிலும் மேடையேற்றி பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

இளம் சந்ததியினர் மத்தியில் கிராமியக் கலைகளைப் பேணிப்பாதுகாக்கும் வகையில் கொம்புமுறி, வசந்தன், கூத்து, கரகம், முதலிய பல்வேறு வகை கிராமியக் கலைகளைப் பழக்கி வருகின்றார்.

கடந்த 45 வருடங்களுக்கு மேலாக மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராமியக் கலைகளின் வளர்ச்சிக்கு திரு.கணபதி மானாகன் ஆற்றிவரும் சேவையை கௌரவிக்கும் முகமாக 2001 ஆம் ஆண்டிற்கான கௌரவ ஆளுநர் விருது வழங்கப்படுகின்றது.

# ஜனனம் முதல் மரணம் ஈறாகவும் மனிதருடன் தொடர்புபட்ட -நாட்டுப்பாடல்கள்-

**ஆ.கோடிஸ்வரன்**

மனித வாழ்க்கையில் ஜனனம் முதல் மரணம் வரை தொடர்புபட்டுள்ள நாட்டார் பாடல்களை ஆய்வாளர்கள் தாலாட்டுப் பாடல்கள், விளையாட்டுப்பாடல்கள், தொழிற்பாடல்கள், காதற் பாடல்கள், பக்திப்பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள் என வகைப்படுத்தியுள்ளனர். இப்பாடல்களில் பெரும்பாலானவை சிறுவர்கள் சாராத இளைஞர்கள்,யுவதிகள்,முதியோர்கள் போன்றவர்களோடு தொடர்புபட்டுக் காணப்படுகின்றன. சிறுவர்களுக்காகத் தாலாட்டுப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள் ஆகியன காணப்படுகின்ற பொழுதும் இப்பாடல்களில் பெரும்பாலானவற்றை சிறுவர்கள் உருவாக்கிப் பாடியுள்ளனர் என்பதே நோக்குதற்குரிய விடயமாகும்.



சிறுவர்களுக்கான பாடல்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை யாவன.

1) சிறுவர்களுக்காகப் பிறர் பாடிய பாடல்கள்
2) சிறுவர்கள் பாடிய பாடல்கள்.

இப் பிரிவுகளுள் சிறுவர்கள் பாடிய பாடல்கள் முக்கியமானது. அப் பாடல்களுக்கென்று தனித்தன்மைகள் உண்டு. இப் பாடல்கள் உருவிலே தாலாட்டையும் தெம்மாங்கையும் விட வேறுபட்டுத் தோன்றுகின்றன. இப் பாடல்களைப் பார்த்ததும், படித்ததும் இது சிறுவர்பாடல்களே என்று சொல்லும் வகையில் எளிய, இனிய பேச்சு வழக்குச் சொற்களையும், சந்த அமைப்பினையும் கொண்டு விளங்குகின்றன. சிறுவர் பாடல்கள் கல்லில் வார்த்த அடைகள் அல்ல. ஒரே அளவாக ஒரே நிறமுடையனவாக இருக்க. இவைகள்கானில் பூத்தமலர்கள். காற்றில் மிதக்கும் பாட்டாம் பூச்சிகள். இப் பாடல்கள் செய்யப்பட்டவை என்பதைவிட சிதறப்பட்டவை என்பதே பொருந்தும்.

இவ்வாறு சிறுவர்களால் பாடப் படுகின்ற பாடல்களை இரண்டு பிரிவுக்குள் அடக்கலாம்.

1.விளையாட்டின் போது பாடப்படுகின்ற பாடல்கள்.
2. விளையாட்டு சாராது பாடப்படுகின்ற பாடல்கள்.

இனிச் சிறுவர் பாடல்கள் தோற்றம் பெறுகின்ற சூழலை அவதானிக்கின்ற பொழுது மூன்று விடயங்கள் புலனாகின்றன.

1. பால்வேறுபாடற்ற, வயதளவில் பெரிய வேறுபாடற்ற சிறுவர்களாக இருத்தல்.
2. குறிப்பிட்ட ஒரே சூழலில் மட்டும் தரித்து நிற்கும் சிந்தனைப்பாங்குடையவர்களாக இருத்தல்.
3. எல்லாச் சிறுவர்களுக்கும் விளையாட்டில் சமஅந்தஸ்து வழங்கப்பட்டிருத்தல்.

கிராமப்புறங்களில் சிறுவர்கள் தினமும் விளையாடிக் கொண்டிருப்பர். இவ்வாறு விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது, திடீரெனப் பலரும் ஒரே நேரத்தில் விளையாடுவதற்கு ஏற்ப விளையாட்டொன்று தொடங்கி விடும் அவ்வாறான விளையாட்டுக்களில் பாட்டுக்களே பிரதானமாக அமையும். இப்பாடல்கள் கேள்வி:- பதில் அமைப்பினைக் கொண்டதாக இருக்கும். ஒரே சூழலில் தரித்து நிற்கும் சிந்தனைப்பாங்குடைய இச் சிறுவர்களில் ஒருவர் முதலில் ஒரு கேள்வியை பாடல் வடிவில் ஏனையோரை நோக்கிக் கேட்கும் பொழுது. இன்னொரு சிறுவர் அதற்குப்பதிலாக ஒரு பாடல் வரியைப் பாடுவார். இங்கு குழுமியிருக்கும் சிறுவர்கள் யாவருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கும். அதனால் ஒருவர் கேட்கின்ற கேள்விப் பாடலுக்கு மற்றவர் கூறுகின்ற பதில் பாட்டின் அடியை ஏனையோர் பிழை என்றோ சரியில்லை என்றோ புறக்கணிக்க மாட்டார்கள்.

இங்கு பாடப்படுகின்ற கேள்வி-பதில் பாடல்கள் சரியான கேள்வியாகவோ சரியான பதிலாகவோ அமையாது. வாய்க்கு வந்த படி சொற்களைச் சந்த அமைதிக்கு ஏற்ப, அமைத்துப் பாடுவார்கள். இவ்வாறு பாடும் பொழுது அருவி பாய்வது போல ஒரு ஆற்றொழுக்குக் காணப்படும். இவ்வாறான விளையாட்டில் பலர் பங்குபற்றுவதால் கேள்விப்பாடலும் பதில் பாடலும் நீண்டு கொண்டே போகும். இவ்வாறு நீண்டு கொண்டு போகும் போது அவர்களிடையே ஏற்படுகின்ற அசதி, பசி, நேரம் போதல் போன்ற காரணிகளாலும் சில சமயம் அவர்களிடையே ஏற்படுகின்ற குழப்ப நிலை காரணமாகவும் விளையாட்டு நின்று போனால் பாடலும் நின்று போகும். அவ்வாறு அல்லாமல் விளையாட்டு நிறைவு பெறும் போது பாடலும் நிறைவு பெறுவதுமுண்டு. இந்த அடிப் படையில் அமைகின்ற சிறுவர்களின் விளையாட்டுக்களாக ஆடும்புலியும், வட்டக்காவடி,சுரக்காய் இழுத்தல் போன் றவற்றைக் குறிப்பிடலாம். உதாரணமாக வட்டக்காவடியில் பாடப்படுகின்ற பாடலை இங்கு நோக்கலாம்.

*''கொத்து இருக்கா*
*கொத்து*
*என்ன கொத்து*
*சீமயக் கொத்து*
*போட்டுட்டுப் போங்க*
*கல்வேலியா முள்*
*வேலியா*
*கல்வேலி..............."*

சில பாடல்கள் விளையாட்டுக்களுடன் தொடர்புபட்ட வகையில் காணப்பட்டாலும் மேற் கூறப்பட்டதைப் போன்று கேள்வி-பதில் அமைப்புக் காணப்படமாட்டாது. உதாரணமாக கிட்டிப்புள் என்னும் விளையாட்டில் பாடுகின்ற பாடலைக் குறிப்பிடலாம். இப் பாடல்கள் பாடும் பொழுது மூச்சு விடாது படித்தல் நியதியாகவிருக்கும்.



'ஆலையிலே சோலையிலே ஆலம்பாடிய சந்தையிலே கிட்டிப்புள்ளும் பம்பரமும் கிறுக்கியடிக்கப்பாலாறு சிலர் டிக்டிக்டிக்கென்று தொடர்ச்சியாகப் பாடிக் கொண்டு ஓடுவர்.

இவ்வாறு அமையும் பெரும்பாலான பாடல்களைத் தவிர, சில பாடல்கள் விளையாட்டுக்கள் சாராமலும் அமைந்துள்ளன. இந்தப் பாடல்களும் கேள்வி- பதிலை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெறுகின்றன. இப் பாடல்கள் எவ்வித பொருள் நிலையும் சாராது. ஒருவித சந்த அமைப்புக்களால் உருவாக்கப்பட்டிருக்கும். உதாரணமாக.

*'அடா புடா தேசிக்கா*
*எங்கடா போறா தேசிக்கா*
*அத்தட்டப் போறன்,*
*என்னத்துக்குடா போறா*
*வேலைக்குப் போறன'*

எனப் பாடல் நீண்டு கொண்டே போகும். சில பாடல் களின் கேள்வி பதில் அமைப்பில் ஒரு தொடர்பு காணப்படும். இப்பாடல்கள் விளையாடும் பொழுது பாடப்படுவதில்லை. இப்பாடலைப் பாடுவோரிடையே ஒரு வித போட்டித்தன்மை காணப்படும்.

(15ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மாய வலை'

-செ. குணரத்தினம்-

கடலுக்கும் ஆற்றுக்கும் கரைக்கும் எதுவித வித்தியாசமும் தெரியாமல் அப்பிப் பிடித்துக் கொண்டிருந்த மையிருள் மெல்ல மெல்ல விலகிக்கொண்டிருந்தது. புள்ளினங்களின் கூக்குரல் சத்தம் அக் குக்கிராமத்திலுள்ள மீனவர்களின் இல்லத் தலைவிகளைத் தட்டி எழுப்பியது.

அன்னம்மா குடில் படலையைத் திறந்துகொண்டு முற்றத்தில் வந்து நின்றாள். சொட்டுச் சொட்டாகப் பனி விழுந்து கொண்டிருந்தது. முந்தானைச் சேலையால் தலையை மூடிக்கொண்டு கிழக்கு வானத்தைப் பார்த்தாள். மெல்லிய சிவப்புநிறக் கோடுகள் அங்கே கோலம் காட்டிக் கொண்டிருந்தன. முகத்துவாரக் கரையோரம் மெதுவாகப் பார்வையைச் செலுத்தினாள். அங்கே முத்தன் வலை, கயிறு, கூடைகள் சகிதம் சோர்வோடு வந்து கொண்டிருந்தான்.

ஓடிச் சென்று அவசர அவசரமாக அடுப்பை மூட்டி தேநீர்ப் பானையை ஏற்றி வைத்துவிட்டுக் குடிசையை விட்டு வெளியே வரவும், முத்தன் அங்கே வந்து வலையை ஆத்திரத்தோடு முற்றத்தில் எறியவும் நேரம் சரியாக இருந்தது.

அன்னம்மாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அனுதாபத்தோடு கணவனைப் பார்த்தாள்.

''இனிமே பிச்சையெடுக்கிறதைத் தவிர வேறு வழியேயில்ல! நாசமத்துப் போவானுகள் நம்மட தொழிலக் கெடுத்துப் போட்டானுகள். நாலஞ்சி நட்டாமுட்டிகள் தலையெடுத்த பிறகு நாம மானம் மரியாதையோட இந்த ஆத்தையும், கடலையும் நம்பி வாழேலாது'' என்று பொருமியபடியே கையிலிருந்த கூடையையும் குடில் கூரையின்மேல் வீசியெறிந்தான் முத்தன்.

அன்னம்மாவுக்கு ஓரளவு கணவனின் ஆத்திரம் புரிந்தது. என்றாலும் எதுவும் பேசாமல் அப்படியே சிலையாக நின்றாள். அவளையுமறியாமல் பெருமூச்சுப் பறந்தது.

முத்தன் அன்னம்மாவைத் திருமணம் செய்து இருபது வருடங்கள் ஓடிவிட்டன. அவனுக்கு ஐம்பது வயது முடிந்து ஐம்பத்தோராவது நடந்து கொண்டிருக்கின்றது. இவ்வளவு காலமும் அவன் குடிசைக்கு முன்னால் ஓடிக்கொண்டிருந்த ஆற்றையும், கடலையும் நம்பி வாழ்ந்தவனுக்கு இன்று அந்த நம்பிக்கையெல்லாம் அற்றுப் போய்விட்டது.

முத்தன் தொழிலில் மிகவும் கெட்டிக்காரன். அவன் உழைத்துக் கொட்டிய பணத்துக்கு அளவேயில்லை. என்றாலும் கையில் மிச்சமில்லை. தன்னுடைய தொழிலுக்கு இப்படியொரு முட்டுக்கட்டை போடுவார்கள் என்று அவன் ஏற்கனவே நினைத்திருந்தால் உழைத்த பணத்தையெல்லாம் செலவு செய்து அழித்திருக்கவே மாட்டான். யார் இப்படி நினைத்தது? காலமாற்றத்தோடு தொழில் முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டதினால் அந்த மாற்றத்திற்கேற்பத் தன்னையும், தொழிலையும் மாற்றிக்கொள்ள முடியாத முத்தனின் நெஞ்சு மிகமிக வேதனைப்பட்டுக்கொண்டது.

ஆயிரம்தான் மாற்றங்கள் ஏற்பட்டாலும் நீதியோடும் நேர்மையோடும் தொழில் செய்யவேண்டுமென்பது முத்தனின் கொள்கை. தொழிலில் மாத்திரமல்ல வாழ்க்கையிலும் நாணயத்தோடு வாழவேண்டுமென்றே அவன் விரும்பினான். ஆனால் முத்தனின் எண்ணங்களும், விருப்பங்களும் அவன் வாழ்க்கைக்கு பெரும் சவால்களாகவே அமைந்து விட்டன.

முத்தன் தொழிலுக்குப் போவதை நிறுத்திக் கொண்டான். வறுமை அவர்கள் குடிசைக்குள் வந்து புகுந்து கொண்டது. அன்னம்மா இருந்த நகை நட்டுகளை ஈடு வைத்து ஒருவாறு நாட்களைப் பட்டினியில்லாமல் கடத்திக் கொண்டு வந்தாள். என்றாலும் எத்தனை நாளைக்கு அவளால் இப்படி ஈடுவைத்து வாழ்க்கையைச் சமாளிக்க முடியும்? நான்கு வளர்ந்த குமர்ப்பிள்ளைகளின் கோலங்களைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு வயிறு, வாயெல்லாம் பற்றி எரிந்தது.

அறுத்துக் கழுவிய மீன்களைப் போல அன்னம்மாவும் பிள்ளைகளும் முத்தனின் முன்னால் வந்து குந்திக் கொண்டார்கள்.

பெருமூச்செறிந்தபடி அவர்களை முத்தன் பார்த்துவிட்டுப் பேசாமல் படுத்தான். அவனுடைய பிடிவாதக் குணத்தை அன்னம்மா நன்கறிவாள். எனினும் அப்போதைய நிலையில் அவள் அதற்காக அஞ்சவில்லை.

''என்னங்க நீங்க தொழிலுக்குப் போய் இண்டையோட எத்தன நாளாப் பொயித்து! இப்படியே படுத்தா நாங்க ஆரிட்டப் போற! விருப்பமெண்டாச் சொல்லுங்க.. உங்களுக்கும் சேத்து நஞ்சைத்தாறன். எல்லோருமாகக் குடிச்சித்து ஒரேயடியாகப் படுப்பம்''

அன்னம்மா அதைச் சொல்லும்போதே அவளையும் அறியாமல் அழுதே விட்டாள். முத்தன் மெதுவாக எழுந்து குடிசையின் செத்தையில் முதுகைச் சாய்த்துக்கொண்டே,

''அன்னம்மா நான் இனிமே இந்த மீன்பிடித் தொழிலச் செய்ய மாட்டன்! செய்யிறதால ஒரு பலனுமில்லடி! நாசமறுப்பானுகள் எப்ப இந்த ஆத்துக்குள்ளயும், கடலுக்குள்ளயும் கொண்டுவந்து மாயவல கட்டத் துவங்கினாங்களோ அண்டைக்கே நம்மட சோத்தில மண்ணள்ளிப் போட்டுட்டுத்தாங்கள். நான் எங்கெண்டாலும் போய் ஆர்ர காலக்கையப் புடிச்செண்டாலும் வேறேதாவது கூலித் தொழில் செய்யப் போறன். எந்தத் தொழிலச் செய்தாலும் நேர்மையாச் செய்தாத்தான் அதில உண்மையான சந்தோசமிருக்கும்'' என்று முத்தன் சொல்லி முடிக்கவில்லை. அன்னம்மா நெல்லுப் பொரிபோலப் படபடத்தாள்.

''நீங்கதான் ஒரு கண்டறியாத நேர்மையோடையும் நீதியோடையும் வாழப் பேரறியள்! அதுக்கு இது காலமில்ல. சும்மா உட்டெறிஞ்சு போட்டு நீங்களும் ஒரு மாயவலய வாங்கி ஆத்துக்குக் குறுக்க கட்டுங்க! ஏன் இவன் நம்மட குஞ்சித்தம்பி, தம்பிராசா ஆக்களெல்லாம் உங்களப்போல கரைவீச்சுத் தொழில்தானே முதல்ல செய்தவனுகள்! இப்ப மத்தவனுகளப் போல அவனுகளும் மாயவலயக் கட்டி உழைக்கல்லையா; இந்த நாளையில அவனுகளுக்குத்தானே காசும் பணமும். அவனுகளெல்லாம் வீடு கட்டி ஓடும் போட்டுத்தானுகள் நீதி, நேர்ம பாக்கிற நாமதான் சோத்துக்கும் வழியில்லாமக் கிடந்து மாரடிக்கிறம்! சும்மா உங்கட பிடிவாதத்த உட்டெறிஞ்சு போட்டு நடக்கிற காரியத்தப் பாருங்க. இந்த நாளையில கரைவீச்சுத் தொழில் சரிவராது. நாமளும் காலத்தோட ஒத்துப் போகோணும்.''

''உயிர் போனாலும் நான் இந்த மாதிரியான தொழிலச் செய்ய மாட்டன். அரசாங்கமே இப்ப ஆத்துக்குள்ள மாயவல போடப்போடாதெண்டு சொல்லியிருக்கு! அப்படியிருக்க இதச்செய்யிற முறையா? அடியே அன்னம்மா! உனக்குத் தெரியாது. இந்த நைலோன் வலைகளக் கட்டத் துவங்கின புறகுதாண்டி நம்மட ஆத்தில மீன், றாலெல்லாம் குறஞ்சி போன! இல்லாட்டி இந்தப் பூரணைக்கு எவ்வளவு மீனையும், றாலையும் நான் புடிச்சிப் போடுவன்! நான் புடிச்ச மீனுக்கும், றாலுக்கும் கணக்கிருக்கா! மாயவல கட்டுறதால மீன், றால் கருவோடு அழியுற மட்டுமல்ல. இந்த் மாயவல போடுறத நிப்பாட்டாட்டி நம்மட பிள்ளட பிள்ள தலை முறைகளுக்கும் கஷ்டம்தான்!''


''அப்பபின்ன இத நிப்பாட்டுறதுக்குப் போய் நம்மட விதானட்டச் சொல்லுங்கவன்.''

''சொல்லிச் சொல்லி என்ர வாயும் தேஞ்சி பொயித்து''

இப்படி முத்தனும், அன்னம்மாவும் தர்க்கப்பட்டுக் கொண்டிருக்கும்போதே முத்தனின் நண்பன் மரியான் அங்கே வந்தான்.

''என்ன முத்தா! பொஞ்சாதி புள்ளையள வெளச்சி வெச்சிருந்து லெக்சர் அடிக்கிறா! என்ன அங்கால் முகத்துவாரத்துப் பக்கம் உன்ர சிலாவனையக் காணல்ல?'' மரியான் இதைக் கேட்டதும் முத்தன் சொன்னான்.

''என்னத்துக்கு மரியான் அங்காலப் பக்கம் வாறதும் போறதும். உனக்குத் தெரியாதா? இந்த மாயவல போடுறவனுகளால கரைக்கு ஒரு மீன் குஞ்சும் வருகுதில்ல. இத ஆரு பாக்கிறா கேட்கிறா?



''ஏன் ஆரும் பாக்கையும் கேக்கையும்! நீயும் ஒரு வலைய வாங்கிக் கட்டுறதானே?'' மரியான் முத்தனுக்கு இப்படிச் சொல்லி முடித்ததும் அன்னம்மா சடக்கெனச் சொன்னாள்!

''நானும் அதத்தான் மரியான் இவரிட்டச் சொன்னனான். கேக்கிறாரில்ல! நேர்மைக்கு மாறாகத் தொழில் செய்ய மாட்டாராம். இவர் செத்த புறகு சிலதான் வைக்கப் போறாங்க. ஆண்டவண்ட ஊரிய ஏண்டவண்ட பாடு! நாமென்ன தனிக்கட்டையா? கலியாணம் கட்டுற வயசில நாலு குமருகள் கிடக்கு. நமக்கில்லாட்டியும் அதுகளுக்காவது சீவிக்கிறல்லையா!''

''பொத்தடி வாய! அவட கதையும் அவவும்! பிள்ளைகளுக்காகத்தான் நான் நேர்மையாகச் சீவிக்கிறன். நாளைக்கு நாம செய்யிற நன்மை தீமைகள்தான் அதுகளுக்கு வந்து கூடும்''

முத்தனைப் பற்றி மரியானுக்கு அன்னம்மாவைவிட அதிகமாகவே தெரியும். முத்தன் யார் சொன்னாலும் கேட்க மாட்டான். நீதிக்கு மாறாக நேர்மைக்கு எதிராக முத்தன் எந்தச் சந்தர்ப்பத்திலும் நடந்து கொண்டதே கிடையாது. அதனால் மரியான் அவனைத் தன்னோடு கடல் தொழில் செய்ய வரும்படி அழைத்தான். கடல் தோணியேறி இரவு பகல் கண்விழித்து மின்பிடிக்கும் அளவிற்கு மனவலிமை இருந்தாலும் முத்தனின் உடலில் தைரியமில்லையாதலால் அவன் அதற்கு மறுத்துவிட்டான்.

முத்தனின் நிலையைப் பார்க்க மரியானுக்கு பரிதாபமாகவிருந்தது. அந்த நாட்களில் மரியானுக்கு மாத்திரமல்ல பலருக்கு மீன்பிடித் தொழிலின் நுணுக்கங்களைச் சொல்லி அதைப் பழக்கியவனும் முத்தன்தான். ஆனால் இன்று...! மரியானுக்குத் திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது.

நேர்மைக்காக நீதிக்காக வாதாடும் முத்தனுக்காக மட்டுமல்ல, கரைவீச்சுக்காரர்களின் வாழ்வில் கவலை சூழாமல் இருப்பதற்காகவும், குறுக்கு வழியால் சட்டத்துக்கு எதிராக மாயவலை போடுபவர்களையும் பிடித்துக் கொடுத்து மீனவர்களுக்கு இடையில் உண்டான பிளவுகளைச் சரிப்படுத்துவதற்காகவும் முத்தனையும் அழைத்துக்கொண்டு கிராம சேவையாளரிடம் சென்று இன்றிரவே மாயவலைத் தொழிலை அடியோடு ஒழித்தாலென்ன...!

மனதில் பட்டதை முத்தனிடம் வெளிப்படுத்தினான் மரியான்.

''வேலியே பயிரை மேயும்போது..'' என்று இழுத்தான் முத்தன்.

''எல்லாவற்றுக்கும் முடிவு கட்டலாம். நீ என்னோடு வா'' என்று முத்தனைத் தைரியப்படுத்தி அழைத்துக் சென்றான் மரியான்.

❀ ❀ ❀

சரியான இருட்டுவேளை. முத்தனும், மரியானும் இயந்திரப் படகின் அணியத்தில் 'டோச்' லைற்றோடு கம்பீரமாக நிற்க, படகு வேகமாகச் சென்று கொண்டிருந்தது. கிராமசேவையாளர் அவர்களுக்குப் பக்கத்தில் உசும்பாமல் நின்றார்.

ஆறும் கடலும் சங்கமமாகிக் கொண்டிருக்கும் முகத்துவாரத்திற்கு மிக நெருக்கமாகப் படகு செல்லும்போது மரியான் 'டோச்' வெளிச்சத்தைப் பாய்ச்சினான். அவ்வளவுதான் கிராம சேவையாளர் பலமாகச் சத்தம் போட்டார்.

''டேய் ஆர்ராவன் மாயவல போடுற? மரியாதையாச் சொல்லிப் போட்டன். எல்லாரும் வலைகளோட வந்து போட்டுல ஏறுங்க. இல்லாட்டிச் சுட்டு வளத்தாட்டிப் போடுவன்.''

'போட்', மாயவலை போடுபவர்களின் தோணியின் பக்கம் சென்றது. எவரும் எதுவும் பேசாமல் வலைகளை அள்ளி இயந்திரப் படகினுள் போட்டார்கள். மரியான் சிரித்தான்.! முத்தன் மரியானின் தோளில் கையை வைத்தபடி தைரியமாக நின்றான்.

அவ்வளவுதான் தெரியும். திடீரெனப் பலமான சவளடி முத்தனின் மண்டையைப் பதம் பார்த்தது. மரியானுக்கும் கிராமசேவகருக்கும் காயமில்லாத அடி! படகில் மூவரும் மயங்கிப்போன நிலையில் கிடக்க. மாயவலை போட்டவர்களெல்லோரும் வலைகளையும் அள்ளிக்கொண்டு ஓடி மறைந்து விட்டார்கள்.

படகைச் செலுத்தியவன் தந்திரமாக 'என்ஜின் றூமுக்குள் ஒளிந்து கொண்டதால் அவன் அடிபடாமல் மப்பித்துக் கொண்டான். படகு கரைக்கு வந்து சேர்ந்தது. மரியானும் கிராமசேவகரும் களைதெளிந்து எழுந்தார்கள். ஆனால் முத்தன் மாத்திரம் எழுந்திருக்கவேயில்லை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன் சில நிமிடங்கள்...

'காய்க்கின்ற மரத்துக்குத்தான் கல்லடியும் பொல்லடியும்' என்பது பழமொழி.

போர்க்களத்தில் போராடுபவன்தான் போராளியாக முடியும். வாழ்வில் ஏற்படுகின்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து வெற்றி பெறுவதுடன் அந்நிலையிலும் இன்பங் காண்பவன்தான் வாழ்வின் நுட்பங்களை அறிந்து கொண்டவனாகிறான். அவன்தான் வாழ்வை வாழத் தெரிந்த உண்மையான மனிதன். அப்பேற்பட்ட மனிதர்கள்தான் வரலாற்றில் இடம் பெறுகிறார்கள். காவியத் தலைவர்களாகிறார்கள்.

உடைந்த கண்ணாடியில் முகம் பார்த்தால் விம்பம் விகாரமாய்த்தானிருக்கும். எனவே, வாழ்க்கை நாம் பார்க்கின்ற கோணத்திலேதான் இருக்கிறது. நேற்று என்பதையும், நேற்றையத் துன்பங்களையும் மறந்து விடுவோம். இன்று என்பதை இனிய பொழுதாய் புதிய நாளாய் எடுததுக் கொள்வோம். நாளை என்ற கவலை வேண்டாம். அது நம்மிடமில்லை என நம்புவோம். வாழ்க்கை ஒரு அழகான கவிதை விருப்புடன் வாசிப்போம். வாழ்க்கை ஒரு விறு விறுப்பான தொடர்கதை ஆர்வத்துடன் எதிர்பார்ப்போம். எதிர்கொள்வோம்.

பிறந்ததற்காக வாழ்கின்றோம் என்ற எண்ணம் உள்ளத்தில் இருந்தால் உடனே தூக்கியெறியுங்கள். நாம் வாழப்பிறந்தவர்கள். வாழவேண்டும் என்பதற்காக வாழ்வோம்.

வாழ்க்கை பற்றி நான் சொல்வதைப் பார்க்கிலும் வரலாற்றில் இடம் பிடித்தவர்கள் சொன்னதைப் பார்த்தால் பொருத்தமாயிருக்குமல்லவா?

❖ உலகிலே ஒரு வழிப் போக்கனைப் போன்று அல்லது அறிமுகமில்லாதவனாய் இரு. மரணிக்கப் போகும் ஒருவனாக உன்னைக் கருதிக்கொள்.

-முஹம்மது நபி-

❖ வாழ்க்கையில் வெற்றியை நோக்கியிருப்பவனுக்கு வீரமும், துணிவும் வாழ்வின் வெற்றிக்கு இணைப்புச் சங்கிலிகள்.

-அன்நோன்-

❖ வாழ்க்கை என்பது ராக ஆராதனை போன்றது. நவரசங்களை சேர்த்துக் கலந்த தித்திப்புப் பண்டம் போன்றது.

-வ.ரா-

❖ நாம் எப்போதும் வாழ்வது நல்லை வாழ வேண்டும் என்ற எண்ணத்திலேயே வாழ்க்கையை முடித்துக் கொள்கிறோம்.

-வால்டேர்-

❖ வாழ்க்கை மறைபொருளாய் இருக்கிறது. அதனால் தான் ரம்மியமாயும் இருக்கிறது.

-காண்டேகர்-

❖ வாழ்வு சிந்திப்பவனுக்கு இன்ப நாடகம். உணர்பவனுக்கு துன்ப நாடகம்.

-வாலப்போல்-

## வாழ்வை வாழ்ந்து பாருங்கள்

❖ வாழ்க்கை என்பது குறைவான தகவல்களை வைத்துக் கொண்டு சரியான முடிவுக்கு வரும் ஒரு கலை.

-சாமுவேல் பட்லர்-

❖ தாமரை இலையிலே உருண்டோடும் பனித்துளி போன்றது மனித வாழ்க்கை.

-தாகூர்-

❖ நாளுக்கொரு பயத்தை வெல்லாதவன் வாழ்க்கையின் முதற்பாடத்தையே கல்லாதவன்.

-எமர்சன்-

❖ வாழ்க்கை என்பது நீயே அமைப்பதாகும். பின் எதற்காக நீ கவலை கொள்கிறாய்.

-திருமதி ரோமா-

❖ எனக்கு வாழ்க்கை ஒரு சின்னஞ்சிறு தீபம் அல்ல, அது ஒரு அற்புதமான தீப்பந்தம். வருங் காலச்சந்ததிகளிடம் அதை அளிப்பதற்கு முன்னால் முடிந்த வரை அதை பிரகாசமாக இயங்கச் செய்யவே ஆசைப்படுகிறேன்.

-பெர்னாட்ஷா-

❖ வாழ்க்கை என்பது அடித்தல் அல்லது அடிபடுதல்.

-ரஷ்ய பழ மொழி-

❖ வாழ்க்கை என்னும் நூலில் ஆழ்ந்த சிந்தனை என்ற மணிகளை கோர்த்து இருப்பவனுக்கு ஜெப மாலை வேண்டியதில்லை.

-பாரசீகப் பழமொழி-

❖ வாழ்க்கையில் இரு பகுதிகள் உண்டு. கடந்த காலம் ஒரு கனவு. வருங்காலம் ஒரு பெருமூச்சு.


-அராபியப் பழமொழி-

என்ன வாசகர்களே வாழ்க்கையைப் பற்றி தெரிந்து கொண்டீர்களா? அடுத்தவாரமும் உங்களுடன் சில நிமிடங்கள் உரையாட உங்கள் இல்லம் வருகிறேன்.

மீண்டும் சந்திப்போம்.......

*ஏல். யு. ஸர்மிளா.*

# தினக்கதிர் குறுக்கெழுத்துப் போட்டி இல: 07



### இடமிருந்து வலம்

1. வியாபாரம் பெருக இது செய்ய வேண்டும்.
2. யாழ்ப்பாணத்தின் கடைசித் தமிழ் மன்னன்.
3. வாரத்தின் இறுதிநாளுக்கு முதல்நாள்
4. யானையும், மனிதரும் விரும்பியுண்பது முதல் எழுத்து முன் மறைந்துள்ளது.
5. அண்மையில் அமெரிக்காவால் தேடப்படுபவர்
8. நாதியற்றவன்
11. இராமருக்கு அணைகட்ட இவையும் உதவின.
12. குமாஸ்தா என்பதன் தூயதமிழ் வடிவம்.

### மேலிருந்து கீழ்

1. நல்ல பாம்பிற்கும் இது உண்டு.
3. 25 வது ஆண்டு நிறைவு விழா
6. அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர்
7. விருப்பு வாக்கியத்தில் இதுவும் அடங்கும்.
8. யுகதா முகியின் கௌரவத்திற்கு முன்னடையில்லை.
9. தமிழர்களது கிரிக்கட்
10. அமெரிக்க நாணயம்.

இதைப் பூர்த்திசெய்து கீழுள்ள விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். அதிஷ்டசாலிக்கு ஒருமாத காலத்துக்கு 'தினக்கதிர்' வாரவெளியீடு இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

**குறுக்கெழுத்துப்போட்டி -07**
**தினக்கதிர் வாரவெளியீடு,**
**த.பெ.எண்:- 06,**
**இல:- 155, திருமலை வீதி,**
**மட்டக்களப்பு.**

கடந்தவார குறுக்கெழுத்துப் போட்டி-06 ற்கான சரியான விடைகள் வருமாறு:

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. புத்தமித்திரர் | 1. புதுமை |
| 5. மது | 2. மியன்மார் |
| 7. காசி | 3. திமிர் |
| 9. மைந்தன் | 4. கார் |
| 10. மோர் | 6. மந்திரி |
| 12. மாலதி | 8. சிங்கப்பூர் |
| 13. கல்கி | 11. மோதல் |
| 14. ஆசிரியர் | 14. ஆமை |
| 16 சகி | 15. சித்திரை |
| 17. பூசை | 16. சம்பள (ம்) |
| 18. மோதிரம் | 19. உப் (பு) |
| 19. உயிர் | 21. மதி |
| 20. தாமரை | 23. புவி. |
| 22. பருப்பு | |
| 24. குளம் | |
| 25. விதி | |

குறுக்கெழுத்துப்போட்டி - 06ற்கு சரியான விடைகளை ஏராளமானோர் நிரப்பி அனுப்பியுள்ளனர். அதில் பரிசுக்காகத் தெரிவானவர்:

**த.பிரமீளா**
**164, பிரதான வீதி,**
**செல்வா நகர்**
**ஆரையம் பதி.**

## பாராட்டுக்குரியவர்

1. கே.சிரான் கல்லடி.
2. திருமதி சிவானந்தன் ஆரையம்பதி.
3. இ.சத்தியசுகாஜினி நொச்சிமுனை.
4. ர.அனுஜா, களுவாஞ்சிகுடி.
5. உ.லெ.முகம்மது பயாஸ். கல்முனைக்குடி
7. யோ.செந்தூரன் மட்டிக்களி
8. த.ஜெயசுதன் அமிர்தகழி.
9. த.சிந்துஜெயன் திருமலை வீதி.

# நலமாய் வாழ.....

## பிணி பல தீர்க்கும் மூலிகை மகத்துவம்

## தெய்வீக மூலிகையாம் வேம்பு

எமது பிரதேசத்தில் வேம்பினை அறியாதோர் எவரும் இருக்கமாட்டார்கள். வேம்பில் பலவகை வேம்புகள் உண்டு அவை வேம்பு, சடைவேம்பு, மலை வேம்பு, சிவனார்வேம்பு, நிலவேம்பு ஆகியன. இவை எல்லாம் நிறைந்த மருத்துவ குணம் வாய்ந்தவை. வேம்பினை ஆதி சக்தி மூலிகை என்றும் அழைப்பர். மூலிகைகளுள் மிகவும் சக்தி வாய்ந்தது வேம்பு. ஆகையால் ஆதி சக்தி மூலிகை என்று வழங்கலாயிற்று. எமது நாட்டில் உள்ள சக்தி வழிபாட்டு ஆலயங்கள் எல்லாவற்றிலும் வேம்பு நாட்டப்பட்டு பயிராகும். ஆலய பூசைக்காலங்களில் வேப்பிலை தோரணம் போட்டு சடங்குகள் செய்வார்கள். வேப்பிலையினால் சில பூசாரிமார் பேய் விரட்டுவார்கள் நீர் ஓதிக் கொடுப்பார்கள் இப்படியான சக்தி அணுவுள்ள வேம்பானது, காற்றில் பரவி வரும் நோய்க் கிரிமிகளையும் அழித்து விடும் ஆற்றல் வாய்ந்தது.

வேம்பின் இலைகளால் கிருமிகள் அழியும். புழுக்கள், பூச்சிகள் அழியும், உடலில் சீதளத்தை போக்கி வெப்பத்தைக் கொடுக்கும், கண்ணுக்குத் தெரியாத நுண் கிரிமிகளை அழித்து அதனால் ஏற்படும் அம்மைநோய், விஷசுரம், சொறி சிரங்குகள், விஷக்கடிகள் ஆகிய நோய்களைப் போக்கும். அம்மை நோய் கண்டவர்களுக்கு ஆரம்பம் முதல் கொப்பளங்கள் இறங்கி தலைக்கு தண்ணீர் ஊற்றும் வரை வேப்பிலை மட்டுமே தெய்வீக மூலிகையாக நம்பிக்கைக்குரிய மூலிகையாகப் பயன்படுகின்றது. இது ஒரு மனவியல் சிகிச்சை முறையாகும். வேப்பிலை, வேப்பை ஈர்கில், கடுக்காய் இவை மூன்றையும் பிரண்டைசாறு விட்டு அரைத்து ஆமணக்கெண்ணையுடன் கலந்து கொடுத்தால் குடல்களில் உண்டாகும் நாக்குப் பூச்சி கொழுக்கிப் புழு கீரைப்பூச்சி முதலியன மலத்துடன் வெளிவரும். பித்தம் அதிகரித்து அதனால் ஏற்படும் நோய்களான குமட்டல், மயக்கம், அரோசகம், பெரு ஏக்கம் முதலிய நோய்களுக்கு வேப்பம் பூ மிகவும் இன்றியமையாத ஒரு மருந்துவம். வேப்பம் பூ ரசம், வேப்பம் பூ துவையல், வேப்பம்பூ வடகம் ஆகியவற்றைத் தயாரித்து உணவுடன் சேர்த்துவந்தால் மேற்சொன்ன நோய்கள் விலகும். அந்தக் காலங்களில் புதுவருடப் பிறப்பன்று வேப்பம்பூ பச்சடிபோட்டு சாப்பிடுவார்களாம். இதனால் ஆண்டு முழுவதும் நோயின்றி ஆரோக்கியமாக இருக்கலாம் என்பது நமது முன்னோர்களின் நம்பிக்கையாகவும் இருந்தது. இது ஒரு உண்மை நிகழ்வும் கூட. வேப்பம் கொட்டைகளை எடுத்து முறைக்காய்ச்சல், தலைவலி ஆகிய நோய்களுக்கு சுடுநீரில் அரைத்து உள்ளும் கொடுத்து நெற்றியிலும் பூசினால் மேற்சொன்ன நோய்கள் விலகும். வேப்பம் கொட்டைகளை இடித்து மாவாக்கி புழுவைத்து நெளியும் புண்களுக்கு வைத்துக் கட்டினால் மேற்படி புழுக்கள் வெளியேறி புண்கள் விரைவாக ஆறும். வேம்பம் பட்டை உடலைப் பலப்படுத்தி உரமாக்கும் சக்தி உண்டு. வேப்பம் பட்டையினை இடித்து தூள் செய்து பசுவின் பாலில் சேர்த்து காலை, மாலை தினமும் குடித்து வந்தால் மலக்கட்டு, மூலச்சூடு, குன்ம வயிற்றுவலி வயிற்றுப் பூச்சிகள் ஆகிய நோய்கள் நீங்கும். உடல் வனப்பு உண்டாகும். வேப்பம் கொட் டையில் இருந்து எடுப்பதுதான் வேப்ப நெய். இது ஒரு முக்கியமான மருந்தாகும். ஒவ்வொருவரின் வீட்டிலும் இருக்கவேண்டிய முக்கிய பொருளுமாகும். அது ஒரு அபாயகரமான நிகழ்வுகளுக்கு சஞ்சீவியைப் போல பயன்படும். மழைக் காலங்களிலும், பனிக்காலங்களிலும் குழந்தைகளுக்கு ஏற்படும் வலி, மாந்தம், சளித் தொல்லை போன்ற நோய்களுக்கும் வேப்பெண்ணையைச் சூடேற்றி உடலில் நன்றாகத் தேய்க்க உடலில் வெப்பம் ஏற்பட்டு குழந்தைகளை இந்நோயில் நின்றும் காப்பாற்ற முடியும், வாதம், வாயு போன்ற வலிகளுக்கும் வேப்பெண்ணையை மேலே தடவி ஒத்தடம் கொடுக்க மேற்சொன்ன நோய்கள் விலகும்.



**ஆயுர்வேத சித்த வைத்தியர்**
**[illegible]**
**[illegible], வைத்தியர் வீதி,**
**சீலாமுனை, மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரையரங்குகளை ஆக்கிரமித்துவரும் மலினத் திரைப்படங்கள்

தினக்கதிர் சினிமா

**நான்கு சுவர்களுக்குள் நடக்கும், அந்தரங்க உறவை காட்சிப்படுத்திக் காசுபண்ணும் மலினக் கலாசாரம் எங்கள் மண்ணிலும் பரவ அனுமதிப்பதா?**

தீரன்

தமிழர் பாரம்பரியத்தைத் தலைகீழாக்கும் பெரும் முயற்சியில் தற்போது மட்டக்களப்பிலுள்ள திரையரங்குகள் மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றன.

முக்கிய நிகழ்வுகள் கல்வி மற்றும், கலாசார விடயங்கள் தொடர்பாக விளம்பரப் படுத்தும் சுவரொட்டிகள் ஒட்டப்படும் இடங்களில் இத்திரையரங்குகளில் பாலியல் விளம்பர சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றன.

திரையிடும் சினிமாக்கள் யாவும் பணம் உழைக்கும் நோக்கத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டது என்ற ஒரு பக்க நியாயத்தைத் தவிர்த்து திரைப்படங்களின் வெளியீடுகளின் உண்மை நோக்கங்களின் அடிப்படைகளை உணர்ந்து திரையரங்குளின் உரிமையாளர்கள் செயற்பட வேண்டும்.

ஒரு காலத்தில் தமிழ் சினிமா உலகம், கண்ணியமான தமிழ்க் காலாசாரப் பின்னணியுடன் பின்னிப்பிணைந்ததான நிரைப்படங்களையே வெளியிட்டு வந்தன. அப்போதும் அவற்றிற்கு கிராக்கி இருக்கவே செய்தது.

ஆனால் தற்போது ஆங்கில மேற்குல கலாசாரப் பின்னலுக்குள் விழுந்து இப்போது எதற்கும் உதவாத கலாசார சீர்கேடுகளுக்கு வழிகோலும் வகையில் தமிழ்ப்பாலியல் சினிமாக்கள் கூட வெளியிடப்படுகின்றன.

கலைகளையும் பாரம்பரியங்களையும் கட்டிக் காத்து வருவதாகக் கூறும் மட்டக்களப்பில் கடந்த சில மாதங்களாக படுமோசமான பாலியல்படங்கள் அடிக்கடி திரையிடப்பட்டன.

இவற்றினை இளை ய தலைமுறையே [illegible]திகளவில் பார்க்கச் செல்கிறது.

ஆங்கில, தமிழ் மொழியிலான இப்பாலியல் படங்கள் வயது வந்தவர்களுக்கு மட்டும் என வரைமுறை விதிக்கப்பட்டு திரையரங்குகளில் காண்பிக்கப்பட்டாலும், அவ்வரைமுறைகள் திரையரங்குகளில் கடைப்பிடிக்கப்படுவதாகத் தெரியவில்லை.

ஐந்து திரையரங்குகளைக்கொண்டுள்ள மட்டக்களப்பில் மாறிமாறி ஒவ்வொரு திரையரங்கிலும் இவ்வாறான படங்கள் வெளியிடப்படுவது மலிந்த நிலையில் இருந்து வந்தது.

அரசியல் அபிலாசைகளுக்கு ஒரு பிரிவினர் போராடிக்கொண்டிருக்கும் இக்காலச் சூழலில், நம் அந்தஸ்து நம் வாழ்க்கை, நம்பணம் என நினைக்கும் ஒரு பிரிவினர் நம் சமூகம் எனவும் சற்றுச் சிந்தித்தால் நல்லவைகளை விட்டு தீயனவற்றை மட்டும் பற்றிக் கொள்ளும் இளையவர்கள் மத்தியில் தீய குணங்கள், சிந்தனைகள், நடத்தைகள் தோன்றாமலிருக்க ஊக்குவிக்கலாம்.

தமிழ் உரிமை உணர்வுகள் வளர்ந்து கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் இவ்வாறு பாலியல் உணர்வு பலப்படுத்துவதற்கு உயர் மட்டத்திலுள்ள தமிழர்கள் சிலரும் உந்து சக்தியாக இருப்பது கவலைக்குரிய விடயம்.

இறுக்கமாகத் தடைசெய்யப்பட்டிருந்த இவ்வாறான திரைப் படங்கள் இப்போது எவ்வித கட்டுப்பாடுமின்றி திரையிடப் படுவது திரைப்படக்கூட்டுத்தாபனம் சம்பந்தப்பட்ட விடயம் என்றாலும் மட்டக்களப்பு ஒரு தமிழர் தாயகத்தின் பகுதி. அத்தோடு தமிழ் மாநகர சபை என்றவகையில் மட்டக்களப்பில் உயர்பீடங்கள் பல இருந்தும் இவ்வாறான திரையக உரிமையாளர்களது நடவடிக்கைகளைக் கண்டு கொள்ளாதிருப்பதையிட்டு பல கல்விமான்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

திரையரங்குகள் அமைக்கபப்பட்டதன் நோக்கங்களை கருத்தில் கொள்ளாது திரையிடப் படும் இப்படங்களின் மீதான வெறுப்பை மக்கள் பொதுசந்தை, பஸ்நிலையம், வீதிகளின் [illegible] இடங்களில் ஒட்டப்பட்டிருக்கும் சுவரொட்டிகளின் மீது சேறு, மற்றும் சாணம் போன்றவற்றைப் பூசியிருப்பதிலிருந்து புரிந்து கொள்ளக் கூடியதாயுள்ளது.

சிறியதான ஒரு மகிழ் [illegible] காண்பிக்கப்படும் இப்படங்கள், நமது கலாசாரம் சீரழிவதற்குக் காரணமான அவ்வாறான ஒரு திரையரங்கு தேவைதானா என மக்களில் சிலர் கேள்வி எழுப்புவதனைக் கூடக் காணமுடிகிறது.

இந்நிலையில் மட்டக்களப்புப் பகுதியிலுள்ள கலை பேணும் பாரம்பரியம் வளர்க்கும் நிறுவனங்கள் இதுவிடயத்தில் இத்தனைகாலமும் பாராமு கமாக இருப்பது வேதனையான விடையம்.

தமிழர் மத்தியிலிருந்து தமிழர்களுக்கெனகுரல் கொடுக்கவும் அவர்கள்தாம் கலாசார விழுமியங்கள், பேணல், மற்றும் தேவைப்பாடுகளை எடுத்துரைக்கவும் என தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குச் சொந்தமான திரையரங்கு ஒன்றிலும், இத்தகைய திரைப்படங்கள் தொடர்ச்சியாகத் திரையிடப்பட்டு வருகின்றமை மிகவும் வேதனைதரும் ஒரு விடயம்.

இன்று வீடியோப் படங்களின், பெருக்கமும், சின்னத் திரைக் காட்சிகளின் ஆதிக்கமும் காரணமாக, வருமானத்தை இழந்துவரும் கொழும்புத் திரையரங்குகள் சிலவே, இத்தகைய மலினமான பாலியல் திரைப்படங்களைக் காட்டி பணம் சம்பாதிக்கும் பாரம்பரியத்தை வளர்த்து வருகின்றன.

ஆனால் தமிழர் தாயகத்தில், தமிழ்த் தேசிய உரிமை பேசி அரசியல் நடத்துபவர்களும் இந்த மலின வியாபாரத்துக்குத் தலைமைதாங்குவது ஏன்? திரையரங்குகளில் காண்பிப்பதற்கு எத்தனையோ நல்ல திரைப்படங்கள் உண்டு. தமிழ்ச் சினிமாவில் முத்திரை பதித்த நல்ல பல திரைப்படங்களைத் திரையிட்டு, சினிமா இர சிகர்களின் இரசனைமட்டத்தை தரமாக்கும் பணியை இத்திரை யரங்குகள் செய்யவேண்டும்.

ஆங்கிலத் திரையுலகில் எத்தனையோ அற்புத காவியங்கள் படைக்கப்பட்டுள்ளன. அங்கே ஒவ்வொருவகைக்கும் என ஏராளமான படங்கள் எடுக்கப்படுகின்றன. சிறுவர்ளுக்கென எடுக்கப்படும் படங்கள், விஞ்ஞான அறிவியலை மையமாக வைத்து எடுக்கப்பட்ட படங்கள் ஏராளம் உள்ளன. இவை தவிர எத்தனையோ பல விருதுகள் பெற்ற பிறமொழிப் படங்கள் நிறைய உண்டு.

இவற்றைத் தருவித்து, இன்றைய உலகின் கலைச் சாதனைகளை நமது மக்களும் கண்டுகளிக்கும் வாய்ப்பை அவர்களுக்கு அளிக்க நமது திரையரங்க உரிமையாளர்கள் முன்வர வேண்டும்.






# அழகி

வெற்றிகரமான ஒளி ஓவியனாக தன்னை படத்துறையில் பதிவு செய்து கொண்ட ஒளிப்பதிவாளர் தங்கர் பச்சான் முதன் முறையாக இயக்குனர் நாற்காலியை கைப் பற்றிக் கொண்டிருக்கிறார். தமிழ்ச் சினிமாவை ஒரு புதிய பரிமாணத்துக்கு மாற்றும், அடுத்த கட்ட முயற்சிக்கு அடிப்படையாக, அச்சாரமாக, ஆரம்பமாக..., தங்கர்பச்சானுக்கு



பலமான அஸ்திவாரமாக இருப்பாள் இந்த அழகி.

பள்ளிப்பருவம்..., வாலிப வயது..., நடுத்தர வயது.. என்று ஒவ்வொரு கால கட்டமாக காட்டி மன உணர்வுகளின் கோர்வையாய் கொடுத்திருக்கும் இயக்குனர் தங்கர் பச்சானின் செய் நேர்த்தியை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இவருக்கு இதுதான் இயக்குனராகும். முதல் படமாம் நம்பவே முடியவி ல்லை அவ்வளவு நுணுக்கம். படம் முழுக்க ஒரு இனம் புரியாத உணர்வு மேலெழுந்து மனதை பிசைந்தபடியே இருக்கிறது. கலைத்தன்மையும், கமர்ஷியல் அம்சமும் கலந்திருப்பதால் ரசிகர்களின் ஆதரவு நிச்சயம்.

பார்த்திபனா இப்படி பரம சாதுவாக நடித்திருப்பது. என்று ஆச்சர்ய அலை எழும்புகிறது. ஊளை. குசும்பு பண்ணாமல், நக்கல்-நையாண்டித்தனமில்லாமல், தெளிந்த நீரோடை போல நிதானமாய் நடித்திருக்கும் பார்த்திபனுக்கு விருது விழா எடுக்கலாம்.

வடக்கே புயலைக்கிளப்பிய ஃபயர் பட நாயகி நந்திதா தாஸ், தனலட்சுமி கதாபாத்திரமாகவே தன்னை உருமாற்றிக் கொண்டிருக்கிறார். சந்தோஷமோ-சங்கடமோ சோகமோ-மோகமோ... இப்படி எதுவானாலும் சடாரென அந்தந்த உணர்ச்சிகளை முகத்துக்குக் கொண்டு வந்து நடிப்பில் மின்னலாய் ஜொலிக்கிறார் நந்திதாதாஸ்.

ஒரு சராசரிப் பெண்ணுக்கே உரிய பொசசிவான புருஷனை பங்கு போட்டுக் கொள்வாளோ என்கிற துடிதுடிப்பு நிறைந்த பெண்ணாக தேவயானி. தனக்கு கொடுக்கப்பட்ட கதாபாத்திரத்தை கனகச்சிதமாக செய்துள்ளார்.

வைத்தியராக வரும் விவேக், கம்பவுண்டர் பாண்டு, இருவரும் படத்துக்கு கலகலப்பு ஏற்றுகிறார்கள்.

நட்சத்திரங்கள் : பார்த்திபன், தேவயானி, நந்திதா தாஸ், விவேக், பாரதி ஷிண்டே, பிரமிடா நடராஜன், பாண்டு, வெ.ஆ.மூர்த்தி, தூர்யகாந்த் இன்னும் பலர்...

இசை : இளையராஜா

பாடல்கள் : இளையராஜா, பழனிபாரதி

கதை, திரைக்கதை, வசனம், கேமரா, இயக்கம் தங்கர்பச்சான்


தயாரிப்பு உதயகீதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செயற்கை உப கோள்கள்



சில கோள்களைச் சுற்றிச் செல்லும் உபகோள்கள் உண்டு என்பதையும், புவியைச் சுற்றிச் செல்கின்ற ஒரே இயற்கை உபகோள் சந்திரன் என்பதையும் நாம் அறிவோம். இதைவிட மனிதனால் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட செயற்கை உபகோள்களும் இப்போது புவியைச் சுற்றிச் செல்கின்றன. சந்திரனுடன் ஒப்பிடும்போது மிகச் சிறியனவான இவை செயற்கைச் சந்திரன்கள் எனப்படும். ஸ்புட்னிக், என்ற முதலாவது செயற்கைக் கோள் அதாவது உபகோள் சோவியத் விஞ்ஞானிகளால் 1957 ஆம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. அன்று தொடக்கம் முக்கியமாக அமெரிக்காவினாலும் சோவியத் ஒன்றியத்தினாலும் பல செயற்கைச் சந்திரன்கள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டு இப்போது புவியைச் சுற்றி வருகின்றன. இவற்றுட் சில விண்வெளி ஆராய்ச்சி, வானிலை முன்னறிவிப்புகளுக்குத் தேவையான தகவல்க ளைப் பெறுதல், போக்குவரத்தை தொடர்புபடுத்தல், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புச் செய்தல் போன்ற பயன்மிக்க தேவைக ளுக்கும், சில அமெரிக்காவினாலும் சோவியத் ஒன்றியத்தினாலும் ஒன்றையொன்று பற்றி உளவறிதல் போன்ற இராணுவத் தேவைகளிற்கும் விண்வெளிக்கு அனுப்பப்படுகின்றன.

**என்.தினேஷ்**
**தரம்-08**
**புனிதமிக்கேல் கல்லூரி**

# வண்ணத்துப்பூச்சி



வன்ன வன்னப் பூச்சியாம்
வண்ணத்துப் பூச்சியாம்
வாசமிகு பூத்தேனை
வாஞ்சையுடன் குடிக்குமாம்.

பறந்து திரியும் பூச்சியாம்
பாங்கான பூச்சியாம்
பாலர் விரும்பும் பூச்சியாம்
பானம் அருந்தும் பூச்சியாம்



வசந்தகாலப் பருவத்தில்
வரும் இந்தப் பூச்சியாம்
வகைவகையாய்ப் பூச்சியாம்
வாட்டமில்லாப் பூச்சியாம்



சிங்காரப் பூச்சியாம்
சிறகடிக்கும் பூச்சியாம்
சிறுவர் பிடித்து விளையாடும்
சின்னஞ்சிறு பூச்சியாம்.

**எ.ப்.யூட் திலீபன்,**
**தரம் - 8A**
**மட்/புனித மிக்கேல் கல்லூரி.**

# ஒலிம்பிக் பற்றி சில

1. ஒலிம்பிக் விளையாட்டின் பிறப்பிடம் எது?
   **கிரேக்கம்**
2. கிரேக்கர்களின் வீரக் கடவுள் யார்?
   **சீயஸ்**
3. இப் போட்டிக்கு ஒலிம்பிக் என்ற பெயர் வரக் காரணம் என்ன?
   **ஒலிம்பியா என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டமை.**
4. எந்த ஆண்டில் நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன?
   **1896ம் ஆண்டு**
5. முதலாவது ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற நாடும் நகரமும் எது?
   **கிரீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகரில்**
6. நவீன ஒலிம்பிக் போட்டிகளைத் தோற்றுவித்தவர் யார்?
   **பிரான்ஸ் நாட்டின் பிரபு பியஸ் டி.குபேற்றின**
7. ஒலிம்பிக் போட்டி எத்தனை ஆண்டுக்கு ஒருமுறை நடை பெறும்?
   **நான்கு ஆண்டுக்கு ஒரு முறை**
8. ஒலிம்பிக் கொடி அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?
   **1920 ம் ஆண்டு**
9. ஒலிம்பிக் கொடியிலுள்ள நிறங்கள் எவை?
   **கொடியின் நிறம் - வெள்ளை**
   **வளையங்களின் நிறம் - கறுப்பு, நீலம், மஞ்சள், பச்சை, சிவப்பு.**
10. ஒலிம்பிக் போட்டியின் கொள்கைகள் எவை?
   **விரைக, உயர்க, வலிமை பெறுக.**

**க.ரிஜிதா,**
**தரம் -5**
**மட்/விளாவட்டவான்,**
**விநாயகர் வித்தியாலயம்.**

# கானல் நீர்

கோடைக்காலத்தில் நெடுந் தொலைவில் தண்ணீர் அலை அலையாய் அசைவதைப் போல் தோன்றும். அதையே கானல் நீர் என்கிறோம். தரைக்கு அருகிலுள்ள வெப்பக் காற்று ஒளிக் கதிர்களை பிரதிபலிப்பதால் இதுபோன்ற ஒரு மாயை தோன்றுகிறது.

**ச.ரமணன்,**
**ஆண்டு 8**
**மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி.**

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ஒரு தோட்டத்தில் பெரிய எலிக் குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. சகோதர சகோதரிகள், பெற்றோர்கள், மாமன்மார்கள். மாமிமார்கள் என பல உறவினர்கள் ஒன்றிணைந்து சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர். அவைகளுக்கு இருந்த ஒரே ஒரு கவலை யானையின் தொல்லை தான். அருகிலுள்ள ஓர் ஆற்றிற்கு செல்வதற்காக ஒரு யானை அவர்கள் வாழ்ந்துவந்த தோட்டத்திற்கு குறுக்காக அடிக்கடி செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தது.

ஒருநாள் அந்த யானை மரம், செடி,கொடிகள் அதிரும் வண்ணம் மிக அலட்சியமாக அவ் வழியே சென்றது. இதனால் அங்கு விளையாடிக் கொண்டிருந்த



சில எலிகள் அதன் காலிற்குள் மிதிபட்டு நசிங்கின. யானையின் தலை மறைந்ததும் எலிகள் ``கொலைகாரன்'', ``கொடுங்கோலன்'' ``பாவி'' என்றெல்லாம் கூச்சலிட்டபடி தமது அன்பிற்குரிய எலிகள் நசுங்கி இருந்த இடத்தை அடைந்தன.

ஓர் எலி கவலையுடன் ``என்ன செய்வது? இன்றோ, நாளையோ, நமக்கும் நடக்க விருப்பதுதானே'' என்றது. ``ஆமாம் நாமோ சின்னஞ்சிறு பிராணிகள், அத்துடன் மிகப் பலவீனர்கள். பெரிய மிருகங்களுடன் நாம் எப்படி மோதுவது அவைகளைத் தட்டிக் கேட்பதற்கு யார் இருக்கின்றார்கள்'' என்று புலம்பியது இன்னோர் எலி. ஆனால் நீங்கள் சொல்வதெல்லாம் சரி எனக் கீச்சிட்டது. ஓர் இளம் எலி ``ஏனைய எல்லா மிருகங்களும் போல நாமும் இங்கு அமைதியாக வாழ உரிமையுடையவர்கள். இந்த யானை எமக்குக் கொடுக்கும் தொல்லைகளையும் பொறுத்துக்கொள்ள முடியாது. பலவீனர்களுக்குக் கூட தம்மைப் பாதுகாத்துக் கொள்ளப் பல வழிமுறைகள் உண்டு'' என முழங்கியது, அவ் எலி. ``உனது திட்டம் தான் என்ன?'' என்றது பக்கத்தில் இருந்த எலி, ``மீண்டும் யானை இவ்வழியாக வரும் போது நாம் ஓடி ஒழிக்கக்கூடாது. நாம் அனை வரும் ஒன்றுபட்டு செயற்பட்டால் அந்த யானையை நாம் வெற்றிகொள்ள முடியும்'' என்றது இளம் எலி.

அன்றிரவு எலிகள் மிக இரகசியமாக ஒரு திட்டத்தை வகுத்து ஆயத்தமாக இருந்தன. அடுத்தநாள் மீண்டும் யானை அவ் வழியாக வந்தது. அவை யானையுடன் தமது உரிமைகள் பற்றி பேச முயன்றன. ஆனால் யானையோ ``இது என்ன பைத்தியகாரத்தனமான பேச்சு? எலிகளுக்கு உரிமையா?'' என்று அலட்சியமாகவும், கோபமாகவும் கத்தியவாறு ஆணவத்துடன் ஆற்றை நோக்கிப் புறப்பட்டது. உடனே எலிகள் சில அதன் வால் வழியாகவும், கால் வழியாகவும், யானையின் முதுகில் ஏறி முகத்திலும், வயிற்றிலும் காதிலும் கடிக்கத் தொடங்கின.

யானைக்கு வலி தாங்க முடியவில்லை. ``நிறுத்துங்கள்! ஊய்! வலிக்கிறது'' என்று கத்திக் கூச்சலிட்டது. இதற்கு மேலும் பல எலிகள் யானை மீது ஏறிக் கடிக்கத் தொடங்கின. ``சரி நான் விட்டுக் கொடுக்கின்றேன். உங்கள் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்கின்றேன். என்னை விட்டு விடுங்கள்'' எனக் கெஞ்சத் தொடங்கியது.

ஒரு எலி கடித்தால் தாங்கிக் கொள்ளலாம். நூற்றுக்கனக்கான எலிகள் கடிக்கும் போது யானை எப்படிததான் தாங்கிக் கொள்ளும்?

அந்த வீரமிக்க எலிகள் கடைசியில் வெற்றி பெற்றன. தம்மைவிட பெரிய மிருகம் என்பதற்காக விட்டுக் கொடுக்காமல் ஒற்றுமையுடன் போராடியதே அதற்குக் காரணம். அன்று முதல் யானை தோட்டத்தின் பக்கம் தலை காட்டவில்லை. எலிகள் தமது தோட்டத்தில் சுதந்திரமாக உலாவத் தொடங்கின.

**ஏ.எம்.அன்வர்**

# கண்டு பிடியுங்கள்-37

ஒரு சறுக்கு மரம் விளையாட்டு மைதானத்தில் நிற்கிறது. அதன் உச்சியில் ஒரு முடிச்சில் 100 ரூபாய்கள் உள்ளன. அதனைப் பெறுவதற்காகப் பலர் முயல்கின்றனர். பலர் ஏறி வழுக்கித் தோல்வியை அடைகின்றனர். இராமன் வருகிறான். அவன் அச்சறுக்கு மரத்தில் ஏறுகிறான். கிறீஸ் பூசப்பட்ட மரம். சறுக்குகிறது. ஒரு வினாடியில் மூன்று மீற்றர் ஏறினால் இரண்டு மீற்றர் சறுக்கிக் கீழிறங்குகிறான். ஆகவே 10 மீற்றர் உயரமான அச்சறுக்கு மரத்தை எவ்வளவு நேரத்தில் அடைவான்?

**இதற்கான விடையினை தபாலட்டையில் மாத்திரம் எழுதி உங்கள் பாடசாலை முகவரியுடன் 08.02.2002க்கு முன்பாக அனுப்பி வைப்பதோடு தினக்கதிர் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவும்.**

கடந்த வாரம் கண்டுபிடியுங்களுக்கான சரியான விடை 8+12+5+20 = 45

8+2 = 10 12-2 = 10

5x2 = 10 $\frac{20}{2}$ = 10

ஆகவே விடை = 10

இவ்விடையினை ஏராளமான தம்பி, தங்கைகள் விடை எழுதி அனுப்பியுள்ளனர். அதில் பரிசுக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்.
**சி.கஜந்தாயினி,**
**மட்/வின்சன்ட் உயர்தர பாடசாலை.**

## பாராட்டுக்குரியவர்

1. இ.அபிநயா, மட்/செங்கலடி மத்திய கல்லூரி.
2. ச.ஜெயகரன், மாமாங்கம்.
3. ஜே.வேஜினி, திருமலை வீதி.
4. செ.சுஜீதன், டயஸ் லேன்.
5. த.சிந்துஜெயன், திருமலை வீதி.
6. வீ.தயாளன், சிதவீரசிங்கம் சதுக்கம்.
7. க.மயூரன், திருமலை வீதி.
8. க.சொர்ணமதி, செட்டிப்பாளையம்.
9. சு.சுதேசினி, கிரான்.
10. த.ஜெயசுதன், அமிர்தகழி.
11. ம.கீர்த்தனா, கல்முனை.
12. பே.அருணா, சின்ன உப்போடை.
13. ஆ.சிவா, கிரான் குளம்.
14. ம.பிரியா, கோடைமடு.
15. கோ.பிரியாந்தினி, களுவாஞ்சிகுடி.
16. என்.கவிதா, கல்லடி.

**கண்டுபிடியுங்கள்-37**
**தினக்கதிர் வாரவெளியீடு,**
**த.பெ.எண்:- 06,**
**இல:- 155, திருமலை வீதி,**
**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு சாளரம்



-பகீ-

## ‘‘நல்ல நட்பு கோடி பெறும்’’

### இதோ நட்புப் பற்றி......



* தனிமையைப்போக்க துணை தருகிறது.
* ஏற்றுக் கொள்ளப்படுகின்றேன் என்ற நிறைவைத் தருகின்றது.
* அக்கறையுடன் செவிமடுக்க நேரம் தருகின்றது.
* மனம் விட்டு பகிர்ந்து கொள்ள நம்பிக்கை வளர்க்கிறது.
* வாழத் தகுந்தவன் என உறுதிப் படுத்துகின்றது.
* சோர்வடையும் நேரத்தில் ஊக்கம் ஊட்டுகின்றது.
* மகிழும் போது இணைந்து மகிழ்கின்றது.
* நிறைகளை கண்டு தட்டிக் கொடுக்கின்றது
* குறைகளைக் கண்டு தீர்ப்பிடுவதில்லை.
* தவறுகளை அன்புடன் தட்டிக் காட்டுகின்றது.
* ஏமாற்றங்கள் ஏற்படும் போது யதார்த்தமாக சிந்திக்கின்றது.
* விரிசல் உருவாகும் போது மனம் விட்டு உரையாடத் தேடுகின்றது
* மன்னிக்கத் தயங்குவதில்லை.
* தீர்வுகள் எடுகக வழிகாட்டுகின்றது.
* செயற்பாடுகளில் கைகொடுக்கின்றது.

(அடுத்த வாரம் இந்த நட்பை வளர்ப்பது எப்படி என்பதைப் பார்ப்போம்)

### பொன் மொழிகள்

- தந்தையின் நற்குணம் மலையைவிட உயரமானது. தாயின் நற்குணம் கடலைவிட ஆழமானது.
- தாயை யாருடனும் ஒப்பிடலாகாது. அவள் ஒப்பற்றவள்.
- நல்ல குணமுடையவனே சிறந்த நண்பன்.

மு.கிரிசாந்தன்
கொக்கட்டிச் சோலை

## சமையல் பகுதி

### பால் பாயஸம்

**தேவையான பொருட்கள்:**

நல்ல பால் 1600 மி.லி. பச்சரிசி 100 மி.லி அஸ்கா 420 கிராம்.



**செய்யும் முறை:**-3 லிட்டர் வரை தண்ணீர் பிடிக்கக்கூடிய வெண்கலப் பானை அல்லது உருளியை அடுப்பிலேற்றி, 200 மி.லி தண்ணீரும் 400 மி.லி பாலும் விடவும், ஒரு நீளக் கரண்டியால் பாலைக் கிளறி விடவும். அரிசியைக் கல் இல்லாமல் களைந்து, பால் கொதித்துவரும் போது போட்டுக் கிளறிக்கொண்டே இருக்கவும். அரிசி போட்டு 10 நிமிடங்கள் வரை கொதி வந்ததும், மீதிப் பால் பூராவையும் விட்டுக் கிளறிக் கொண்டே இருக்கவும். பால் பொங்கி வழிந்து விடாமலும், கொதி அடங்காமலும் கிளறிக்கொண்டே இருக்கவும்.

பாலிலேயே அரிசி நன்றாகப் பதமாகி ஓர் அரிசி இரண்டாக உடைபட்டுப் பஞ்சு போன்று பதம் ஆகும் வரை நன்றாகக் கிளறவும். பாலும் முறுகி, அன்னமும் பதம் ஆனதும் அஸ்காவைப் போட்டுக் கொதிக்க விடவும். 5 நிமிடம் கொதித்ததும் கீழே இறக்கி பிறகும் 2 நிமிடம் கிளறிவிடவும்.

**குறிப்பு:** கலப்படம் இல்லாத பாலில் இந்த முறையில் பாயஸம் செய்தால் ‘கோவா’ மணத்துடன் இலையில் ஊற்றிச் சாப்பிடும் பக்குவத்திற்கு அமைவாக இருக்கும். இதற்கு வாசனைச் சாமான்களோ, முந்திரிப்பருப்போ தேவையில்லை. இந்த அளவு சர்க்கரையே போதுமானது. அதிகத் தித்திப்பு வேண்டியவர்கள் மேலும் 100 கிராம்வரை சேர்த்துக் கொள்ளலாம். இந்த அசல் பாயஸம் 8 அல்லது 10 கப்வரை இருக்கும். ஆகையால், பெரிய அளவில் தயார் செய்வதாயிருந்தால் இந்த அளவு முறைக்கேற்ப அதிக சாமான்கள் சேர்த்துக் கொள்ளவும்.

## சிந்தனைத் துளிகள்



- வறுமையைக் கண்டு வாழ்க்கையில் ஒதுங்கி விடாதே- செல்வம் வந்தால் சீறியும் பாயாதே.
- உன்னைப் பற்றி உலகம் ஆயிரம் தான் சொன்னாலும் உன் மனதை பக்குவமாய் பாதுகாத்துக் கொள்.
- ஒருவன் இறந்த பின்புதான் இந்த உலகம் அவனை புகழ்ந்து பேசும்.
- எவன் பிற மனிதனை ஏமாற்ற நினைக்கிறானோ அவன் தன்னால் ஏமாறுவான்.
- நன்றாக சிந்தித்து முடிவு செய் – உனது வாழ்க்கை உனது கையில்.
- அன்புக்கு அடி பணி. ஆனால் பெருமை கொள்ளாதே.

பா.ரிஹானா சஹீட்,
ஓட்டமாவடி.


## கடி ஜோக்ஸ்

தொகுப்பு: எஸ்.வாசுகி

**கணவன்:** இஞ்சாருங்கோ என்ட வயிற்ற. .இன்னைக்கு நான் நல்லா வயிறு முட்டச சாப்பிட்டன். இன்னைக்கு ரொம்ப ரேஸ்ற் உன்ர சமையல.
**மனைவி:** (புன்னகைத்தவாறு) அப்படியா?
**கணவன்:** ஆமா அப்படித்தான்! உன்ர தலைமுடி சாப்பாட்டுப் பீங்கானுக்க கிடந்ததாலதான்.

**ஒருவர்:** ஏன் அந்த மனிசி கால்ல போடுற செருப்ப கையில காவிக் கொண்டு போறாவு?
**மற்றவர்:** கால்ல போட்டா செருப்பு தேஞ்சுபோகும் என்றுதான்.

‘வெல்லபதி’ சரவணமுத்து நவேந்திரன், எருவிலூர்.



**போட்டி இல:-34 பரிசுக்குரியது**

### யுத்தத்தின் அவலம்

படிக்கும் ஆர்வத்துடன்
பாடசாலை செல்கையிலே- இங்கு
பாடசாலைகள்
இராணுவ முகாம்கள்- ஆனதால்
பாழாய்ப் போனது எங்கள் கல்வி.

சி.பரமேஸ்வரி,
முனைக்காடு- கிழக்கு,
கொக்கட்டிச்சோலை.

### ‘‘மாண்டு போ வன்முறையே’’

வாய்ப் பேச்சில்
மாண்டு போன
வன்முறைகள் எல்லாமே....
மீண்டும் வந்து சேர
வேண்டாம் என்று...!
வேலியிட்டு வைத்திடவா..?
வேர் கொண்டுசெல்கிறீர்கள்!

கே.புவிதராஜா,
கிரான்குளம்.

### அவலம்

பள்ளி சென்று
கல்வி கற்கும் பருவமதில்
பட்டினி கிடக்கும்
உறவுகளை காப்பாற்றவா?
விறகு கட்டி செல்கிறீர்களா?

சங்கீத்தா-வேதன்,
37/120, பாலயடிவட்டை,
வக்கிஎல்ல.

### சமாதானம்

சமாதானம் வந்துவிட்டது என்று
சந்தோசத்துடன்
விறகு எடுப்பவர்கள் யார்?
தமிழ்த் தாயின் குழந்தைகளா?
பாவம்
உங்கள் சந்தோசம்
சூடுபிடிக்கும் முன்னே
வந்து விடும் போர்.

ப.யது,
மட்டக்களப்பு.

### தொலைந்து விட்ட வாழ்வு

அன்று புதுவாழ்வு மலரும்- என்று
சுமந்தோம் பள்ளிப் புத்தகங்களை-
ஆனால்
இன்று தொலைந்து விட்ட
வாழ்வை
தொடரவே சுமக்கின்றோம்
கொள்ளி.

அ.சாந்தினி,
இல 46, வாவிக்கரை வீதி-2,
மட்டக்களப்பு.

### பாராட்டுக்குரியவை

மானத் தமிழினப்
புதல்வர் நாம்
எத்தனை
ஒடுக்கு முறைவரினும்
எண்ணித் துணிந்து
உயர்ந்து நிற்போம்.
ஓய்வுகள் அற்ற
உழைப்பாலே
உறுதியுடன் நாம்
நிமிர்ந்து நிற்போம்.

எஸ்.தீபா,
களுவாஞ்சிகுடி.

### பாதிக்கப்பட்டோர்

விறகைக் கொண்டு விற்றுவர
விரைந்து செல்லும் இவர்கள்
பாடசாலை செல்லமுடியாமல்.
பாதிக்கப்பட்ட
சிறுவர் பட்டியலில்
இவர்களுமொன்றா!

தி.வினிதா,
காளி கோயில் வீதி,
பெரிய ஊறணி.



இப்படத்தைப் பிரதிபலிக்கும் கவிதையினை எழுதி அனுப்புங்கள். அனுப்பும் கவிதைகள் வார்த்தைகளில் எண்ணிக்கையில் அதிகம் இல்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து கீழ்க்காணும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்புங்கள். சிறந்த கவிதைகளுக்கான நல்ல, தரமான கவிதைப் புத்தகப் பரிசு காத்திருக்கிறது. மேலும் உங்களுடைய கவிதைகளை எதிர்வரும் மாசி மாதம் 08ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

கவிதைப்போட்டி-35
தினக்கதிர் வாரவெளியீடு
த.பெ.எண்:- 06
மட்டக்களப்பு

உங்களுக்கான பரிசில்களை வழங்குபவர் நாவலூர் சிவஸ்ரீ உ. [illegible]ஐயர்.



## நானும் அவளும் நாகரிகமற்ற நிலவும்

கவிஞர் வில்சன் சுதாகர்

முத்தமிடும் நிமிடமும்
இச்சை கொள்ளும் பொழுதும்
வெட்கமில்லாமல்
பார்க்கிறதே நிலவு.

நான் –
ரசிக்க வேண்டிய
என் காதலியின் கூந்தலையும்
அவளின் மார்பகங்களையும்
அது கனியென
நினைத்து விட்டதோ?

பகலில்தான்
இங்கே நிம்மதியில்லை
இரவிலும் கூடவா?

சீ!
நிலவே!
உன் முகத்திரையை
முகிலால் இழுத்து மூடு!
நட்சத்திரக் கற்களை
அடுக்கி....
உன் முகத்திரையை மறை!

நானும்
அவளும்
முத்தமிடும் நேரம்
நெருங்குகிறது...
வீட்டுக்குள் புழுக்கம்
வாசலில் அவளின் மயக்கம்.



நில்வே!
போய்விடு
இரக்கமற்று
உன் பார்வையை
என்னால் ஜீரணிக்க
முடியவில்லை!

நீ பெண்ணோ?
நதியோ?
எனக்குத் தெரியாது!
இப்போதைக்கு
நீ இரக்கமற்ற
கற்பாறை என்பதே
எனது இறுதி முடிவு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுக்கள் ஓர் ஆய்வுக்கண்ணோட்டம்

# நாட்டின் வரலாற்றை இனம் காட்டும்

## 'திசை ஆயிரத்து எண்ணூறுவர்' கல்வெட்டு

ஒரு நாட்டின் வரலாற்றைச் சரியாக இனம் காட்டுபவை பழைய நாணயங்கள், கட்டிடங்கள், கல்வெட்டுக்கள், பாடல்கள் என்பனவே. இலங்கையின் வரலாற்றில் தமிழ்க்கல்வெட்டுக்களின் இடம் முக்கியமானது. இதனைத் தொடர்கட்டுரையின் மூலமாக ஆராய்வதே எமது நோக்க



பதவியாவில் கண்டு பிடிக்கப் பட்ட தமிழ்க் கல்வெட்டு

மாகும்.

இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் பலவும் பொதுவான சில அம்சங்களை உள்ளடக்கியுள்ளன. அவை வெவ்வேறு இடங்களில் அமைந்து இருந்தாலும் அவை சொல்லும் விடயங்கள் பொதுவானவையாகவே இருந்துள்ளன. இக் கல்வெட்டுக்களில் ''திசை ஆயிரத்து எண்ணூறுவர்'' என்ற கல்வெட்டு மூன்று இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது அவை:-

(1) வாகல்கட(2) பதவியா (3) விகாரச்சினா ஆகிய இடங்களாக இனம் காட்டப்பட்டு உள்ளன. வாகல் கட என்ற இடம் கப்புக் கொல்லாவவில் ( Koppuqo llewa ) பாயும் யானோயா நதியில் அமைக்கப்பட்டு உள்ள வகல்கொட நீர்த்தேக்கத்தில் அமைந்திருந்ததாக இனம் காணப்பட்டுள்ளது. பதவியா என்பது கெப்பற்றிக் கொல்லாக் கிராமத்தில் அமைந்திருக்கின்றது. விகாரச்சினா என்று குறிக்கப்படும் இடம் மாத்தளை வடக்கில் கந்தப்பலக் கோறளையில் இடம் பெற்று இருந்த இடமாகும்.

### வரலாற்றுக்காலம்.

இந்த மூன்று கல்வெட்டுக்களின் காலம் இன்னும் வரலாற்று ஆய்வாளர்களால் முழுமையாக்கப்படவில்லை, பெரும்பாலான ஆய்வாளர்களின் கருத்துப்படி இந்தக் கல்வெட்டுகளின் காலம் கிறிஸ்துவுக்குப் பின்பு பன்னிரண்டு அல்லது பதின்மூன்றாம் நூற்றாண்டாகும். இந்தக் கல்வெட்டுக்கள் தொல்பொருள் திணைக்களத்தாரால் விளம்பரப்படுத்தப்படவில்லை. சில ஆய்வாளர்களின் கருத்துப்படி இக்கல்வெட்டுக்கள் சோழர் காலத்துக்கு முந்தியவை எனச் சொல்லப்படுகின்றது. தென்னிந்திய வியாபார நிறுவனத்தின் கட்டளைகளை இக் கல் வெட்டுக்கள் சுமக்கின்றன. இதே மாதிரியான கல்வெட்டுக்கள், இந்தியா, சுமத்திரா, மியன்மர் (பர்மா) ஆகிய இடங்களிலும் இம்மாதிரியான கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன.

### நீளமான கல்வெட்டுக்கள்.

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களில் அதிகம் நீளமான கல்வெட்டுக்கள் இவைகள். முப்பத்து ஆறு, முப்பத்து ஒன்று, முப்பத்து ஏழு வசனங்கள் முறையே இக்கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இந்த வகையான கல்வெட்டுக்கள் உலகத்தின் வேறு பகுதிகளில் கண்டு பிடிக்

திக்கவயல் சி.தர்மகுலசிங்கம்

கப்பட்ட கல்வெட்டுகளை ஒப்பீட்டு அடிப்படையில் ஆராய்ச்சி செய்வதற்கு உதவி செய்கின்றன.இந்த மூன்று கல்வெட்டுக்களிலும் வாகல்கட என்ற இடத்தில் எடுக்கப்பெற்ற கல்வெட்டுத் தெளிவானது. இரண்டாவது, பதவியாவில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு நன்கு பாதுகாக்கப்படுகின்றது. விகாரச் சினாவில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு வாசிப்பதற்குக் கஸ்டமான 17 வரிகளைக் கொண்டிருக்கிறது. இந்தப் பதினேழு வரிகளில் நாலு மதங்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட செய்திகளும் அடங்கியிருக்கின்றன. சமய்வாதிகள் நானாதேசீஸ் எனக் குறிப்பிடப்படுவதுடன், நாணயங்கள் செய்யப்பட்ட இடம் அக்கக்களை (Akkacalai) எனவும் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

### தலைநகர் பெயர் மாற்றம்

இக் கல்வெட்டில் அய்க்கோல் என்ற தலைநகரும் குறிப்பிடப்படுகின்றது. (Aidole) ஆனால் இந்த இடத்தை ஆரியபோலில் என்ற பெயரில் இலங்கைத் தொல்பொருளியல் திணைக்களம் திருத்தியுள்ளது. இந்தச் சொல் மாற்றம் மிகவும் வேடிக்கையானது. இந்த மூன்று கல்வெட்டுக்களிலும் துர்க்கா வழிபாடு இருந்தமையைத் தெளிவாக உணர முடியும். இதுவே பரமேஸ்வரி வழிபாடாக இப்போது மாறியுள்ளது.

### ''அங்ககாரன்'' என்ற சொல்

இந்தக் கல்வெட்டுக்களில் காணப்படும் பரிச்சயமான சொல் அங்ககாரன் என்பது. அங்ககாரன் என்பது தலைவரைக் குறிபபது. தெலுங்கு கன்னட சொற்பிரயோகங்களின் படி தலைவனைக்காக்கப் போராடி அழியும் ஒரு போர் வீரனைக் குறித்தது (D.C Sircar, Indian epicgraphical glossary P21) இக் கல்வெட்டுக்கள் வீரபட்டினம் என்ற தமிழ் நகரத்தையும் குறிக்கின்றது. இக்கல்வெட்டுக்கள் மூன்றும் தமிழ் மொழியிலேயே எழுதப்பட்டுள்ளது. இது ஒரு சிறப்பு அம்சம் ஆயினும் இக்கல்வெட்டுக்களின் முகப்பில் காணப்படும் எழுத்துக்கள் சமஸ்கிருதத்திலேயே எழுதப்பட்டுள்ளன. கிரந்த எழுத்துக்களும் பாவிக்கப்பட்டுள்ளன.

ஜெயன் கொண்பின் (1-26) சிறினா (2-31) சமயசம்மதம் (3-15) ஆகிய சொற்களைக் குறிக்குமிடத்தில் கிரந்த எழுத்துக்கள் பாவிக்கப்பட்டு உள்ளன. பட்ணம்( 1-11) என்ற சொல்லும் இடம் பெற்றுஉள்ளது.

இக் கல்வெட்டுக்களில் நெட்டொலிகளும் குற்றொலிகளாகவே ஒலிக்கின்றன. இ.ஈ. ஒ.ஓ என்ற ஒலிகள் குற்றொலிகளாக முறையே இ.ஒ.என ஒலிப்பது பொதுத்தன்மை.

### தமிழ் இலக்கணத்தில் ஆரம்ப நிலை.

இக் கல்வெட்டுக்கள் தமிழ் இலக்கணத்தின் ஆரம்ப நிலையை அழகாகச் சுட்டிக் காட்டியுள்ளன. முப்பத்து இரண்டு (1-6) அறுபத்து நான்கு (1-7) பட்டினன் (1-14) ஆயிரத்து. (1-13) பட்டினத்து (2-16) ஆயிரம் (3-34) என்ற எண் சொற்கள் தமிழில் எடுத்தாளப்பட்டுள்ளன. சமஸ்கிருதத்தில் உள்ள (இரவு IRA) என்ற பதம். தமிழில் இறம் ஆக மாறியது என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். இதனை ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே இருக்கின்றது. ஏனெனில் தமிழ் வளர்ச்சியின் ஆரம்பக் காலத்தில் எண் எழுத்துக்கள் தூயதமிழில் எடுத்தாளப்பட்டுள்ளன. இதில் ஐந்நூறு என்ற பதமும் ஒன்றாகும்.

பின்வரும் இலக்கண சொல் அமைப்புக்கள் கல்வெட்டில் எடுத்தாளப்பட்டுள்ளன. அவை:-

பழுதில்லாத் தொழில் (3/12காவாரா காலத்து (3.30) Time it werenot protected) (3/30) விடுபடாமல் (2/19) நன்றாகாது (3/32) அன்றி (1/11) இக் கல்வெட்டுக்களில் கின்று, கிறு என்ற இலக்கணங்கள் சரியான முறையில் பயன்படுத்தப் படுகின்றன. இந்த மூன்று கல்வெட்டுகளும் பலரின் பெயர்களை அறிமுகப் படுத்தியிருக்கின்றது. ஒருவருக்கு இரண்டு பெயர்கள் இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. (உதாரணம்) பேரன் விற்றி விற்றான்கன், அல்லது தேசி அடைக்கலநாட்டுச் செட்டி, வேலன் அம்பலக் குட்டன் அல்லது விரகன் செட்டிகள் என்ற சொல்லாட்சி தாராளமாக இடம் பெற்றுள்ள சமஸ்கிருதத்தில் செட்டி என்பது ஸ்றெஸ்தின் (Sresthin) எனச் சொல்லப்படுகின்றது. தெசி (teci) என்பதும் செட்டியையே குறிக்கின்றது.

மேலே காட்டிய மூன்று கல்வெட்டுக்களில் வலங்கை அல்லது வலங்கையர் பற்றிக் குறிப்புக்கள் காணக் கிடக்கின்றன. வாகல்கடக் கல்வெட்டு. சித்தன்காட்டன் வலஞ்சியர், சேனாதிபதி கோணன் மாதவன் அல்லது வேலங்கை யாந்தன் என்ற பெயர்களைக் குறிப்பிடுகின்றது. நடக்கின்றா (2.8) வளர்கிறா(2/30) வளர்க, பெறுக என்ற பதங்களும் மறவாக்க என்ற பதங்களும் (3/37) இக் கல்வெட்டுக்களில் பாவிக்கப்பட்டு இருக்கின்றன. மறவாக்க (MARAVAKA) என்பது மற என்பதன் எதிர்ப்பதம். ஆர் என்ற பதம் பன்மையைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. தேசீயமந்தை அலய்கலன்கட்டக் காந்தை நாட்டுச் செட்டியார், தேசிக்கு இன்னாதான் வழக்குச் செட்டியார். உதயனார் விரகன் சேனத்துச் செட்டியார். என்பன. மண், பின், கடை, கல் என்ற தமிழ்ச் சொற்களும் இந்த மூன்று கல்வெட்டுக்களிலும நன்கு பாவிக்கப்பட்டு உள்ளன. அத்துடன் எழுதும்படி, மாறும்படி என்ற மொழி நடைகள் பாவிக்கப்பட்டு உள்ளன. இந்த விதமான மொழி நடை பதவியாவில் இருந்து கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டிலேயே அதிகம் உள்ளது. (2-15) பதவியாக் கல்வெட்டு விருதியாப்பரண வலங்கைமார் பற்றிக் குறிப்பிடுசின்றது. வலங்கையார் அல்லது வலஞ்சியார் எனக் குறிப்பிடப்படும் பிரசைகள் சோழர்கள் இலங்கைக்குப் படை எடுத்து வரும் வரை, முதலாம், விஜயபாகு காலத்திலும் முதலாம் பராக்கிரமபாகு காலத்திலும் அரசியலில் கடுமையான செல்வாக்குச் செலுத்தினார்கள்.

### 'காட்டனேரி' யே வாகல்கட ஆனது!

வாகல் கடலில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு முற்றுப் பெறாத ஒன்றாகக் குறைபாடு கொண்டது. காட்டனேரியின் உருவாக்கத்தை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. ஆகையால் இன்றைய வாகல்கட நேற்றைய காட்டனேரி என்ற தூய தமிழ்ப் பெயர் என்பது வெளிப்படையான ஒன்று பதவியாவில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு, நாகர், நாகரம் என்ற சொற்களைக் குறிப்பிடுகின்றது. இந்தக் கல்வெட்டு செட்டியரின் ஆதிக்கத்தையும் அவர்கள் சிவன் வழிபாட்டில் ஈடுபட்டதையும் சுட்டிக் காட்டுகின்றது. வாகல்கட கல்வெட்டு வீரபட்டினம், வீரக்கொடி என்ற பெயர்களையும் குறிப்பிட்டுச் சொல்கின்றது. சிங்கள மக்கள் இன்று தமது பெயர்களாகக் குறிப்பிடுதம் வீரக்கொடி என்ற பெயர் தமிழ்ப் பெயரே என்பதற்கு வாகல்கட கல்வெட்டும் உதாரணமாகும். ❒

# இராகு, கேது மாற்றம்

## நட்சத்திரங்களின் பலன்கள்

### (2002.01.25)

**மகம்:-** சுக்கிரனை அதிதேவனாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு இராகு, கேது மாற்றத்தின் படி 10ம். வீட்டில் இராகு வருவதால் வெளி நாட்டுப் பிரயாணம் செய்பவர்கள், வெளியூர்கட்கு இடம் மாறிச்செல்பவர்கட்கும் நல் சிறப்பின் வெற்றி கிடைக்கும். வேறுநாட்டில் இருந்து. சொந்த ஊர் வருபவர்கட்கும் வெற்றி கிட்டும். மற்றபடி மாணவர்கள் கல்வியில் சிறப்படைவார்கள்- குழந்தைகள் நல்ல தேக வளர்ச்சி அடைவார்கள். காதலர்கள் திருமண வாழ்வில் இணைவார்கள். மணம் புரியாதவர்கள் மணம் புரிவார்கள். முதியோர்கட்கு தேகசுகம் நன்றாக இருக்கும் பணப்புழக்கம் சுமாராக இருக்கும்.

**பூரம்:-** பார்வதி தேவியை அதி தேவதையாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு இந்த இராகு, கேது மாற்றம் நல்ல சிறப்பான பலனைக் கொடுக்கும் வெளி நாட்டில் இருப்பவர்கட்கு நல்ல பலன். பிரிந்தவர்கள் ஒன்று கூடுவார்கள். குடும்பத்தில் மகிழ்சி உண்டாகும். குழந்தைகள் தேக வளர்ச்சி அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள். சத்துருக்கள் சரண் அடைவார்கள்.

**உத்தரம்:-** சூரியனை அதிதேவனாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு 1ம் பாதத்தில் பிறந்தவர்களை விட 2ம், 3ம், 4ம் பாதத்தில் பிறந்தவர்கள் நல்ல சிறப்புப் பலனை அடைவார்கள். பதவி கிடைக்கும். வெளிநாட்டு பிரயாணம் வெற்றி பெறும். மாணவர்கள் பரீட்சைகளில் வெற்றி பெறுவார்கள். திருமணம் கை கூடாத பெண்களுக்கு திருமணம் கைகூடி வரும். முதியோர்கட்கு தேகசுகம் நன்றாக இருக்கும்.

**அத்தம்:-** சரஸ்வதியை அதிதேவதையாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு இந்த இராகு, கேது மாற்றத்தின் படி நீண்டநாள் பதவி கிடைக்காமல் துன்புறுவபர்கட்கு பதவி கிடைக்கும். வெளிநாட்டுப் பிரயாணம் வெற்றிபெறும். மாணவர் பரீட்சைகளில் வெற்றி பெறுவார்கள். கன்னியர்கட்கு திருமணம் கைகூடும். முதியோர்கட்கு தேகசுகம் நன்றாக இருக்கும்.

**சித்திரை:-** துவஷ்டாவை அதிதேவனாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு 1ம்,2ம் பாதத்தை விட 3ம் 4ம் பாதத்தில் பிறந்தவர்கட்கு மிகுந்த கஷ்டங்கள் உண்டாகும். திருமணம் தடைப்படும். வெளிநாட்டுப் பிரயாணம் தடைப்படும் எதிரிகளால் துன்பம், நோய் கூடி வரும். இடமாற்றம் உண்டு. பதவி கிடைக்க மாட்டாது. மற்றும் காதலர்கள் மனம் வெறுத்து பிரிந்து போவார்கள்.

**சுவாதி:-** வாயுபகவானை அதிதேவனாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு இந்த இராகு, கேது மாற்றம் நல்ல பலன்களைக் கொடுக்க மாட்டாது. பிரயாணம் தடைப்படும். மாணவர்கள் பரீட்சைகளில் வெற்றி பெறுவது கஷ்டம். திருமணம் தடைப்படும். எதிரிகளால் துன்பம், கடன் தொல்லை, தேகசுகம் பாதிப்பு போன்ற பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டி வரும். அம்மன் வழிபாடு செய்து நிவர்த்தி பெறலாம்.

**விசாகம்:-** முருகனை அதிதேவனாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு 1ம், 2ம், 3ம் பாதங்களில் பிறந்த வர்கட்கு மிகுந்த கஸ்டங்கள் ஏற்படும். 4ம் பாதத்தில் பிறந்தவர்கட்கு நல்ல பலன்கள் உண்டு. திருமணம் பரீட்சை வெற்றி. வெளிநாட்டு பிரயாணம் பதவி தேகசுகம் போன்ற பல நல்ல முகூர்த்தங்கள் உண்டாகும்.

**அனுசம்:-** இலட்சுமியை அதிதேவதையாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு இந்த இராகு, கேது மாற்றம் நல்ல சிறப்பாகும். திருமணம் கைகூடி வரும் மாணவர்கள் பரீட்சைகளில் வெற்றி பெறுவார்கள். பதவி கிடைக்கும். வெளிநாட்டு பிரயாணங்கள் வெற்றிபெறும். சமூகத்தில் புகழ் ஓங்கும். வயது முதிந்தோர்கட்கு நல்ல கடவுள் சிந்தனை ஏற்படும்.

**கேட்டை:-** இந்திரனை அதிதேவனாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு நல்ல பலன்கள் நடைபெறும். விட்டுப் போன உறவினர்கள் ஒன்று கூடுவர். குடும்பம் மகிழ்சியாக இருக்கும். பிள்ளைகள் நல்ல தேக வளர்ச்சி அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள். பகைவர்கள் நண்பர்கள ஆவ்ார்கள். பிரயாணங்கள் வெற்றி பெறும் பணவரவு கூடும்.

**சிவஸ்ரீ காசிமா பஞ்சாட்சரக் குருக்கள்**
**(சோதிடர்)**
**அமிர்தகழி,**
**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் முச்சக்கரவண்டிச் சாரதி மீது தாக்குதல்

## -ஆட்டோசாரதிகள் மறியல் போராட்டம்-

(ஏறாவூர் நிருபர்)

முச்சக்கர வண்டிச் சாரதியொருவரை பொலிஸ் கான்ஸ்டபிள் தாக்கிய சம்பவத்தினைக் கண்டித்து ஆட்டோ சாரதிகள் நேற்று ஏறாவூர்ப் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். சம்பந்தப்பட்ட கானஸ்டபிளுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி உறுதியளித்துள்ள தனால் அரை மணி நேரத்தில் மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

நேற்றுக் காலை 9.00 மணி முதல் ஏராளமான ஆட்டோ வண்டிகள் ஏறாவூர் பொலிஸ் நிலையம் முன்பாக நிறுத்தப்பட்டிருந்தன.

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரினால் தாக்கப்பட்ட சாரதி ஆர்.சம்ஹார் ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

வீதியில் தேங்கி நின்ற மழை நீர் ஆட்டோ ஓடிய போது சிதறி சிவிலுடையில் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிளின் ஆடையில் பட்டதனால், சாரதி தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் கான்ஸ்டபிளினால் தாக்கப்பட்ட சாரதி ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

# ஓட்டமாவடி பிரதான வீதி புனரமைப்புச் செய்யப்படவில்லை

(ஓட்டமாவடி இஸ்மாயில்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதான வீதி முக்கிய பிரதான வீதியாகும். இப்பிரதான வீதியின் இரு மருங்கிலும் நூற்றுக்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ளன. இரு பக்கங்களிலும் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் மேல் பலகைகள் போடப்பட்டுள்ளன. அதன் மேலால்தான் சாமான்களைக் கொள்வனவு செய்வோர் செல்ல வேண்டியதாக. உள்ளது. இதனால் அவர்கள் அசௌகரியத்திற்கும் உள்ளாகின்றனர்.

அண்மையில் பெய்த அடைமழையால் தண்ணீர் வழிந்தோட வழியில்லாததால் தண்ணீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுகின்றது. அத்துடன் வடிகால் களிலுள்ள மண்ணை வீதியில் அள்ளிப் போட்டிருப்பதால் பிரதான வீதி மணல் வீதி போல் காட்சியளிக்கிறது.

புதிய சந்தைக்கு செல்லும் பாதையில் மடுவுள்ளதால் மழை பொய்தால் சமுத்திரம் போல் காட்சியளிக்கிறது.

பிரதான வீதியைப் பராமரிப்பது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பாகும். சுமார் 3 வருடங்களுக்கும் மேலாக இப்பிரதான வீதி சீரழிந்து கிடப்பதைக் காண முடிகிறது.

குறைகளைச் சுட்டிக் காட்டிய போதிலும் நிவர்த்தி செய்யாது விடுகின்றனரென்று பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# ஆழ்கடல் மீன் பிடியாளர்களுக்கு தொலைத் தொடர்பு கருவிகள்

(நமதுநிருபர்)

வட கிழக்கு தவிர்ந்த மாவட்டங்களில் மீனவர்களுக்கு வழங்கட்டுள்ளது போன்று தொலைத் தொடர்புக் கருவிகளை கிழக்கு மாகாண ஆழ் கடல் மீன் பிடிப் படகுச் சொந்தக் காரர்களுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை மேற் கொள்ளுமாறு வாழைச்சேனை பிறைந்துறைச் சேனை சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் கடல்வள மற்றும் மீன்பிடி பிரதியமைச்சர் மொஹிதீன் அப்துல் காதரிடம் மகஜர் மூலம் கோரியுள்ளது.

முன்னைய அரசு வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தத்தைக் காரணம் கூறி அந்தப்பகுதி மீனவர்களுக்கு தொலைத் தொடர்புக் கருவிகளை வழங்க மறுத்தது. ஆயினும் கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாண மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் இக்கருவிகளை வழங்கியிருக்கின்றது.

தற்போது நல்ல சூழ்நிலை வட கிழக்கில் தோன்றியிருப்பதால் தொலைத் தொடர்புக் கருவிகளைப் பெற்றுத் தருமாறும், பல நாட்கள் ஆழ் கடலில் தங்கியிருந்து மீன் பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு உதவுமாறும் மீனவர் கூட்டுறவுச் சங்கம் தமது மகஜரில் கேட்டுக் கொண்டுள்ளது.

# குழந்தைகள் காணிக்கையுடன் கூட்டுத் திருப்பலி

(புஸ்பா)

மட்டக்களப்பு தாண்டவன்வெளி வியாகுலமாதா ஆலய வருடாந்த விழாவை முன்னிட்டு சிறார்களுக்கு புது நன்மை, உறுதிப் பூசுதல் என்பன நேற்று மட்டக்களப்பு திருகோணமலை மறை. மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பெற்றோர் குழந்தைகளை அன்னைக்கு காணிக்கையாக செலுத்தினர். இன்று ஞாயிற்றுக்கிழமை விழா முடிவு நாள் ஆகையால் சுதந்திரன் விளையாட்டுக் கழகத்தினரால் விளையாட்டு நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

# கட்டாக்காலி ஆடு மாடுகளை அகற்றும் பணியில் மாநகரசபை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு நகரில் திரியும் கட்டாக்காலி மாடுகள், ஆடுகளை அகற்றும் பணியில் நேற்று முன்தினம் மாநகரசபை அதிகாரிகள், ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதில் சுமார் 65 மாடுகளும், 75 ஆடுகளும் பிடிக்கப்பட்டுள்ளதாக மாநகரசபை அறிவித்துள்ளது. கட்டாக்காலி மாடுகளை அகற்றுமாறு பல தடவைகள் அறிவிக்கப்பட்டும் இது சம்பந்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை காரணமாகவே இவ்வாறு பிடிக்க நேர்ந்தது என மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

சில தினங்களாக வீதியோரங்களில் பொருட்களை வைத்து விற்பனை செய்தல், கட்டாக்காலி மாடுகள் போன்றவற்றிற்கு எதிரான நடவடிக்கைகள் மாநகர சபையினால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதே வேளை நேற்றைய தினம், மட்டக்களப்பு ஞானசூரியம் சதுக்கத்தில் உள்ள வெல்டிங் கராஜ் ஒன்றினுடைய சில பொருட்கள் மாநகர சபையினால் எடுத்துச் செல்லப்பட்டு மாநகரசபை வேலைத் தளத்தில் வைக்கப்பட்டுள்ளன.

# மட்டு /இருதயபுர வீடொன்றில் ஓட்டைக் கழற்றி பகல் கொள்ளை

(க.ஜெகதீஸ்வரன்)

மட்டக்களப்பு இருதயபுரத்திலுள்ள லோகேந்திரன் ஆசிரியரின் வீட்டில் பகல் வேளையில் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும், நவீன கமரா ஒன்றும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இவ் விடயம் பற்றித் தெரியவருவதாவது கடந்த முதலாம் திகதி குறித்த வீட்டிலுள்ள கணவன், மனைவி, இருவரும் ஆசிரியர் தொழிலின் நிமித்தம் பாடசாலைக்குச் சென்ற பின்னரே இக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டில் யாரும் இல்லாததைப் பயன்படுத்தி கொள்ளையர்கள் இருவரே இக்கொள்ளையைப் புரிந்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது. ஓட்டைக் கழற்றி வீட்டுக்குள் சென்று அலுமாரியை உடைத்தே கொள்ளையிடப்பட்டுள்ளது.

அலுமாரிக்குள் இருந்த 15 பவுன் தங்க நகை, 2500 ரூபாய் பணம், நவீன கமரா ஒன்றும் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் சம்பந்தமாக மட்டக்களப்பு பொலிசில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதையடுத்து மேலதிக விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இப்பகுதியில் அதிகரித்து வருகின்ற போதிலும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

# பேக்கரி உரிமையாளர் கலந்துரையாடல்

(நமதுநிருபர்)

பாண் நிறை சம்பந்தமாக வெதுப்பக (பேக்கரி) உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் 6ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

அரச அதிபர் சி.சண்முகம் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இக் கலந்துரையாடல் இடம் பெறும்.

பாண் வெதுப்பக உரிமையாளர்கள் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு தமது அபிப்பிராயங்களையும் தெரிவிக்கலாம்.

# ஜனனம் முதல் மரணம்....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

உதாரணமாக.

*'பால் பால்*
*என்ன பால்?*
*எருமைப் பால்*
*என்ன எருமை?*
*காட்டெருமை*
*......................'* எனப்

பாடல் நீண்டு கொண்டு போகும்.

நாட்டார் பாடல்கள் தொடர்பான ஆய்வில் சிறுவர் பாடல்கள் தொடர்பான ஆய்வின் தேவையை இங்கு நோக்குதலும் இன்றியமையாதது. இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்கள் சிலவற்றில் நாட்டாரியல் மொழித்துறையோடு இணைந்த வகையில் நாட்டார் பாடல்கள் பற்றிய ஆய்வுகளும் பல்வேறு அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாய் வுகளில் பல கிடைத்த பாடல்களை வகைப்படுத்துவதும் அவ்வகைப் பாட்டுக்குரிய பாடல்களைக் குறிப்பிடுவதுமே வழக்கமாகியுள்ளன. பாடப்படுகின்ற சூழல், பாடலின் அமைப்பு, பாடப்படுகின்ற முறை என்பனவற்றை ஆய்வாளர்கள் குறிப்பிடுவதில்லை. இந்த அடிப்படையில் சிறுவர் பாடல்களை ஒரு ஆய்வுத் தலைப்பாகக் கொண்டு, சிறுவர்கள் பாடும் சூழல், பாடப்படும் சந்தர்ப்பங்கள், பாடலைக் கட்டும் தன்மை என்பவற்றை ஆராய்ந்து சிறுவர்களின் தனித்த உலகத்தைக்காண வேண்டும். அத்துடன் நாட்டார் பாடல்களின் வளர்ச்சியில் சிறுவர்களுக்குரிய இடத்தையும் கண்டு கொள்ளல் வேண்டும்.

# மட்டு படுவான்கரைப் பகுதியில் அறுவடை ஆரம்பம்!

(நமதுநிருபர்)

மட்டக்களப்பு படுவான் கரைப் பிரதேச வயல்களில் தற்போது நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது அரசு- புலிகள் மோதல் தவிர்ப்பு நடை முறையிலுள்ள இச் சந்தர்ப்பத்தில் நெல் அறுவடை கிரமமாக நடைபெற்று வருகின்றது.

படையினரின் நல்லெண்ண சமிஞ்ஞைகளை அடுத்து விவசாயிகள் நெல்மூடைகளை எவ்வித சிரமமுமின்றி இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசச் சந்தைகளுக்கு எடுத்துச் செல்வதையும். எரி பொருட்களை கட்டுபாடின்றிக் கொண்டு செல்வதையும் காணக் கூடியதாகவுள்ளது.

# 1500 பேர் தெரிவு

(காரைதீவு நிருபர்)

சம்மாந்துறை வலயத்தில் 'கவ்சோ' (குழுமுயற்சியில் சமூககட்டமைப்பு) எனும் அமைப்பு யுனிசெவ் நிறுவனத்துடன் இணைந்து நடாத்திய ஆய்வில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்கள் 1500 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 37 பின் தங்கிய பாடசாலைகளிலிருந்து தெிவு செய்யப்பட்டுள்ளனர். என ஆலோசகர் ஜப்பார் தெரிவித்தார்.

# கோட்டைக்கல்லாற்றில் ஒன்றியக் கூட்டம்!

(அரியம்)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களின் தலைமை ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் நேற்று 2ம் ஆம் திகதி காலை 10 மணிக்கு கோட்டைக் கல்லாறு அம்பாறை வில்லூன்றிப் பிள்ளையார் ஆலயத்தில் ஒன்றியத்தின் தலைவரும் கொக்கட்டிச் சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலய தலைவருமான அ.இராசதுரையின் தலைமையில் இடம் பெற்றது.

இக்கூட்டத்தில் எதிர் வரும் உள்ளூராட்சித தேர்தலில் போட்டியிடுவது சம்பந்தமாக ஆராயப்படுவதுடன் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் ஆராயப்படவுள்ளதாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியச் செயலாளர் சிபுஸ்பலிங்கம் தெரிவித்தார்.

# அரசியலில்..

(5ம் பக்கத் தொடர்ச்சி....)

பத்தில் வரவேற்றபோதும், பின்னர் குழப்பியடித்தது. உண்மையில் பிக்குகளின் மனமாற்றம் ஓர் ஆறுதலான அறிகுறியாகவே ஆரம்பத்தில் இருந்தது. ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்பன இவ்விடயத்தில் சில முறுகல் நிலமைகளை பரஸ்பரம் எதிர்கொண்ட வண்ணமே உள்ளன. ஆனாலும், பிக்குகளின் அமைப்பு இவ்விடயத்தில் கரிசனத்துடன் கூடிய மன உடன்பாட்டுடன் செயல்பட வேண்டியது அவசியமாகின்றது. சரித்திர ரீதியிலான புரிந்துணர்வின்மையை விட்டுவிட்டு விட்டுக்கொடுக்கும் அரசியலை அரசாங்கம் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கு பௌத்தக் குழுக்களின் அழுத்தம் மேலும் அவசியமாகின்றது.

சிறுபான்மையினருக்கான சாதகமான பல சலுகைகள் பல சந்தர்ப்பங்களிலும் துண்டாடப்பட்டே வந்துள்ளது.

இதன் காரணமாக இலங்கை மக்கள் அனைவரும் காரணகாரியம் இல்லாமல் அவஸ்தைப் படவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்நிலமைகளை அகற்றுவதற்கு பிக்குகளின் அரசியல் அழுத்தம் சாதகமான முறையில் வெளிப்படுத்தப்பட்டு அது இதய சுத்தியுடன் பேணப்பட வேண்டும். சமாதானத் திற்கான அழுத்தம் மேலும் மேலும் பிக்குகளின் அமைப்புக்களினால் கொண்டு செல்லப்பட வேண்டும். இதன் காரணமாக சிறு வரலாற்றுத் திருப்பம் ஏற்படுவதையும் எதிர்பார்க்கலாம். இதற்கு பிக்குகளின் தொடர்ச்சியான அழுத்தம் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பெண்ணினத்தின் பண்பாட்டுக் கலாசாரத்தைப் பாதுகாப்போம்.

## புலிகளின் மட்டு- அம்பாறை மகளிர் பிரிவு துண்டுப்பிரசுரம்

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை அரசியல்துறை மகளிர் பிரிவு தமிழ்ப் பெண்ணினமே என்ற விழிப்புடன் பண்பாட்டு, பாரம்பரிய, சமூக, கலாசார விடயங்கள் நமது பகுதிகளில் அருகியும் அலைக்கழிக்கப்பட்டும் வருவதைக் கண்டித்துத் துண்டுப். பிரசுரம் ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளது.

தமிழ்ப் பெண்ணினத்தின் பண்பாட்டுக் கலாசாரத்தைப் பாதுகாப்போம் என்ற தலைப்பில் அமைந்துள்ள இத்துண்டுப் பிரசுரத்தில்,

தமிழினம் தனக்கே உரித்தான தனியான சமூகக் கட்டுப்பாடுகளையும், பண்பாட்டு கலாசார ஒழுக்கத்தையும் கட்டிக்காத்து பேணி வருகிறது.

தன்னாட்சி இறைமைக்கான போரை இளைஞர்களும், இளம் பெண்களும் நேசித்து விடாமல் தடுக்க அரச இராணுவங்களால் திட்டமிட்டு எமது தமிழ் கலாசாரம் சீரழிவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள்.

பாதுகாப்பு என்னும் போர்வையில் சோதனை நிலையங்களில் அடையாள அட்டைச் சோதனை என அரணினுள் அழைத்துச் சோரம் போகும் பெண்களின் அவல வாழ்வை அறிவீர்களா?

விடுதலைப்போரை விரும்பி விடாமல் தடுக்கச் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைத்துத், தமிழினத்தின் சமூகக் கட்டமைப்பை உடைத்து கலாசார சீரழிவை ஏற்படுத்தி, இளைஞர்களும், இளம் பெண்களும் தவறான பாதையில் செல்ல தளம் அமைத்துத் தரப்பட்டுள்ளதை உணர்வீர்களா? அண்மையில் மட்டக்களப்பு நகரில் பாடசாலை செல்லும் பருவ வயது ஆண்களும் பெண்களும் உல்லாச பொழுது போக்குக்காய் கடற்கரை சென்று மது அருந்தி போதை மயக்கத்தில் தங்கள் வாழ்வை சீரழித்துக் கொண்ட செய்திகள் இன்று சாதாரண நிகழ்வாகிவிட்டது.

தங்கள் அறிவுத் தேடலுக்காய் கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவ மாணவிகளே!

கண்மூடித்தனமான நாகரிக மோகத்தில் அழிந்து போகும் பருவ வயது மாணவர்களே இனி மேலாவது விழித்துக்கொள்ளுங்கள்.

உங்களின் நல்வாழ்வுக்காய், உங்களின் கல்வி அறிவுக்காய் உங்களின் தன்மானத்துக்காய் போராடி, இரத்தம் சிந்தி, உயிர் நீந்துப்போன பல்லாயிரக்கணக்கான மாவீரர்களின் ஒப்பற்ற தியாகத்தினை ஒரு கனம் சிந்தித்துப்பாருங்கள்.

இளம் பெண்களே! தமிழ் பெண்ணின் பண்பாட்டைப் பேணும் உங்களுக்கே உரித்தான உடைகளை உடுத்தி தமிழரின் கலாசாரத்தைப் பேணுங்கள்.

திருமணமான பெண்களும்,பருவ வயதுப் பெண்கள் அணியும் உடைகளை உடுப்பது பொருத்தமாக அமையாது அல்லவா?

மணமான பெண்ணுக்கென்று ஒரு குடும்பப் பாங்கான செயற்பாடு உள்ளதல்லவா?

ஒரு குடும்பப் பெண்ணாய், தமிழன் பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டாய், ஆடைகளை அணியுங்கள்.

கல்வி அறிவை சிதைத்துச் சிந்தனைச் சிதறலை ஏற்படுத்தும் வக்கிர விகாரத்தைப் பிரதிபலிக்கும் சினிமாப் படங்களுக்கெதிராய் போர்க் கொடி தூக்குங்கள்.

பெண்ணினமே உங்களது அறிவுதான் உண்மையான பெண்ணுரிமை பெண் சுதந்திரம், என்பவற்றிற்கு அத்திவாரமாக அமைகிறது. ஆதலால் மண்ணை நேசியுங்கள், மக்களை சிந்தியுங்கள், எதிர்கால வாழ்வை எண்ணுங்கள் என்ன செய்ய வேண்டுமென முடிவெடுங்கள். எனவும் கூறப்பட்டுள்ளது.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு 2500 சிறைக் கைதிகளுக்கு ஜனாதிபதி மன்னிப்பு!

## -பயங்கரவாதத் தடைச் சட்ட கைதிகளுக்கு இல்லை-

(நமது நிருபர்)

ஸ்ரீலங்காவின் 54ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா 2500 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறு குற்றங்கள் புரிந்து, 10,000 ரூபாவரையில் பிணை வழங்கப்பட்டும், பிணை எடுக்க வசதியில்லாத கைதிகள், இரு வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டு, அதில் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்தவர்கள் போன்ற 2500 கைதிகளை அவர் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரிய குற்றச் செயல்களைப் புரிந்தவர்கள், கொலைக் குற்றவாளிகள், பாலியல் வல்லுறவுக் குற்றவாளிகளுக்கும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கும் இந்தப் பொது மன்னிப்பு கிடையாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி, நீண்ட காலமாக விசாரணைகள் மேற்கொள்ளப்படாமலும், சாட்சிகள் மன்றில் முன்வைக்கப்படாமலும் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 500 தமிழ் அரசியல் கைதிகள், தம்மை விடுதலை செய்யுமாறு கோரி, வெள்ளியன்று அடையாள உண்ணாவிரதம் இருந்துள்ள நிலையிலும், ஜனாதிபதி இவர்கள் குறித்து அக்கறை ஏதும் கொள்ளாதது குறித்து தமிழர் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கலை வழி மூலமாக சமாதானத்தை ஏற்படுத்த திருமறைக் கலாமன்றம் முயன்று வருகிறது!

## -கலைப் பொங்கல் விழாவில் அருட்தந்தை மரியசேவியர் அடிகள்-

(அதிரன்)

இன்றைய காலகட்டத்தில் கலை வழி மூலமாக சமாதானத்தை முன்னெடுத்து இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி, சிங்கள தமிழ் கலைஞர்களை ஒன்றிணைக்கும் வகையில் திருமறைக் கலாமன்றம் கலை வழி மூலமான சமாதான முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

இவ்வாறு திருமறைக் கலாமன்ற இயக்குனரும் இணைப்பாளருமான அருட்தந்தை மரிய சேவியர் அடிகள் நேற்று நடைபெற்ற மட்டக்களப்பு திருமறைக் கலாமன்றம் பொங்கல் தினத்தையொட்டி மட்டக்களப்பு தேவநாய கம் மண்டபத்தில் நடாத்திய கலைப் பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

அந்த வகையில் திருமறைக் கலாமன்றத்தின் மட்டக்களப்புக் கிளை குறுகிய காலத்தில் மும்முரமாகச் செயற்பட்டு இப்பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில், மட்டக்களப்புத் திருமறைக் கலாமன்ற ஆலோசகர் அருட்பணி சில்வெஸ்ரர் ஸ்ரீதரன் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

கலை நிகழ்வுகளாக திருமறைக் கலாமன்றத்தினரின் புஷ்பாஞ்சலி நடனம், பெண்கள் பாரம்பரியமற்ற தொழில்களில் ஈடுபடுவது இன்றைய நிலையில் ஏற்புடையதா? இல்லையா? என்ற விவாத மேடை, கும்மி நடனம், வித்தியாசமான முறையில் அமைந்திருந்த பின்னல் கோலாட்டம், முதன் முறையாக திருமறைக் கலாமன்றத்தினரால் மட்டக்களப்பின் கலை வடிவமான சயந்தனின் சபதம் நாட்டுக் கூத்து, இசை நிகழ்ச்சி என்பன இடம் பெற்று நிகழ்வுகள் ஹரிசந்திராவின் நன்றியுரையுடன் நிறைவுபெற்றது.

### தடையை...

யில் இருந்து காந்தி சதுக்கம் வரையும் இப்பேரணி நடைபெறவுள்ளது.

இப்பிரிவுகளில் கலந்து கொள்ள முடியாத வாகரை, வாழைச்சேனை மக்கள் வாழைச்சேனையில் கூடவுள்ளதாகத் தெரிகிறது. பேரணியின் நிறைவில் மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது.

இதேவேளை அம்பாறை மாவட்ட தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு தலைமையில் பெரிய நீலாவணையிலிருந்து காரைதீவு வரையிலும், காரைதீவிலிருந்து அக்கரைப்பற்று வரையிலுமாக இரு கட்டமாக பேரணி நடைபெறவுள்ளது.

# கல்குடா - வாழைச்சேனை வீதியில் பயிற்சியில் ஈடுபடும் படையினர்!

(நிமலன்)

கல்குடாப் படைமுகாமில் பயிற்சி பெறும் படையினர்களுக்கான பயிற்சிகள் கல்குடா வாழைச்சேனை பிரதான வீதியில், நடைபெற்று வருகின்றன.

மேற்படி முகாமில் பயிற்சியில் ஈடுபடும் படையினர், கல்குடா முகாமிலிருந்து வாழைச்சேனை முகாம்வரை ஓட்டப் பயிற்சியில் ஈடுபட்டு மீண்டும் கல்குடாப் படைமுகா[illegible] சென்றடை[illegible]ன்றனர்.

இவ்வாறான பயி[illegible] படையினர் ஈடுபடுவதனை வீதியின் இரு மருங்கிலும் இருக்கு[illegible]துமக்கள் கண்டுகளிப்பதுடன், சமாதானம் வரும் என்று க[illegible]ணும் மக்கள் மத்தியில் சமாதானம் குறித்த சந்தேகங்களையு[illegible]ற்றுவித்துள்ளது.

இதேவேளை கல்குடா, வாழைச்சேனைத் துறைமுகம் ஆகிய இடங்களிலுள்ள படைமுகாம்களில், புதிய காவலரண்கள் அமைத்தல், புதிய கம்பிவேலிகள் அமைத்தல் போன்ற முகாம் பலப்படுத்தல் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரதியமைச்சர் அப்துல் காதரால் பயணிகள் கட்டடம் திறக்கப்படும்!

(ஓட்டமாவடி இஸ்மாயில்)

ஓட்டமாவடி முகிதீன் ஜும்மா பள்ளிவாயலில் அமைந்திருக்கும் வெளியூர் பிரயாணிகள் தங்கும் இரண்டு மாடிக்கட்டடத்தை ஓட்டமாவடி ஜும்மா பள்ளிவாயல் தலைவர் அல்ஹாஜ் ஏ.எல்.ஹனிபா தலைமையில் இன்று அஷல் தொழுகையின் பின் 4.30 மணியளவில் கடற்றொழில் நீரியல் வள பிரதியமைச்சர் மொஹிதீன் அப்துல் காதர் திறந்து வைக்கவுள்ளார்.

திறப்பு விழாவைத் தொடர்ந்து, ஓட்டமாவடி ஜும்மா பள்ளிவாயல் பேஷ் இமாம் அல்ஹாஜ் எச்.எம்.சரிப் ஹுசைன் தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது.

# கிளிநொச்சி மருத்துவமனையை மீளமைக்க 15 கோடி தேவை!

(நமது நிருபர்)

சத்ஜய படை நடவடிக்கைகளால் அழிவுற்ற கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையை மீளக்கட்டியமைக்க 15 கோடி ரூபா தேவையென மாவட்ட வைத்திய அதிகாரி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

1996 இல் கிளிநொச்சி நகரை சிறிலங்கா படையினர் சத்ஜய நடவடிக்கை மூலம் கைப்பற்றியபோது அங்கு இயங்கிய மாவட்ட மருத்துவமனை அழிவுற்றது.

எஞ்சிய சாதனங்களுடன் அக்கராயன் கிராமிய மருத்துவமனையில் இது தற்போது இயங்கி வருகின்றது. மாவட்ட மருத்துவமனைக்கு ஏற்பட்ட அழிவுகளை அதனை மீளக்கட்டியமைக்கத் தேவையான நிதிபற்றிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையை மீளக்கட்டி இயக்க 15 கோடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 2001 டிசம்பரில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவில் 19,534பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். கிளிநொச்சி நகரில் இயங்கும் கட்டடம் ஒன்று மருத்துவமனையில் 5,614 நோயாளர்களும், அக்கராயனில் இயங்கும் மாவட்ட மருத்துவமனையில் 13,920 நோயாளரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

## 41ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் - 03-02-2002

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1954 * 06 * 05 | 2001 * 12 * 25 |



### கணபதிப்பிள்ளை துரைராஜசிங்கம்

நீ ஓடி மறைந்த நாட்கள் நாற்பத்தொன்று
ஆகிவிட்டாலும்
எம்மனதை விட்டு நீ பிரிய வருடம்
நாற்பத்தொன்று போதாது
தாய் கொண்டு வந்த உன்னை நோய்
கூட தொட்டதில்லை
ஆனால் பாதகனின் துப்பாக்கி குண்டுகள் தொட்டு உன்
உயிரோடே விளையாடிவிட்டனவே
நீ எங்களுக்கு தந்தை மட்டுமல்ல
ஒரு தெய்வமும் கூட
அதனால் தான் மேலுள்ள தெய்வத்திற்கு
மண்ணில் ஒரு தெய்வம்
தன்னை போல் உலாவுவது பிடிக்கவில்லை போலும்
கட்டிய மனைவியும் பெற்றெடுத்த பிள்ளைகளும்
தீயிலிட்ட மெழுகினைப் போல் தினம் தினம்
உருகி - உனக்காக
கண்ணீர் வடிக்கின்றனர் அது கூடத் தெரியாமல் - நீ
ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது என்ன நியாயம்
ஒவ்வொரு நாளும் நீ திரும்பி வருவாய்
என்று வாசலை
பார்த்தபடி நிற்கும் எங்களுக்கு மிஞ்சியது ஏமாற்றமும்,
கண்ணீரும் மட்டுமே.

03-02-2002 ஞாயிற்றுக்கிழமை நடை பெறவுள்ள 41ம் நாள் நினைவஞ்சலியில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், உற்றார், உறவினர்கள்

தகவல்: -
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.